409

# தர்ம சக்கரம்

சக்கரம்-4 ஜூ-1966 ஆரம்-1

N55-4.1
158815

# தர்ம சக்கரம்



ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா

ஜய ஹூ — சக்கரம் 4

ஆரம் 1

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

## இயற்றிய நூல்கள்

| | ரூ. அ. |
|---|---|
| **ஸ்ரீமத் பகவத்கீதை** தேவநாகரியில் மூலம்—பதவுரை பொழிப்புரை—விளக்கமான விரிவுரை. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் முன்னுரையுடன் கூடியது. | ... 9 - 0 |
| **கடவுளின் வடிவங்கள்** | ... 2 - 0 |
| ***ஸ்ரீமத் பகவத்கீதை** தேவநாகரியில் மூலமும் தமிழில் பொழிப்புரையும். | ... 1 - 12 |
| **எதிர்கால இந்தியா** | ... 1 - 8 |
| **திருக்கயிலாயகிரி யாத்திரை** | ... 1 - 2 |
| **ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்** | ... 1 - 0 |
| **அறம் வளர்த்த நம்பி** ஸ்ரீராமபிரானுடைய நெறியையும் செயல்களையும் விளங்கவைக்கும் கட்டுரைகள் அடங்கிய நூல். | ... 0 - 15 |
| ***கயிலைமலை யாத்திரை** (மாணவர் பதிப்பு) | ... 0 - 15 |
| **உலகை உய்வித்த உத்தமன்** | ... 0 - 15 |
| **சுவாமி விவேகானந்தர்** வாழ்க்கை வரலாறு. | ... 0 - 14 |
| **தேவரகசியம் முதலிய கதைகள்** வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கும் கதைகள். இவைகளில் சில உண்மையில் நடந்தவைகளாகும். | 0 - 14 |
| **ஸ்ரீராமகிருஷ்ண சரிதம்** | ... 0 - 12 |
| **நன்மக்களைப் பெறுதல்** | ... 0 - 8 |
| **தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம்** | ... 0 - 8 |
| ***ஸ்ரீமத் பகவத்கீதை முன்னுரை** பொழிப்புரையுடன் கூடிய கீதைக்கு முன்னுரையாக அமைந்தது. | ... 0 - 6 |
| ***ஆத்ம சக்தி** பிரம்மசரியத்தைப்பற்றி விவரிக்கும் நூல். | ... 0 - 6 |
| **இராவண தத்துவம்** | ... 0 - 6 |
| **மனிதனது நிஜ சொரூபம்** சுவாமி விவேகானந்தர் கருத்தைத் தழுவியது. | ... 0 - 4 |
| ***சக்தி தத்துவம்** | ... 0 - 4 |
| **ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்** | 0 - 3 |
| ***சூரிய நாராயணன்** | ... 0 - 3 |
| ***சிவதத்துவம்** | ... 0 - 3 |
| **வர்ணாச்சிரம தர்மம்** | ... 0 - 2 |
| ***கணபதி** | ... 0 - 2 |
| ***முருகக் கடவுள்** | ... 0 - 2 |
| ***விஷ்ணு தத்துவம்** | ... 0 - 2 |
| **திருக்குறளில் கடவுள் வாழ்த்து** முதலதிகாரம் பத்து குறள்களுக்கும் விளக்கம். | ... 0 - 2 |
| **அருள் விருந்து** | ... 0 - 2 |
| ***அன்னை சாரதாதேவியார் வரலாறு** | ... 0 - 2 |
| **ஸ்ரீராமகிருஷ்ண துதி** | ... 0 - 1 |

* எல்லா புத்தகங்களையும் வாங்க விரும்புபவர்கள் இக் குறியிட்ட புத்தகங்களை வாங்கத்தேவையில்லை. ஏனென்றால், இவை ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

முன் பணம் அனுப்புவோர்க்குத் தபால் செலவின்றி புத்தகங்கள் அனுப்பப்படும். நான்கு ரூபாய்க்குக் குறைந்த ஆர்டர்களுக்கு புக்போஸ்ட்டில்தான் புத்தகங்கள் அனுப்பப்படும்.

**தபோவனப் பிரசுராலயம்**

**திருப்பராய்த்துறை போஸ்ட், எலமனூர் ஸ்டேஷன்**

**திருச்சி ஜில்லா**


409

# தர்ம சக்கரம்


**மாத சஞ்சிகை**

| சக்கரம் 4 | ஜய வரு௸ தை மீ | ஆரம் 1 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிரார்த்தனை | | 1 |
| 2. | அருள் விருந்து | | 2 |
| 3. | பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் | | 3 |
| 4. | ஆத்மன் | | 6 |
| 5. | மாணுக்கன் | | 15 |
| 6. | மூவர் இராமாயணம் | T. R. ராமநாத சாஸ்திரி, M. A. R. வேங்கடசாமி | 21 |
| 7. | சந்தேகம் தெளிதல் | | 27 |
| 8. | அண்ணலை அடைந்த அடியார்கள் | ஆர். ஆர். | 30 |
| 9. | சென்னை அரசாங்கம் நியமித்துள்ள ஆரம்பக் கல்விக் குழு | | 33 |
| 10. | விவேகானந்த சுவாமிகளின் பூப்பிரதக்ஷிணம் | | 36 |
| 11. | குறிப்புகள் | | 37 |
| 12. | செய்திகள் | | 40 |



STRAR OF BOOKS
OFFICE
JAN 1955


**வருட சந்தா ரூ. 3-8-0 தனிப் பிரதி ரூ. 0-6-0**

வியாபார விளம்பரங்களையும், மதிப்புரைக்கு புத்தகங்களையும் ஏற்பதில்லை.

தர்மசக்கரம் ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதி யன்று வெளி வருகிறது. ஒவ்வொரு சந்தாதாரரின் விலாசமும் சரியாக எழுதப்பெற்றுள்ளதா என்று சரி பார்த்துப் பதிவு செய்துகொண்ட பின்னரே தபாலில் சேர்க்கப்படுகிறது. தமிழ் மாதம் பத்து தேதிக்குள் இதழ் கிடைக்கவில்லையேல் தபால் அதிகாரிகளுக்கு மனுச்செய்துகொள்வதுடன் அதன் நகலை அனுப்பி எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

சந்தாதாரர்கள் தங்கள் தபால்களில் சந்தா நம்பரைக் குறிப்பிடுதல் அவசியம்.

மானேஜர்,
தர்ம சக்கரம்

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில்

# அந்தர்யோகம்

“குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் இடையிடையே மூன்று நாளைக்காவது தங்கள் உலக வியவகாரங்களை யெல்லாம் அடியோடு ஒதுக்கி வைத்துவிட்டு இரவும் பகலும் ஈசுவர சிந்தனையிலேயே காலங் கழிக்கவேண்டும்; அப்படிச் செய்வது அவர்களுக்கு பெரு நன்மையை விளைவிக்கும்” என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்ந்தருளி யுள்ளார். இந்த உபதேசத்தை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதற்கான வசதிகளை அன்பர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது இந்த ஸ்தாபனத்தின் அலுவல்களில் முக்கியமான தொன்றாகும்.

1955 ஹு பிப்ரவரி மாதம் 28ம் தேதி, மார்ச் மாதம் 1, 2 தேதிகள் ஆக இந்த மூன்று தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கைமுறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் பிப்ரவரி மாதம் 27ம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ 1—4—0 வீதம் செலுத்தி, பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்கு தனி இடவசதி உண்டு. பனிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

## வாழ்க்கை முறை

காலை

| | | | | |
|---|---|---|---|---|
| துயில் எழுந்திருத்தல் | 4-30 மணி | | | |
| எல்லோரும் ஒன்றுகூடி நாமஜபம் | 5 மணிமுதல் | | 5-30 மணிவரை | |
| காவேரி ஸ்நானம் முதலியன | 5-30 | ,, | 7-00 | ,, |
| காலை தியானம் | 7-00 | ,, | 7-30 | ,, |
| சிற்றுண்டி | 7-30 | | | |
| காலை உபந்யாசம் | 8-30 | ,, | 9-30 | ,, |
| மௌனம் | 9-30 | ,, | 10-30 | ,, |
| பஜனை | 10-30 | ,, | 11-30 | ,, |
| பூஜை அர்ச்சனை | 11-30 | ,, | 12-00 | ,, |

மாலை

| | | | | |
|---|---|---|---|---|
| போஜனம் ஓய்வு | 12 மணி முதல் | | 2-30 மணிவரை | |
| மாலை உபன்யாசம் | 2-30 | ,, | 3-30 | ,, |
| தனியாக வாசித்தல் | 3-30 | ,, | 4-30 | ,, |
| பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன | 4-30 | ,, | 6-45 | ,, |
| நாம ஜபம் ஆரத்திரிகம் | 6-45 | ,, | 7-00 | ,, |
| தியானம் | 7-00 | ,, | 7-30 | ,, |
| இரவு போஜனம் | 7-30 | | | |
| சத்சம்பாஷணை | 8-30 | ,, | 9-30 | ,, |
| நித்திரை | 10-00 | | | |

உபன்யாசங்கள் :— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். சத்சம்பாஷணையில் தங்கள் சந்தேகங்களை நீக்கிக் கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது

சக்கரம் 4 | ஜய ஹு தை மீ | ஆரம் 1

## பிரார்த்தனை

ओं नमस्ते सते सर्वलोकाश्रयाय
नमस्ते चिते विश्वरूपात्मकाय ।
नमोऽद्वैततत्त्वाय मुक्तिप्रदाय
नमो ब्रह्मणे व्यापिने निर्गुणाय ॥
(महानिर्वाण तन्त्रं)

ஓம் நமஸ்தே ஸதே ஸர்வலோகாச்ரயாய
நமஸ்தே சிதே விச்வரூபாத்மகாய
நமோऽத்வைததத்வாய முக்திப்ரதாய
நமோ ப்ரஹ்மணே வ்யாபினே நிர்குணாய

ஓம் மெய்ப்பொருளும் உலகனைத்துக்கும் இருப்பிடமுமாகிய உனக்கு வணக்கம்; அகிலமெல்லாம் வியாபித்துள்ள அறிவுப் பொருளே உன்னைப் போற்றுகிறேன்; அத்வைத தத்துவமாயும் முக்தியளிப்பதாயும் உள்ள பொருளே உன்னை நமஸ்கரிக்கிறேன்; எங்கும் நிறைந்துள்ள நிர்குண பிரம்மமே உன்னை ஏத்துகிறேன்.

---

பொருளாகக் கண்டபொரு ளெவைக்கும்முதற் பொருளாகிப் போத மாகித்
தெருளாகிக் கருதும்அன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தே னாகி
அருளானோர்க் ககம்புறமென் றுன்னாத பூரணஆ னந்த மாகி
இருள்தீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்.
(தாயுமானவர்)

158815

# அருள் விருந்து

[illegible] விரும்புகிறவன் தினமும் தன் மனதைத் தூயதாக்குகிறான். உண்மையையும் அதன் ஆதிக்கத்தையும் தினமும் எண்ணிப்பார்.

சுயநலம் அகலுமிடத்து ஆனந்தம் தோன்றுகிறது. முடிவில்லாத ஆனந்தமடைவதே வீடுபேறு.

துயரம் பொறுமையை அழிக்கிறது, துயரம் அறிவை அழிக்கிறது, துயரம் அனைத்தையும் அழிக்கிறது, துயரத்துக்குச் சமமான சத்துரு இல்லை.

உண்மையை நாடுகிறவன் மௌனமாயிருந்து பழகவேண்டும். மிக மேலான சாதனங்களுள் ஒன்று மௌனம்.

அக்ஞானத்தில் இருப்பவர் உலகைப் பொல்லாதது என்கின்றனர். உலகம் முழுதும் உனக்கு உகந்தது என்பதை அறிந்துகொள்.

பதவியைநாடி அலைந்து திரியாதே. அமைதியுற்றிரு. உன்னை நாடிப் பதவி தானே வரும்.

சிதறடைந்துபோன கடுகைச் சேகரிப்பது சுலபமானதன்று. சிதறடைந்து போன மனதும் அத்தகையது. உலக விஷயங்களில் சிதறடைந்து போக மனதை விடலாகாது.

காற்றுக்கு எதிரே வீசிய தூசிகள் தன் கண்ணிலேயே வந்து படிகின்றன. சான்றோர்மீது செலுத்திய துன்பங்கள் அவைகளைச் செலுத்திய வனையே அதிவேகமாக வந்து தாக்குகின்றன.

செருக்கையும் பொறாமையையும் ஒழித்துவிடு. பிறருடன் ஒத்திருந்து பொது நன்மைக்கு உழைக்கக் கற்றுக்கொள். நம் நாட்டுக்கு இத்தகைய தொண்டர் தேவை.

உலகில் எதையும் உன்னுடையது என்று தனி உரிமை பாராட்டாதே. தனி உரிமை பாராட்டும் பொழுதெல்லாம் இயற்கையின்கண் நீ மொத்துண்கின்றாய். உரிமையை ஒழித்துவிடும்படி இயற்கையானது அடிமேல் அடி அடித்துப் பாடம் புகட்டுகிறது.

---

பரமஹம்ஸர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

## அருளின் விளைவு

தக்ஷிணேசுவர ஆலயத்தில் பரமஹம்ஸரும், பக்தர்களும் அவர் வசித்துவந்த அறையில் அமர்ந்திருந்தார்கள். கடவுள் சிந்தனையின் விளைவு யாது என்பதைப் பற்றிய கேள்வி எழுந்தது. கடவுளைப்பற்றி மிகைபட எண்ணினால் ஒருவனுக்கு மதிமயக்கம் வந்துவிடுகிறது என்னும் கருத்து சிலர்க் கிடையில் இருந்தது. அதைப் பரமஹம்ஸர் தெளிவுபடுத்தினார்: "அக்கினிக்குள் இருப்பது தணுப்பான பொருள் ஆக இருக்க முடியாது. கடவுள் பேர் அறிவு சொரூபி. கடவுளைச் சதா சிந்தித்துக் கொண்டிருப்பவன் அறிவை இழந்து விடுகின்றான் என்பது எங்ஙனம் பொருந்தும்? கடவுள் சிந்தனையில் ஊறியிருக்குமளவு பக்தன் கடவுள் மயமாக மாறிவிடுகிறான்.

"அப்படிக் கடவுளைப் பற்றிச் சிந்திப்பதற்கும், சிந்திப்பதின் விளைவாக கடவுள்மயமாக மாறி அமைவதைத் தெரிந்து கொள்வதற்கும் கடவுள் கிருபை வேண்டும். அவர் அருளால் அவரை நாம் வணங்குகிறோம்; அவர் அருளால் அவரை நாம் அறிந்துகொள்கிறோம். அவருடைய அருளுக்குப் பாத்திரமாகும் பரியந்தம் மனதில் சந்தேகங்கள் கிளம்பிக்கொண்டே இருக்கும். இந்தச் சந்தேகங்களுக்கு ஒரு முடிவே கிடையாது. அருளைப் பெறுகின்ற பக்தனுக்கே சந்தேகம் நீங்கப் பெறுகிறது.

"கிருபையின் விளைவாக சந்தேகங்கள் அகலுவது ஒன்று மட்டுமல்ல. பயமனைத்தும் சாதகனுடைய உள்ளத்தினின்று அகன்று விடுகிறது. அருளைப் பெற்றவன் எதற்கும் அஞ்சுவதில்லை. குழந்தை ஒன்று தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்து செல்கிறது. எப்பொழுது அது தன் பிடியை விடுகின்றதோ அப்பொழுது அது கீழே விழுந்து விடுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கிறது. ஆனால் தந்தையே குழந்தையின் கையைப்பிடித்து அழைத்துச் செல்வானாகில், அல்லது குழந்தையை எடுத்துத் தன் கரத்தில் வைத்துக் கொள்வானாகில் விழுவதைப்பற்றிய அச்சம் குழந்தையின் உள்ளத்தில் எழ இடமில்லை. தந்தையின் கரத்தில் குழந்தை இருப்பதற்கு ஒப்பாகும் பக்தன் ஒருவன் கடவுளின் அருளைப் பெற்றநிலை.

"அருளின் விளைவாக வரும் மூன்றாவது வாய்ப்பு ஒன்று உண்டு. மண்ணுலகில் பிறந்திருப்பவர்களுக்குத் துன்பங்கள். ஓயாது வந்து கொண்டிருக்கின்றன. துக்கத்தை அனுபவியாத ஜீவர்களை உலகில் காணமுடியாது. ஆனால் எப்பொழுது பக்தன் ஒருவனுக்கு பகவானுடைய கிருபை உண்டாகிறதோ அப்பொழுதே அவனுடைய அல்லல்களெல்லாம் அகன்றுபோய் விடுகின்றன. அதன் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் அவன் துன்பப்படுவது கிடையாது. இத்தகைய அருள் எப்பொழுது பக்தன்மீது சொரியப்படுகிறது என்பது கேள்வி. ஆர்வத்துடன் அதை நாடினாலொழிய இறைவனிடமிருந்து அவன் அதைப் பெறமுடியாது. அருள் பெற வேண்டுமென்று தாகம் எடுத்தவனாக அவன் ஆழ்ந்து தெய்வத்தை வணங்கிய பிறகே அவனுடைய அருள் அவனுக்குக் கிடைக்கின்றது. குழந்தை ஒன்று தன் தாயைக் காணவில்லையே என்று இங்குமங்கும் அலைந்து திரிகிறது. வேண்டுமென்றே தாய் ஓர் இடத்தில் மறைந்திருக்கின்றாள் என்று வைத்துக் கொள்வோம். பரிதாபத்துடன் குழந்தை தாயைத்தேடி அலைந்து திரியுமாயின் அக்காட்சியைப் பார்த்துக்கொண்டு தாய் வெறுமனே இருக்கமுடியாது. மறைந்திருக்கும் இடத்திலிருந்து விரைவில் குழந்

தையின் முன்னிலைக்கு அவள் ஓடிவருவாள். தாயினும் சாலப்பரிந்து பக்தர்களைப் பராமரிப்பது கடவுளின் இயல்பு. பேர் ஆர்வத்துடன், பேரன்புடன் அழைக்கின்றவர்களிடம் அவர் விரைவில் வருகிறார். அத்தகைய பக்தனுக்கு அவருடைய அருளும் கிட்டிவிடுகிறது."

**மறைத்தலின் மகிமை**

இப்படிப் பரமஹம்ஸர் பகர்ந்துகொண்டிருந்தபொழுது மஹேந்திரருடைய உள்ளத்தில் ஐயம் ஒன்று உதித்தது. "கடவுள் தம்மை எதற்காக மறைத்து வைத்துக்கொள்ளவேண்டும்? அடியார்க்கு எளியவனாக அவர் தமது காட்சியை சந்ததமும் கொடுத்துக் கொண்டிருக்கலாமே" என்று அவர் எண்ணினார்.

இப்படி அவர் எண்ணியதும் பரமஹம்ஸரிடமிருந்து அவருடைய ஐயத்துக்கு விடை வந்தது: "கடவுளை நாடி பக்தன் சிறிது அலைந்து திரியவேண்டும் என்பதுதான் ஈசனுடைய நியமனம். அப்படி நாம் சிறிது அலைந்து திரியாவிட்டால் அதில் சுவை ஒன்றுமில்லை. எதை வருந்திப்பெறுகின்றோமோ அது நமக்கு இனியதாகிறது. எதை நாம் எளிதில் பெற்றுவிடுகின்றோமோ அது மதிப்பற்றதாகப் போய்விடுகின்றது. இப் பிரபஞ்சத்தின் அமைப்பில் ஆத்ம சாதகன் ஒருவன் கடவுளை நாடி அலைந்து திரிய வேண்டுமென்கின்ற ஏற்பாடு அமைந்திருக்கிறது. நாம் அதை அங்கீகரித்தாக வேண்டும். இப் பிரபஞ்சத்தையும், அதிலுள்ள விதவிதமான நியமனங்களையும் கடவுள் அற்புதமாக அமைத்திருக்கின்றார். இதை அவருடைய திருவிளையாடல் என்று சொல்லவேண்டும். இந்த விளையாட்டுக்கு முடிவும் கிடையாது. இந்த விளையாட்டின் ஒருபகுதி உயிர்களை மோகமடையச்செய்தல் என்பதாம். உயிர்களை மோகமடையச் செய்யாவிட்டால் உலக நடைமுறையே சுவையற்றதாய்ப் போய்விடும். ஜகன்மோஹினி என்று அன்னை பராசக்தி அழைக்கப்படுகின்றாள். உயிர்களெல்லாம் கடவுளின் உண்மை சொரூபத்தை அறிந்துகொள்ளாதிருக்கின்றார்கள். அத்தகைய அறியாமையே இந்த உலகநடைமுறை என்னும் விளையாட்டுக்கு சோபை தந்துகொண்டிருக்கிறது. மயக்கம் அல்லது மோஹம் என்னும் வலையில் நம்மைக் கட்டிவைத்திருப்பவள் அன்னை பராசக்தி. அந்த மோஹத்திலிருந்து நம்மைவிடுவிப்பவளும் அதே அருள் அன்னை. நாம் ஜகன்மாதாவிடம் சரண் புகுந்து அவளால் ஆதரிக்கப்பெறவேண்டும் என்று பரிந்து பிரார்த்தனை செய்யவேண்டும். அப்படிப் பிரார்த்தனை பண்ணுமிடத்து அவள் அருளால் மோஹவலை அகன்று போய்விடுகின்றது. எல்லாம் அன்னையின் சொரூபம் என்னும் அனுபூதி அதன்பிறகு நமக்கு உண்டாகிறது."

**சக்தியின் அனுக்கிரகம்**

பரமஹம்ஸர் மேலும் பகர்வாராயினர்: "பிரம்மமும் மாயையும் ஒன்றே. வேறு ஒரு பாங்கில் சொல்லுமிடத்து சிவமும் சக்தியும் ஒன்றே. சிவம் அல்லது பிரம்மத்தை அறிய விரும்புகிறவர்கள் சக்தியின் அனுக்கிரகத்தைப்பெறவேண்டும். சக்தியின் அனுக்கிரகத்தாலன்றி கடவுளை அறிந்துகொள்ள நம்மால் இயலாது. உலகமுழுதையும் மோஹம் என்னும் மயக்கத்திலே பராசக்தி மறைத்து வைத்திருக்கின்றாள். உயிர்கள் எல்லாம் மோஹத்தில் மயங்கிக் கிடப்பதாலேயே உலக நடைமுறை என்னும் விளையாட்டு நிகழ்ந்து வருகின்றது. அன்னையினிடம் பரிந்து பிரார்த்தனைசெய்ய வேண்டும். 'ஜகன்மோகினியாகிய தாயே! இந்த பிரபஞ்ச சொரூபமாகக் காட்சிகொடுத்துக்கொண்டிருக்கின்ற நீ உன்னுடைய உண்மையான சொரூபத்தை எனக்குக்காட்டியருளவேண்டும்.' இந்தப் பாங்கில் சக்தி உபாசனை செய்தால்தான் சக்தியினுடைய அனுக்கிரகத்தை நாம் பெறமுடியும். ஒரு வீட்டினுடைய வெளிப்பகுதிகளையே நாம் கண்டுகொண்டிருக்கின்றோம். வீட்டுக்குத்



தலைவியாய் இருப்பவள் தாய். இந்தப் பிரபஞ்சம் என்னும் வீட்டின் புறத்தோற்றங்களைத்தான் இப்பொழுது நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். தாயினிடம் வினயத்தோடு வேண்டிக்கொண்டால் வீட்டின் உட்பகுதியில் செல்லுதற்கு அவள் அனுமதி கொடுக்கின்றாள். உள்ளே சென்று பார்த்தால் அகண்ட சச்சிதானந்தம் இருப்பதைக் காண்போம். அந்த அகண்ட சச்சிதானந்தத்தின் வெறும் தோற்றங்களாக இவ்வுலகிலுள்ள பொருள்களெல்லாம் அமைந்திருக்கின்றன. உள்ளேசென்று சச்சிதானந்தத்தை உணர்ந்தால் அந்த ஒரு பொருளே பிரம்மமாகவும் மாயையாகவும் இருக்கிறதென்றும், அல்லது சிவமாகவும் சக்தியாகவும் இருக்கிறதென்றும் நாம் தெரிந்துகொள்ளமுடியும். அந்த ஞானத்தைப் பெறுதற்கு அன்னையினிடம் சரண்புகுவதைத்தவிர நமக்கு வேறு வழியில்லை.

"தங்களுடைய மயக்கங்களை மாற்றி அமைக்கவேண்டுமென்று நான்முகக் கடவுளாகிய பிரம்மதேவன் முதலாயினோர் அம்பிகையினிடத்துப் பிரார்த்தனை செய்தார்கள். பிறகு அம்பிகையின் அருளால் பிரம்மதேவன் முதலாயினோர்க்கு மது, கைடபன் என்கின்ற அரக்கர்களை அழிக்க இயன்றது. மனத்தகத்து இருக்கும் மயக்கமும், அக்ஞானமும் இத்தகைய அசுரர்கள் என வடிவெடுத்திருக்கின்றன. அக்ஞானமே வடிவெடுத்துள்ள அசுரர்களை அகற்றுதற்கு அம்பிகையின் அனுக்கிரகம் உற்றதுணை.

**சக்தியின் இரண்டு அம்சங்கள்**

"அன்னை பராசக்தியே அனைத்துக்கும் மூலகாரணமாகின்றாள். ஆதலால் அவளுக்கு மூலப்பிரகிருதி என்று பெயர். அவளிடத்திருந்தே அனைத்தும் தோன்றிவந்திருக்கின்றன. இந்த மாயா சக்தியிடம் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. வித்தியாமாயை என்பது ஓர் அம்சம். அவித்யா மாயை என்பது மற்றொரு அம்சம். உலகில் உள்ளவர்களில் பெரும்பாலோர் அவித்தியாமாயையின் வசப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அவித்யா மாயையில் கட்டுண்டிருப்பவர்களுக்கு காமமும் பொருளாசையும் பெருமிதமாக உண்டாகின்றன. இந்த ஆசைக்கு வசப்பட்டே அவர்கள் பிறவிகள் பல எடுக்கின்றனர். ஆசைகளை நிறைவேற்றிவைப்பதற்கே அவர்கள் ஓயாது உழன்றுகொண்டிருக்கின்றனர். ஓர் ஆசை நிறைவேறப் பெறுதற்கு முன்பு மற்றோர் ஆசை உருவெடுத்து விடுகிறது. கடலில் அலைகள் வந்துகொண்டிருப்பது போன்று எண்ணிறந்த ஆசைகள் மனதில் உதித்துக்கொண்டே இருக்கின்றன. இந்த அவித்தியா மாயையை அகற்றுதற்கு வித்தியாமாயையினுடைய உதவி வேண்டும். பக்தி, வைராக்கியம், விவேகம், தயை முதலியன வித்தியா மாயையினுடைய வடிவங்கள் ஆகின்றன. அம்பிகையின் அனுக்கிரகத்தைப்பெற விரும்புகின்றவர்கள் அவித்தியா சொரூபமாக இருக்கின்ற அவளை முதலில் போற்றவேண்டும். 'காம சொரூபமாக இருக்கின்ற தாயே, என் மனத்தகத்து நல்ல காமங்கள் உண்டாகட்டும். பற்றுதல் சொரூபமாக இருக்கின்ற தாயே, என்மனத்தகத்து நல்லவைகளிடத்துப் பற்றுதல் உண்டாகுக. துக்க சொரூபமாக இருக்கின்ற தாயே, உன்னுடைய அருளுக்கு நான் இன்னும் பாத்திரமாகவில்லையே என்னும் துக்கம் உண்டாகட்டும். நித்திரை சொரூபமாக இருக்கின்ற தாயே, உலகப் பொருள்களிடத்துப் பற்றுவைக்காத நித்திரை நிலை எனக்கு வந்துவிடட்டும்.' இப்படியெல்லாம் அவித்தியா சொரூபமாக இருக்கின்ற அன்னையையே பிரார்த்திக்கவேண்டும். அப்படிச் செய்வதால் நம்முடைய கீழான இயல்புகளே மேலான இயல்புகளாக மாறிவிடுகின்றன. அதன் பிறகு பக்தியும் ஞானமும் வடிவெடுப்பது மிக எளிதாய் விடுகிறது."

**1955 ௵ ஜனவரி ௴ 15ம் தேதி விவேகானந்த சுவாமிகளின் ஜன்ம தினம்**

# ஆத்மன்

(விவேகானந்த சுவாமிகளின் கருத்தைத் தழுவியது)

[ சக்கரம் 3 — 454ம் பக்கத் தொடர்ச்சி ]

துவைதமதத்துக்கு அடுத்தபடியில் வருகிறது விசிஷ்டாத்வைதம். வேதாந்த தர்சனத்தின் மேலாம் கோட்பாடுகள் இதில் உரு எடுக்கின்றன. காரியம் காரணத்துக்கு அன்னியமானதன்று என்பது வேதாந்தத்தின் கோட்பாடு. காரணம் புதியதோர் தோற்றத்தில் தென்படுங்கால் அதற்குக் காரியம் என்னும் பெயர் வருகிறது. மோதிரம் என்பது காரியம்; தங்கம் அதற்குக் காரணமாகிறது. பழைய தங்கம் புதிய தோற்றத்தில் தென்படுமிடத்து அப்புதிய தோற்றத்துக்குக் காரியம் என்று பெயர். காரியமாகிய மோதிரமும், காரணமாகிய தங்கமும் ஒன்றே. அதே பாங்கில் பிரபஞ்சம் என்பது கடவுளிடத்திருந்து வந்துள்ளது. பிரபஞ்சம் காரியம்; கடவுள் காரணம். காரணமாகிய கடவுளும் காரியமாகிய பிரபஞ்சமும் ஒன்றே. கடவுள் வேறு பிரபஞ்சம் வேறு என்று கருதலாகாது. மோதிரத்துக்குத் தங்கம் உபாதான காரணம்; தட்டான் நிமித்த காரணம். பிரபஞ்சத்துக்கோ கடவுள் உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கிறார். சிருஷ்டி கர்த்தாவாக இருப்பவர் கடவுள்; சிருஷ்டிக்கப்பெற்ற பிரபஞ்சமாக இருப்பவர் கடவுள். இங்கு சிருஷ்டி என்னும் சொல்லைக் குறித்து நாம் சிறிது ஆராய்ச்சி செய்யவேண்டும். புறமதஸ்தர்கள் சிலர் சிருஷ்டி என்பதற்கு ஒரு விதமான பொருள்கொடுக்கின்றனர். வெறும் சூன்யத்திலிருந்து உலகத்தைக் கடவுள் உண்டுபண்ணினார் என்பது அவர்கள் கொடுக்கும்விளக்கமாகும். இந்தவிளக்கத்தை வேதாந்தம் அங்கீகரிப்பதில்லை. வேதாந்த தர்சனத்தை பிரமாணமாகக் கொண்டுள்ள சமயங்களும் இக்கொள்கையை ஆதரிப்பதில்லை. தோன்றாத நிலையிலிருந்து தோற்றத்துக்கு வந்துள்ள நிலை என்பதே சிருஷ்டி என்னும் சொல்லுக்குப் பொருள் ஆகிறது. ஏற்கனவே இருக்கிற பொருள் உருமாறி அமைகிறது. பூஜ்யத்திலிருந்து எண்ணிக்கை வரமுடியாது. சூன்யத்திலிருந்து உலகம் என்னும் பொருள் வரமுடியாது. தோன்றா நிலையில் இருக்கும் கடவுளே நாமரூபங்களோடு கூடிய தோற்றம் என்கின்ற நிலைக்கு வருகிறார். கடவுள் என்னும் வஸ்துவிலிருந்து பிரபஞ்சம் என்னும் நாமரூபங்கள் உரு எடுத்திருக்கின்றன.

यथोर्णनाभिः सृजते गृह्णते च
यथा पृथिव्यामोषधयः सम्भवन्ति ।
यथा सतः पुरुषात् केशलोमानि
तथाक्षरात् सम्भवतीह विश्वम् ॥

"சிலந்திப்பூச்சி தன் உடலிலிருந்து நூலை வெளிப்படுத்தவும், கரக்கவும் செய்வது போன்றும், பூமியினின்று செடிகள் முளைத்து வருவது போன்றும், மனிதனுடைய தலையிலும் தேகத்திலும் சிரமமின்றி ரோமம் முளைப்பது போன்றும் அழிவற்ற பரம்பொருளிடத்திருந்து பிரபஞ்சம் தோன்றி வருகிறது." இயற்கையைப்பற்றி இங்ஙனம் வேதங்கள் பகருகின்றன.

இங்கு கேள்வி ஒன்று எழுகிறது. காரண காரியத்தின் கோட்பாட்டை அங்கீகரித்துக் கொள்ளலாம். அதாவது காரணப் பொருள் புதிய தோற்றத்தில் தென்படும் பொழுது அது காரியப் பொருள் ஆகிறது. ஆனால் இக்கோட்பாடு கடவுளுக்கு எப்படிப் பொருந்தும் என்பதுதான் கேள்வி. கடவுள் என்னும் காரணப் பொருள் பேரறிவே வடிவெடுத்தவர். சித் சொரூபமாகிய அவர் தம் நிலையை விட்டு ஒருபொழுதும் மாறிப் போய் விடுவதில்லை. அத்தகையவர் காரணப் பொருள் எனப்படுகின்றார். இனிக் காரியப் பொருள் ஆகிய இப்பிரபஞ்சமோ ஜடவஸ்து. அதனிடத்து அறிவு இல்லை. அறிவுப் பொருளாகிய கடவுள் அறிவில்லாப் பொருளாகிய பிரபஞ்சம் ஆனார் என்று பகர்வது எங்ஙனம் பொருந்தும்? காரணப் பொருள் தூயது, காரியப் பொருள் மலினமடைந்தது. காரணமாகிய தூய கடவுள் காரியமாகிய மலினப்பட்ட பிரபஞ்சம் ஆனார் என்று பகர்வது யுக்திக்கு எங்ஙனம் பொருந்தும்? இந்தக் கேள்விக்கு விசிஷ்டாத்வைதம் என்ன விடை அளிக்கிறது? விசிஷ்டாத்வைதம் ஒரு விசேஷமான கோட்பாட்டை ஈண்டு நிலைநாட்டுகிறது. பரம்பொருள், ஜகத், ஜீவன் ஆகிய மூன்று நித்திய வஸ்துக்கள் இருக்கின்றன என்று விசிஷ்டாத்வைதம் பகர்கிறது. பிரபஞ்சம் என்கின்ற ஜகத்தும், உயிர்கள் என்னும் ஜீவாத்மாக்களும் சேர்ந்து பரம்பொருளாகிய கடவுளுக்கு சரீரம் ஆகின்றன. ஜீவாத்மாவுக்கு சரீரம் ஒன்று இருக்கிறது, ஆத்மா ஒன்று இருக்கிறது. இந்த இரண்டும் ஒன்று சேர்ந்தே ஜீவன் ஆகிறது. அதே பாங்கில் பிரபஞ்சம் முழுதும், அதிலுள்ள ஜீவர்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து புருஷோத்தமனாகிய கடவுளுக்கு சரீரம் ஆகின்றன. புருஷர்கள் அனைவருக்கும் தலைவனாகப் பரம்பொருள் இருப்பதால் அவருக்குப் புருஷோத்தமன் என்னும் பெயர் வந்துள்ளது. ஆக, இப் பிரபஞ்சத்துக்கு உபாதான காரணமாக இருப்பவர் பரம்பொருளாகிய கடவுள். அவருடைய சரீரத்தில் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஜீவாத்மனுக்கு தேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரவும் போகவும் செய்கின்றன. அதை முன்னிட்டு ஜீவாத்ம சொரூபம் எந்தவிதமான மாறுதலையும் அடைந்து விடுவதில்லை. இதே கோட்பாடு கடவுளுக்கும் பொருந்துகிறது. அகிலாண்டம் முழுதும் கடவுளுடைய தேகம். நம்முடைய தேகத்தை நம் சொரூபமாக நாம் கருதுவதுபோன்று கடவுளுடைய விராட் சரீரத்தை அவர் சொரூபமாகக் கருதுகிறோம். அவருடைய மேனியும் அவரும் ஒன்றே. அவருடைய மேனி ஆகிய பிரபஞ்சத்தில் மாறுதல்கள் நிகழ்கின்றன. அத்தகைய மாறுதல்களில் அவருடைய சொரூபம் மாறுபாடு அடைவதில்லை. தமது சரீரம் என்கின்ற வஸ்துவைக்கொண்டு அவர் இப்பிரபஞ்சம் என்னும் காரியத்தை சிருஷ்டிக்கின்றார். கல்பாந்தரத்தில் அவருடைய உடல் சூக்ஷ்மநிலையை அடைந்து தோற்றத்துக்கு அப்பால் போய்விடுகிறது. பிரபஞ்சத்துக்கு அது பிரளயம். அடுத்த சிருஷ்டியில் திரும்பவும் அது ஸ்தூலமான தோற்றத்துக்கு வருகிறது. எண்ணிறந்த அண்டங்கள் அப்பொழுது உருஎடுக்கின்றன. ஆக அண்டங்கள் அனைத்தையும் ஆக்குவதும், நிலைபெறச் செய்வதும், துடைத்து ஒடுக்குவதும் அவருடைய முடிவில்லாத விளையாட்டாய் இருக்கிறது.

துவைதமதம் விசிஷ்டாத்வைத மதம் ஆகிய இரண்டும் ஜீவாத்மனைப்பற்றி ஒரே கொள்கையைக் கொண்டிருக்கின்றன. அதாவது ஜீவாத்மனுடைய யதார்த்த நிலை பரிசுத்தமானது. ஆனால் தன் வினையின் விளைவாக அது தன்னை மலினப்பட்டது ஆக்கிக் கொள்கிறது. இக் கோட்பாட்டை துவைதமதம் விளக்குவதைவிட இன்னும் தெளிவுபட்ட பாங்கில் விசிஷ்டாத்வைதம் விளக்குகிறது. ஜீவாத்மனுடைய பரிசுத்த நிலையும், பரிபூரணநிலையும் வினையின்விளைவாக சங்கோசமடைந்து விடுகிறது. சுருங்கிப் போய்விடுகிறது என்பது அதன் பொருள். நல்வினையின் மூலமாகத் திரும்பவும் தனது பரிசுத்த நிலையும், பரிபூரண நிலையும் விரிவு அடையும்படி அந்த ஜீவாத்மன் முயன்று கொண்டிருக்கிறது. இங்ஙனம் ஜீவாத்மன் தூய நிலைக்குப் போகுமளவு தன்னிடத்துள்ள அறிவைத் திரும்பவும் அது தோற்றத்துக்குக் கொண்டுவருகிறது. அப்பொழுது தூய்மையும், ஆற்றலும் அதற்கு அதிகரிக்கிறது. ஜீவாத்மாக்களுக்கு எண்ணிறந்த கல்யாண குணங்கள் இருக்கின்றன. சர்வேசுவரனிடத்திருக்கின்ற இரண்டு விசேஷமான குணங்கள் மட்டும்

இந்த ஜீவாத்மாக்களுக்குக் கிடையாது. சர்வ சக்திமான் என்றும், சர்வக்ஞன் என்றும் சர்வேசுவரனைப்பற்றிப் பகரலாம். பரிபூரண நிலைக்கு வந்துவிட்ட பிறகும் ஜீவாத்மாக்களுக்கு சர்வசக்தியும், சர்வக்ஞத்வமும் உண்டாவதில்லை. செய்கின்ற தீவினை ஒவ்வொன்றும் ஜீவாத்மனுடைய பேரியல்பை சங்கோசப்படுத்துகிறது; சுருங்கிவிடும்படிச் செய்கிறது. ஜீவாத்மாக்கள் செய்கின்ற நல்வினை ஒவ்வொன்றும் ஜீவாத்மாக்களை விரிவடையச் செய்கின்றது. இந்த ஜீவாத்மாக்கள் அனைத்தும் பரமாத்மாவினுடைய அங்கங்கள் ஆகின்றன.

तदेतत् सत्यं यथा सुदीप्तात् पावकाद्
विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः ।
तथाक्षराद् विविधाः सोम्य भावाः
प्रजायन्ते तत्र चैवापि यन्ति ॥

“ஜ்வலிக்கின்ற தீயினின்று அதே இயல்புடைய எண்ணிறந்த பொறிகள் பறந்து போவது போன்று பரமபுருஷனிடத்திருந்து எண்ணிறந்த ஜீவர்கள் தோற்றத்துக்குவந்து திரும்பவும் அப் பரம்பொருளிடத்தே ஒடுங்குகின்றன. அன்பா, மெய்ப்பொருளைப் பற்றிய உண்மை இதுவே.” எல்லா ஜீவர்களுக்கும் குறி ஒன்றே. கடவுளுக்கும், தங்களுக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளுதலே அக்குறி ஆகும். விசிஷ்டாத்வைத மதத்தின் படி பரம்பொருள் சகுணபிரம்மம் அல்லது ஈசுவரன் ஆகின்றார். அனந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக அவர் இருக்கிறார். அண்டத்திலுள்ள அனைத்திலும் அந்தர்யாமியாக அவர் வியாபித்திருக்கிறார். எங்கும் நிறை பொருளாய், எல்லா வஸ்துக்களிலும் அவர் ஊடுருவி இருக்கின்றார். கடவுளே உலகனைத்தும் ஆயிருக்கிறார் என்பதனுடைய பொருள் உலகனைத்திலும் கடவுளே அந்தர்யாமியாக வியாபித்திருக்கிறார் என்பதாம். கடவுள் இந்த சுவர் ஆய்விடவில்லை; ஆனால் இந்த சுவரினுள் அந்தர்யாமியாய் அவர் இருக்கிறார். அண்டமெங்கும், ஒவ்வோர் அணுவிலும் அவரே வீற்றிருக்கின்றார். ஜீவாத்மாக்கள் எல்லையில் அடங்கிய பொருள்கள். எங்கும் வியாபித்திருத்தல் என்பது ஜீவாத்மாக்களுக்கு இல்லை. ஜீவாத்மாக்கள் பரிபூரண நிலையில் விரிவடையுங்கால் அவர்களுக்கு ஜனன மரணம் இல்லை, முக்தியடைந்து விடுகின்றனர். கடவுளின் சந்நிதியில் நித்திய சித்தர்களாய் அவர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

இனி அத்வைதமதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம். தர்சனங்களுள் இது முடிவானது. நுண்பொருள் அடங்கப் பெற்றது என்று அத்வைத வேதாந்த தர்சனத்தைப் பற்றிப் பகரலாம். மதக் கோட்பாடுகளைத் தோற்றுவித்துள்ள நாடுகள் பல உலகிலிருக்கின்றன. வெவ்வேறு காலங்களில் மதத்தைப் பற்றிய மேலாம் கருத்துக்கள் உரு எடுத்திருக்கின்றன. இவைகள் அனைத்திலும் உச்சநிலையைப் பெற்றுள்ளது அத்வைத வேதாந்தம். முனிவர்களுடைய கருத்து எத்தகைய மேலாம் நிலைக்குப் போகக்கூடும் என்பதற்கு இதுவே சான்று ஆகும். கடப்பதற்கரிய பிரபஞ்சத்தை யெல்லாம் கடந்து அதற்கு அப்பாலும் அத்வைத வேதாந்த மதம் செல்லுகிறது. மெய்ப்பொருள் ஒன்று; இரண்டுக்கு ஆங்கு இடமில்லை என்பது இதன் கோட்பாடு. இந்த தர்சனத்தைப் பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ள முடியாது. மனபரிபாகம்அடைந்தவர்களுக்கு மட்டும் இது சிறிது விளங்கும். மகோன்னத நிலையிலுள்ள நுண்ணிய கருத்து இதில் அடங்கியிருக்கிறது. ஆதலால் இதை அறிந்து கொள்ளுதற்கு அலாதியான மனபரிபாகம் உண்டாகவேண்டும். புண்ணிய பூமியாகிய இந்தியாவில் இந்த அத்வைத வேதாந்தம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உரு எடுத்திருக்கிறது. அப்படி இருந்தும் அது பிறந்துள்ள இந்த நாட்டிலேயே பொதுமக்களுக்கிடையில் அதன் கோட்பாடுகள் இன்னும் பரவவில்லை. மிக மிக நுண்ணிய பொருள்களை எடை போடுதற்கு நுண்ணிய நிறைகோல் (Sensitive Balance) வேண்டும்.



அதே பாங்கில் நெறியான வாழ்க்கையின் மூலம் மனபரிபாகம் அடைந்திருப்பவர்களுக்கே அத்வைத வேதாந்தம் விளங்கும். ஆனால் நம்மில் பெரும்பாலருடைய நிலைமை எத்தகையது என்பதைச் சிறிது அலசிப் பார்க்கவேண்டும். கொள்கையில் நாம் பலவீனர்கள். மனத்தகத்துக் கொண்டுள்ள கருத்துக்களில் நம்மில் பலர் பரிபாகம் அடையாதவர்களாக இருக்கிறோம். என்னென்னமோ கற்றிருப்பதாகவும், எதையெல்லாமோ அடையப் பெற்றிருப்பதாகவும் நம்மைக்குறித்து நாம் பெருமை பாராட்டிக் கொள்ளலாம். ஆயினும் உண்மையில் நமது நிலைமை பரிதாபகரமானது. நம்மைக் காப்பாற்றுதற்கு வேறுயாரோ ஒருவர் இருந்தாக வேண்டும் என்று எண்ணுகிறோம். கொடி ஒன்று எவ்வளவு உயரப் படர்ந்து சென்றாலும் அதற்குப் பற்றுக்கோடு ஒன்று இருந்தாகவேண்டும். அதே விதத்தில் தன்னைக் காப்பாற்றுதற்குத் தனக்கு அன்னியமாக தெய்வம் ஒன்று இருந்தாக வேண்டும் என்று மனிதன் நினைக்கிறான். முடிவான உண்மை யாது என்று கேட்பவர் மிகச்சிலர்; முடிவான உண்மையைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று துணிகின்றவர்கள் அதைவிட மிகச் சிலர்; அந்த உண்மைக்கு ஒப்ப வாழவேண்டும் என்று துணிகின்றவர்களோ இன்னும் சிலரேயாவர். மாந்தரிடத்து அத்தகைய துணிச்சல் உண்டாகாதிருப்பது அவர்களுடைய குற்றமன்று. அதற்கேற்ற மனபரிபாகம் அவர்களிடத்து இன்னும் உண்டாகவில்லை. மன உறுதிக்கு மாறாக மனத்தளர்வே அவர்கள்பால் உள்ளது. புதிய கருத்து எதையும் மனது எளிதில் வாங்கிக் கொள்வதில்லை. தனக்குத் தெரிந்ததைக் கொண்டே அது திருப்தியடைந்திருக்கிறது. தனக்கு வசதியான ஒரு கோட்பாட்டில் ஊறிக்கிடக்கிறது மனது. அக்கோட்பாட்டைக்கடந்து மேலேபோக அதற்கு விருப்பம் உண்டாவதில்லை. பண்டைக்காலத்துக் கொள்கை என்ற குருட்டுநம்பிக்கை, தங்கள் முன்னோர்கள் கடைப்பிடித்த கொள்கை என்ற குருட்டு நம்பிக்கை, தங்கள் ஜாதிக்குரிய கொள்கை என்ற குருட்டு நம்பிக்கை, தங்கள் க்ஷேத்திரத்திற்குரிய கொள்கை என்ற குருட்டு நம்பிக்கை, தங்கள் தேசத்துக்குரிய கொள்கை என்ற குருட்டு நம்பிக்கை—ஆகிய இத்தனைவிதமான குருட்டு நம்பிக்கைகளில் மனிதன் உழன்றுகொண்டிருக்கின்றான். இத்தனை விதமான இடைஞ்சல்களுக்கிடையில் முடிவான உண்மையை ஓர்ந்து உணருகின்ற தீரர், பிறகு அதைக் கடைப்பிடிக்கத் துணிகின்ற தீரர் யாரோ சிலர் சிலவேளைகளில் தென்படுகின்றனர்.

அத்வைத வேதாந்தம் புகட்டுவது யாது? கடவுள் அல்லது மெய்ப்பொருள் ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் பிரபஞ்சத்துக்கு உபாதான காரணமாகவும், நிமித்தகாரணமாகவும் இருந்தாகவேண்டும். சிருஷ்டிக்கின்றவரும் அவரே, சிருஷ்டிக்கப் பெறுகின்றவரும் அவரே. அதாவது சிருஷ்டி கர்த்தாவும் அவரே, சிருஷ்டிப் பொருளும் அவரே. அவர்தான் இப்பிரபஞ்சமாகக் காட்சிகொடுக்கிறார். இது எப்படிப் பொருந்தும் என்னும் கேள்வி ஈண்டு எழுகிறது. தூய பேரறிவுப் பொருள் கடவுள். அவர் ஜடமாகவும், அறிவற்றதாகவும் இருக்கும் இப்பிரபஞ்சமாகக் கீழ்மை அடைந்து விட்டாரா? இந்தக் கேள்விக்கு அத்வைத வேதாந்தம் விடையளிக்கிறது. ஆம், தோற்றத்தளவில் அவர் பிரபஞ்சமாயிருக்கின்றார். வியவகாரிக நிலையில் அவர் பிரபஞ்சமாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிறார். அக்ஞான நிலையில் இருக்கின்றவர்களுக்குப் பிரபஞ்சம் காட்சி கொடுக்கிறது. ஆனால் பாரமார்த்திக நிலையை அடையப் பெறுகின்றவர்களுக்கு இப்பிரபஞ்சம் தோற்றத்தில் இல்லை. நான் என்றும், நீ என்றும் இப்பொருள்கள் என்றும் தென்படுகின்றவைகளைப் பற்றிய உண்மை யாது? மனத்தகத்து மனிதன் படைத்துள்ள மயக்கத்தால் இத்தனை பொருள்கள் தென்படுகின்றன. உண்மை

யில் அகண்ட சத் சித் ஆனந்தமே இருக்கிறது. அந்த மெய்ப்பொருளை ஆதாரமாகக் கொண்டு இத்தனைவிதமான கனவுகள் உதித்துக்கொண்டிருக்கின்றன. ஆத்மன் அல்லது பிரம்மம் என்னும் அந்த ஒரு வஸ்துதான் இருக்கிறது. நாம ரூபங்களை யெல்லாம் கடந்துள்ள அகண்ட வஸ்து அது. காண்போன், காணுதல், காணப்படு பொருள் என்று சொல்லப்படும் திரிபுடிகளுக்கு அப்பாற்பட்டது அது. அந்த மெய்ப்பொருளை ஆதாரமாகக்கொண்டே பிரபஞ்சம் என்னும் காட்சியை நாம் காண்கிறோம். திரையை ஆதாரமாகக்கொண்டு படக்காட்சிகளை நாம் காண்பதுபோன்று சிதாகாசம் என்னும் ஆதாரத்தின்மீது பிரபஞ்சம் என்னும் ஆதேயம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஆத்மன் ஒன்றே நித்தியவஸ்து. இங்கு மேஜை ஒன்று இருக்கிறது. பேசுகின்ற பேச்சைக் கேட்கும் கூட்டம் ஒன்று இருக்கிறது. இந்தக் கூட்டத்துக்கு எல்லை கட்டும் சுவர் இருக்கிறது. இத்தனைவித தோற்றங்களிடத்திருந்து நாமரூபத்தை நீக்கிவிட்டால் எஞ்சியிருப்பது எதுவோ அதுவே மெய்ப்பொருள். அந்த மெய்ப்பொருளை அது என்றும், அவள் என்றும், அவன் என்றும் எப்படி வேண்டுமானாலும் இயம்பலாம். இப்படிப் பகர்வதெல்லாம் நமது எண்ணத்தின் கற்பனைகளாம். உண்மையில் அந்த ஆத்மனிடத்து ஆண்பால், பெண்பால் என்னும் பால் வேற்றுமை இல்லை. மயக்கத்தால் உடல் காட்சியைக் காண்பவர்கள் கீழ் நிலையில் இருக்கிறார்கள். உடல் காட்சி காண்பவர்களுக்கே ஆண் என்றும், பெண் என்றும் வெவ்வேறு வடிவங்கள் இருக்கின்றன. ஆத்மபோதம் அடையப் பெற்றவர் ஆணையும் காண்பதில்லை, பெண்ணையும் காண்பதில்லை. உடல் உணர்வைக் கடந்தவர்களுக்கு இந்த வேற்றுமை எங்ஙனம் உண்டாகும்? ஆத்மன் ஒன்றுதான் இருக்கின்றது. அது பேரறிவுப்பெருவெளி. அதற்கு ஆண், பெண் என்ற குறி இல்லை. அது யாண்டும் தன்மயமாய் இருப்பதால் அதைத்தான் தூய பொருள் என்றுசொல்லவேண்டும். பேரானந்தம் என்பதும் அதுவே. எங்கு நாம ரூபம் உரு எடுக்கிறதோ அங்கு வேற்றுமையும் வந்து வீடுகிறது. நாமரூபத்தைக் கடந்த நிலையில் இருப்பதுஒன்றே. அது அத்வைதம்; அதாவது இரண்டற்றது. உள்ளது ஒன்றே. நான் என்றும், நீ என்றும், பிரபஞ்சம் என்றும், இவையாவற்றையும் ஆளும் தெய்வம் என்றும் பகரப்பெறுவதெல்லாம் இறுதியில் அகண்டமான ஏகவஸ்து ஆய்வீடுகின்றது.

நமக்கு ஜீவபோதம் இருக்கும் வரையில் நமது காட்சியில் காண்போன் என்றும், காணப்படுபொருள் என்றும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. இந்த இரண்டு பகுதிகளை திருக் என்றும் திருசியம் என்றும் வேதாந்த பரிபாஷை பகருகிறது. காண்போன் ஆகிய திருக்கைக் காண்பது எப்படி ? காண்பவனை நாம் ஒருநாளும் காணமுடியாது. நமது உள்ளிருக்கும் அறிவுப் பொருள் காண்போன். காண்பவனுடைய பிம்பத்தைக் காணலாம், அவனையே காணமுடியாது. தன்முகத்தை மனிதன் தானேகாண்பதில்லை. அதன் பிம்பத்தைக் கண்ணாடியில் பார்க்கின்றான். அதே பாங்கில் ஆத்மனுடைய பிம்பமாகப் பிரபஞ்சம் இருக்கின்றது. இந்த ஆத்மன் பிரம்மம் என்று அழைக்கப்படுகிறார். நித்தியவஸ்து அவர் ஒருவரே. அவருடைய பிம்பமாகிய பிரபஞ்சத்தில் நலம் கேடு ஆகிய இரண்டுவிதக் காட்சிகளைக் காண்கின்றோம். கேடுடைய காட்சி எப்படி வந்தது ? கண்ணாடியில் நம் வடிவத்தின் பிம்பத்தைப் பார்க்கிறோம். கண்ணாடியில் குறைபாடு இருந்தால் நமது குறைபட்ட பிம்பத்தைப் பார்க்கிறோம். அந்தக் குறைபாடு நம்முடையதன்று. நமது பிம்பத்தை விளக்கும் கண்ணாடியைச் சார்ந்தது. பிரபஞ்சமாகத் தென்படும் பிம்பம் அங்ஙனம் ஏற்றத்தாழ்வுடையதாக இருக்கிறது. கொலையாளி ஒருவனை உலகில் காண்கிறோம். அவனுக்கு உள்ளிருக்கும் ஆத்மசொரூபம்



குறைபட்டதன்று. கொலையாளி என்னும் குறைபட்ட பிரகிருதியாக பிரதிபிம்பிக்கும்படி ஆத்மசொரூபம் ஆங்கு ஒளிர்கிறது. ஆக, கொலையாளி என்னும் காட்சியில் குறைபட்ட பிம்பம் தென்படுகின்றது. அந்த பிம்பத்துக்கு மூலப்பொருளாகிய ஆத்ம சொரூபம் பழுதுபடாதது. இனி, சான்றோன் என்னும் மற்றொரு பிம்பம் பிரகிருதியில் தென்படுகிறது. இங்கு நிறை நிலையில் பிரகிருதி இருக்கிறது. குற்றமற்ற கண்ணாடி போன்றது அது. ஆதலால் ஆத்மசொரூபத்தின் முழுமகிமை ஆங்குப் பிரதிபிம்பம் ஆகிறது. ஏகமாய், அத்வைதமாய் ஒரே ஆத்ம சொரூபம் தான் இருக்கிறது. எண்ணிறந்த ஆத்ம சொரூபங்களாக அது தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது. புழு என்னும் ஒரு சிற்றுயிராகத் தன்னை விளக்கிக்காட்டுவதும் அதே ஆத்மன். சம்பூரணநிலை அடைந்த சித்த புருஷன் என்னும் பெருநிலையில் தன்னை விளக்கிக்காட்டுவதும் அதே பரமாத்மன். காண்போனாகவும், காணப்படுபொருளாகவும் ஒரே ஆத்மசொரூபம் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. வெறும் ஜடப்பொருளாகக் காணுமிடத்தும் ஒருபொருளே பல்வேறு விகாரங்களைக் கொண்டிருக்கிறது என்பது புலனாகும். மனோமயமாக உணருகின்ற இடத்தும் ஒரே விராட் மனது எண்ணிறந்த சிறுசிறு மன அலைகளாகத் தன்னை விளக்கிக் கொண்டிருக்கிறது. நெறியான வாழ்வு என்னும் நிலையில் வைத்துப்பார்க்குமிடத்தும் ஒரு பேருயிரே எண்ணிறந்த உயிர்களாக உரு எடுத்து அந்தந்த நிலையில் தன்னை ஒழுங்குப்படுத்த முயன்றுகொண்டிருக்கிறது. இறுதியாக அருள் நிலையில் வைத்துப் பார்க்குமிடத்தும் அந்த ஒரு பரம புருஷனே தன் சொரூபத்தை அனந்தங்கோடி பாங்குகளில் விளக்கிக்கொண்டிருக்கின்றான் என்பது புலனாகும். ஆக, ஏகமாய் உள்ள ஒரு சத் சொரூபத்தின்மீது எண்ணிறந்த வடிவங்களையும், உயிர்களையும், சராசரங்களையும், சேதன வஸ்துக்களையும், ஜடவஸ்துக்களையும் நாம் கண்டு வருகிறோம். அறியாமையினால் ஒவ்வொரு ஜீவனும் தன்னை ஒரு தனி வியக்தியாக கற்பித்துக்கொண்டிருக்கிறான். தன்னை ஒரு மானுடன் என்று கற்பித்துக்கொள்ளும் ஜீவனுக்கு மானுட உலகம் முதன்மை வகிப்பதாகத் தென்படுகிறது. தன்னை ஒரு தேவன் என்று கற்பித்துக்கொள்ளும் ஜீவனுக்கு பிரபஞ்சத்தினுள் சுவர்க்கம் என்னும் தோற்றம் முதன்மை வகிப்பதாகத் தென்படும். ஜீவன் ஒருவன் எத்தகைய வியக்தியை எடுத்திருக்கின்றானோ அதற்கேற்ற காட்சி புற உலகில் இருப்பதாக அவனுக்குத் தென்படுகிறது. தன்னுடைய ஜீவபோதத்தைக் கலைத்துவிடுவது தன் குறிக்கோள் என்பது நெடுநாளைக்கு அந்த ஜீவனுக்கு விளங்குவதில்லை. ஜீவபோதத்தைக் கலைத்துவிட்டபிறகு எஞ்சியிருப்பது யாது? அனந்தங்கோடி அலைகள் கடலில்தென்படுகின்றன. அலைகளாக அவைகள் தென்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையிலும் கடல்தான் உண்மையில் இருக்கிறது. அங்ஙனம் எண்ணிறந்த ஜீவர்களாகவும், ஜகத்துக்களாகவும் தென்பட்டுக் கொண்டிருப்பதற்கிடையில் ஏகமாய் உள்ள ஆத்மன் ஒருவர்தான் இருக்கிறார். அந்தஆத்மனுக்குப் போக்கு இல்லை, வரவு இல்லை; ஜனனமில்லை, மரணமில்லை; மறுபிறப்பு எடுப்பது என்பதும் அந்தப் பரமாத்மனுக்கு இல்லை. அத்தகையபொருள் சாவது எங்ஙனம்? எங்கிருந்து அது எங்கே போகும்? அனந்தங்கோடி அண்டங்களெல்லாம் அந்த ஆத்மன்மீது தென்பட்டுக்கொண்டிருக்கும் வெறும் தோற்றங்களாம். பரமாத்மனுக்கு வேறுபட்டவைகளாக அவைகள் முன்பு இருந்ததுகிடையாது, இப்பொழுது இருக்கின்றவைகளுமல்ல, இனி வேறாக அமையப்போவதுமில்லை.

ஜீவபோதத்தைக் கலைத்துவிடுவது அத்வைதவேதாந்தத்தின் குறிக்கோள். அலை என்னும் நாமரூபம் போய்விட்டால் கடல் என்னும் பெரியபொருள்தான் மிச்சம். அங்ஙனம் ஜீவபோதம் அற்றுவிடுங்கால் பரபோதம்

எஞ்சியிருக்கிறது. அந்தப் பரபோதத்தை வளர்ப்பது அத்வைத வேதாந்த சாதனமாகும். சத் சித் ஆனந்த சொரூபியாகிய நான் எங்கும் வியாபித்திருக்கின்றேன், நித்திய வஸ்துவாய் இருக்கிறேன். நான் எங்குப் போவது? நான் ஏற்கனவே வியாபகமாகாதிருக்கும் இடம் யாது? சத் சித் ஆனந்த சொரூபியாகிய நான் இயற்கை என்னும் இந்த நூலை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறேன். இயற்கை என்னும் பெரிய புஸ்தகத்திலிருந்து பக்கம் பக்கமாக நான் புரட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு பக்கத்தைப் பார்க்கும்பொழுது நான் ஒரு வித உரு எடுத்திருப்பதாகக் கனவு காண்கின்றேன். இயற்கையில் இன்னொரு பக்கத்தைத் திருப்புங்கால் இன்னொருவித உடல் எடுத்திருப்பதாகக் கனவு காண்கின்றேன். இங்ஙனம் இயற்கையில் பல பக்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக என்முன்னே வந்து நிற்கின்றன. அத்தனைவித உடல்கள் எடுத்திருப்பதாக நான் கனவு கண்டுகொண்டே போகிறேன். புல்ஆகி, பூண்டுஆகி, கல்ஆகி, மரம் ஆகி, அசுரன் ஆகி, தேவன் ஆகி, முனிவன் ஆகி எண்ணிறந்த பிறவிகளை அல்லது எண்ணிறந்த வடிவங்களை நான் எடுத்துக் கொண்டே போனதாகக் கனவு கண்டுகொண்டு வந்தேன். இயற்கை என்னும் பெரிய நூலைப்படித்து முடித்தான பிறகு இந்தக் கனவையும் ஒரு முடிவுக்குக்கொண்டு வந்தேன். இயற்கையை விட்டொழித்த பொழுது பிறப்பையும் விட்டொழித்தவன் ஆகின்றேன். என்னுடைய மெய்யான நிலையை உணர்ந்து வீடு அடையப்பெற்றவன் ஆகிறேன். பிறகு உடல்கள் எடுப்பது என்னும் கனவுக்கு இடமில்லை. ஜீவபோதம் பெற்றிருப்பது என்னும் மயக்கத்துக்கு இடமில்லை. தன்னுடைய யதார்த்த நிலையாகிய ஆத்ம சொரூபத்தில் நிலை பெற்றிருப்பதே முடிவு.

அத்வைத நிலையை அடைந்தவன் புகட்டுவது யாது? பிரபஞ்சத்திலே வெவ்வேறு சொர்க்கங்களிலும், லோகங்களிலும், பரம பதங்களிலும் வீற்றிருக்கும் தெய்வங்களையெல்லாம் அவன் புறக்கணித்து விடுகின்றான். அண்டமனைத்துக்கும், உயிர்கள் அனைத்துக்கும் மூலப்பொருளாய் இருக்கும் ஆத்மன் ஒருவரையே அவன் அங்கீகரிக்கின்றான். சந்திரன், சூரியன், சொர்க்கங்கள், அண்டங்கள் ஆகிய இவைகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டவர் அந்தஆத்மன். பெரிய பொருளாகிய அந்த பரமாத்மன் மனிதனுடைய மனத்தகத்தே மிளிர்ந்துகொண்டிருக்கிறார். அப்படி மிளிர்ந்துகொண்டிருக்கும் பெரிய பொருளின் மகிமையை உள்ளபடி விளக்குதற்கு எந்த சாஸ்திரத்துக்கும் இயலாது, எந்த கலை ஞானத்துக்கும் இயலாது, எந்த விக்ஞானத்துக்கும் இயலாது. அந்தப் பரமாத்மன் ஒருவரே ஒப்பற்ற பொருளாக யாண்டும் இருந்து வருகிறார். அந்தப் பரமாத்மன் ஒருவரே நான் வணங்கும் தெய்வமாகின்றார். அவர் வேறு, நான் வேறு அல்ல. அவரே நான், நானே அவர். நான் என்னும் ஜீவ போதத்தை அவர் என்னும் பரபோதத்தில் கலக்கிவிடுகின்றேன். இதுதான் அத்வைதியினுடைய கோட்பாடு. யாருடைய முன்னிலையில் நான் வணங்குவது? ஒரு பொருளே நான் ஆகவும், ஏனையவைகளாகவும் இருக்கின்றார். ஆகவே வணங்குபவன், வணங்கப்படு பொருள் ஆகிய இரண்டும் ஒன்றே. உதவியை நாடி நான் யாரிடத்தில் செல்லுவது? எனக்கு உதவிபுரிய யார் உளர்? அகண்டவஸ்து ஒன்றே நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறார். ஆதலால் உதவி புரிபவர் என்பதும், உதவியை அடையப் பெறுபவர் என்பதும் பொருளற்ற கனவுகள் ஆகின்றன; பொருளற்ற மயக்கங்கள் ஆகின்றன. மயக்கத்தை ஒழித்துவிட்டுப் பரபோதத்தில் இருப்பவனே நிலையை அடைந்தவன் ஆகின்றான்.

துவைதமதத்தில் இருப்பவன் பலஹீனன் ஆகின்றான். புற உலகில் எங்கேயோ இருக்கும் தெய்வத்திடமிருந்து தனக்கு உதவி வர



வேண்டுமென்று அவன் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறான். அக உலகம் என்றும், புற உலகம் என்றும் இரண்டு வஸ்துக்கள் இல்லை என்பது அவனுக்குத் தெரியாது. புற உலகிலிருந்து உதவி வரவேண்டுமென்று அவன் பரிந்து பிரார்த்தனை பண்ணுகின்றான். அவனுடைய பிரார்த்தனைக்கு இணங்கி உதவியும் அவனுக்குக் கிட்டுகிறது. உண்மையில் அவன்பெற்ற உதவி உள்ளிருக்கும் பரம்பொருளிடத்திருந்து வந்ததேயாம். அது புற உலகிலிருந்து வந்ததாக அவன் எண்ணிக்கொள்கிறான். அவனுடைய நிலை நோயாளி ஒருவனுடையதைப் போன்றது. படுக்கையில் படுத்துக்கிடக்கும் நோயாளி கதவை யாரோ தட்டுவது போன்று உணருகிறான். எழுந்துபோய் அவன் கதவைத் திறக்கின்றான். வெளியில் யாரும் இல்லை! திரும்பவும் அவன் படுக்கப் போகின்றான். மறுமுறை கதவைத்தட்டும் ஓசை அவனுக்குக் கேட்கிறது. திரும்பவும் அவன் கதவைத்திறக்கின்றான். வெளியில் யாரும் இல்லை! கடைசியில் உண்மையை அவன் உணருகின்றான். தனது ஹிருதயத்தின் துடிப்பை கதவைத் தட்டும் சப்தம் என்று அவன் தவறுதலாக எண்ணிக்கொண்டான். துவைத நிலையில் இருக்கின்றவர்கள் பலருடைய அனுபவம் இத்தகையது. கடவுளைக் காணவேண்டுமென்று அவர்கள் உலகெல்லாம் தேடி அலைகின்றனர். மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் அவர்கள் தேடித் திரிகின்றனர்; ஓடைகளிலும் புண்ணியநதிகளிலும் அவரைக்காண முயற்சி பண்ணுகின்றார்கள்; தேவாலயங்களிலும், சொர்க்கத்திலும், பரமபதத்திலும் பரம்பொருளைக் காண அவர்களுடைய மனதுபுறத்தேபோய்க் கொண்டிருக்கிறது. நெடுந்தூரத்துக்கு அப்பால் எங்கேயோ ஓர் திவ்யமான ஸ்தலத்தில் தெய்வம் வீற்றிருக்கிறார் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இறுதியில் தங்களிடத்திருந்து நீங்காது தம் மனத்தகத்தே அப் பெரிய பொருள் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்கின்றார்கள். ஜீவன் என்று சொல்லப்படுகின்ற இந்தச் சிறிய வியக்தி ஒருநாளும் இருந்தது கிடையாது. ஜீவன் போன்று தென்பட்டுக்கொண்டிருந்தகாலையும் பரம்பொருள் ஒருவர்தான் சாசுவதமாய் இருப்பவர் ஆகின்றார்.

இப்பொழுது இன்னொரு கேள்வி எழுகின்றது. தனது ஜீவசொரூபம் உண்மையானது என்கின்ற மயக்கம் ஜீவனிடத்து இருக்கின்றது. பரம்பொருள்தான் ஜீவனாகத்தென்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று பகரப்படுகிறது. அப்படியானால் இந்த மயக்கத்தைப் பெற்றது பரம்பொருள்தானே என்னும் கேள்வி எழுகின்றது. பரிபூரணப் பொருளாகிய பிரம்மத்திடத்து இந்த மயக்கம் எப்படிவரமுடியும்? நிறைபொருளாகிய பிரம்மத்திடத்து இத்தகைய கனவு எப்படி உதிக்கமுடியும்? மயக்கமும் கனவும் இருக்கின்றனவென்று கருதுவதே ஒருவித மயக்கமாகின்றது. ஒருநாளும் அப்பொருளிடத்து மயக்கம் வந்தது கிடையாது. கனவு காண்பதும் அதனிடத்தில்லை. மெய்ப்பொருள் கனவு காண்பது கிடையாது. ஆக, இக் கேள்வியே பொருளற்றதாகிறது. மயக்கத்துக்கு இருப்பிடம் மயக்கம்; மெய்ப்பொருளிடத்து அது கிடையாது. ஆத்ம சொரூபமாகிய நீ மயக்கத்தில் இருப்பவன் அல்லன்; மயக்கம் என்னும் பொய்த்தோற்றம் உன்னைச் சார்ந்திருக்கிறது. மேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுகின்றன. ஒரு மேகத்தைப் புறக்கணித்துவிட்டு மற்றது வந்து முன் நிற்கின்றது. கடைசியில் ஒரு மேகமும் இல்லாது போய்விடுகின்றது. மேகங்கள் இருந்தபொழுதும் வெட்டவெளி தன்மயமாய் இருந்தது. வெட்டவெளிக்கு ஒரு பழுதும் வந்துவிடவில்லை. மேகங்கள் அகன்றுபோனபிறகும் வெட்டவெளி தன்மயமாய் இருக்கிறது. ஒருவேளையில் இருந்து மற்றொருவேளையில் இல்லாதுபோன மேகம் வெறும் தோற்றம். வெட்ட வெளியே நிலைபேறு உடையது. அந்த வெட்டவெளி

போன்றது பரம்பொருள். அது சித்சொரூபம். சித்சொரூபத்தில் நான் நீ என்கின்ற இரண்டு வியக்திகள் இல்லை. சித்சொரூபம் ஒன்றே உள்ளது. பிரபஞ்சம் என்கின்ற உடல் இல்லாத வேளையிலும் அது தன் மயமாய், நிறைபொருளாய் இருக்கிறது. மேகமில்லாத வேளையிலும் வெட்டவெளி இருப்பது போன்று பிரபஞ்சம் முழுதும் ஒடுங்கிய நிலையிலும் அந்தப் பேர் அறிவுப்பொருள் தன்மயமாய் இருக்கிறது. வாழ்வு என்பதும் மரணம் என்பதும் அதற்கில்லை; முக்தி என்பதும் பந்தம் என்பதும் அதற்கில்லை. இந்த ஆத்ம சொரூபம் ஒன்றே மெய்ப்பொருள். இதை விளக்குகின்ற சாஸ்திரங்களெல்லாம் தேசப் படம் போன்றவைகள். படத்தின் மூலம் தேசத்தை அறிவது உண்மையாக அந்த தேசத்தைப் பார்ப்பதற்கு ஒப்பாகாது. சாஸ்திரங்கள் மூலம் மெய்ப்பொருளை அறிவது மெய்யறிவு ஆகாது. ஆக, சாஸ்திரங்கள் அத்வைத சித்தி அடைந்த ஒருவனுக்குப் பொருளற்றவைகள் ஆய்விடுகின்றன.

"உண்மையை அறிந்து ஒரு நொடிப் பொழுதில் விடுதலையடைந்து விடு." அக்ஞான இருள் அந்த நொடிப்பொழுதில் அகன்றுபோய் விடும். அகண்ட சச்சிதானந்தமே தான் என்று உணர்ந்த ஞானிக்கு பேதங்களெல்லாம் அகன்று போய்விடுகின்றன. எண்ணிறந்த ஆடவர் மகளிராகத் தென்படுபவர்கள், தேவர்கள் தானவர்களாகத் தென்படுபவர்கள், ஸ்தாவர ஜங்கமங்களாகத் தென்படுபவைகள், அனந்தங்கோடி அண்டங்கள் ஆகிய இவையாவும் மெய்ப்பொருள் என்னும் ஒரு வஸ்துவில் ஒடுங்கி விடுகின்றன. இந்த அனுபூதியைப் பெற்ற ஞானிக்கு பிறகு பயம் என்பது இல்லை. அபயத்தில் நிலைபெற்றவன் அவனே. தீங்கிழைத்தல் என்னும் செயல் அவனிடத்தில் இல்லை. அனைத்தையும் தன் சொரூபமாக உணருகின்றவன் தனக்கே எங்ஙனம் தீங்கிழைத்துக் கொள்வான்? அனைத்தையும் தன் சொரூபமாக உணருகின்றவன் தன்னைக் கண்டு எங்ஙனம் பயந்துகொள்வான்? அந்த ஞானிக்குத் துக்கம் இல்லை. இரண்டு வஸ்துக்கள் இருக்குமிடத்து ஒன்று மற்றொன்றுக்குத் துன்பத்தை விளைவிக்கிறது. அகண்டசச்சிதானந்தவஸ்து தனக்குத்தானே எப்படித் துன்பத்தை விளைவிக்கமுடியும்? அந்த நிறை ஞானிக்குப் பொறாமை இல்லை. தன் சொரூபத்துக்கு அன்னியமாக அவனுக்குக் காட்சியில் வேறொன்றும் இல்லாமையினால் யாரைக்குறித்து அவன் பொறாமைப் படுவான்? துவேஷம் என்பது அந்த ஞானியினிடத்தில்லை. தன்னையே அவன் எங்ஙனம் வெறுக்கமுடியும்? நான் என்னும் சொல்லுக்கு இலக்காக அந்தமெய்ஞானியினிடத்து இருப்பது இந்த சரீரபோதமல்ல; அகண்ட சச்சிதானந்த சொரூபமே நான் என்னும் சொல்லுக்கு இலக்காக இருக்கிறது. இங்ஙனம் பேதங்கள் அனைத்தையும் அந்த ஞானி அகற்றிவிடுகின்றான்.

नित्योऽनित्यानां चेतनश्चेतनानामेको
बहूनां यो विदधाति कामान् ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां
शान्तिः शाश्वती नेतरेषाम् ॥

"நிலையற்ற பொருள்களுக்கிடையில் நிலைபேறுடைய பொருள் எதோ, அறிவுக்கறிவாய் இருப்பது யாதோ, ஏகவஸ்துவாய் இருந்து கொண்டு அனைவருடைய ஆசைகளையும் நிறைவேற்றி வைப்பது எதுவோ—அத்தகைய பரம்பொருள் தங்கள் உள்ளத்திலேயே வீற்றிருக்கக் காண்பவர்கள் சாசுவதமான சாந்தியைப் பெறுகின்றனர். ஏனையோர்க்கு அது இயலாது."

சமுதாயத்துக்கு இந்த மூன்று மதங்களும் தேவையாயிருக்கின்றன. இவைகளுள் ஒரு மதம் மற்றவைகளைக் கண்டிப்பதற்காக அமைந்ததன்று. மூன்று படித்தரங்களில் வைத்து உண்மை ஓர்ந்து உணரப்படுகிறது. பரமாத்மனை நோக்கி ஜீவாத்மன் போகிற பயணத்தில் இந்த மூன்று படித்தரங்களும் அனுபவத்துக்கு வருகின்றன.

# மாணாக்கன்

## இயல்பு

மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் பெரிய வேற்றுமை ஒன்று உண்டு. மற்ற உயிர்களுக்கு அந்தந்த இனத்துக்கேற்ற இயல்பு இருக்கிறது. நூறு புலிகளை எடுத்துக்கொண்டால் அவைகளுக்கிடையில் புலியின் இயல்பையே காணலாம். நூறு பசுக்களை எடுத்துக்கொண்டால் அவைகளுக்கிடையில் பசுவின் இயல்பை மட்டும் காண்கிறோம். இங்ஙனம் ஒவ்வொரு உயிரிடத்தும் அதன் பாங்கு விளங்குகிறது. ஆனால் மனிதனிடத்து நாம் காணும் காட்சி இத்தகையதன்று. நூறு மனிதர்களை ஆராய்ந்து பார்த்தால் எல்லாரிடத்திலும் மனித இயல்பே இருக்கிறதென்று உறுதிகூற முடியாது. புலியின் இயல்புடைய மனிதர்கள் உண்டு; பாம்பின் இயல்புடையவர்கள் இருக்கிறார்கள்; பசுப் போன்றவர்களையும் காணலாம்; மனுஷத் தன்மை உடையவர்கள் இருக்கிறார்கள்; யாரோ சிலர் தெய்விக இயல்புடனும் திகழ்கிறார்கள். மனிதர்களாகத் தென்படும் உயிர்களுக்கிடையில் எல்லாவிதமான இயல்புடையவர்களும் இருக்கிறார்கள் என்று இயம்பலாம். இது மனிதனுக்கென்றே அமைந்த சிறப்பு ஆகிறது.

மற்ற உயிர்கள் தங்கள் இயல்புகளை மாற்றிக்கொள்ள முடியாது. பசு புலியைப் போன்று ஆவதும், புலி பசுவைப்போன்று ஆவதும் கிடையாது. ஒவ்வோர் உயிரும் தனக்குரிய இயல்புடனே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்திருந்து, இறந்து பட்டுப் போகிறது. ஆனால் மனிதனோ தன் இயல்பை மாற்றிக் கொள்ளலாம். எப்பொழுது வேண்டுமானாலும் அதைமாற்றிக்கொள்ளலாம். எவ்வளவு பெரிய மாறுதல் தன்னிடத்து அமையும்படி வேண்டுமானாலும் செய்து கொள்ள அவனுக்கு முடியும். முயற்சிக்கு ஏற்ப மனிதன் தன்னைப்புதிய பாங்குடையவனாய் அமைத்துக் கொள்ளுகிறான். விரும்பினால் விலங்கின்நிலையிலேயே அவன் இருந்து விடலாம். மகனாக வடிவெடுத்துள்ள அவன் மகனுக்குரிய பாங்குகளைப்பெறக்கூடும். மானுடவடிவத்திலுள்ள தேவனாகவும் தன்னை அவன் செய்துகொள்ள முடியும். அவன் வாழ்ந்து வருகின்ற வாழ்வுக்கு ஏற்ப அவனுடைய இயல்பு மாறுகிறது. ஒரு மனிதன் எத்தகைய வாழ்க்கையை நடத்துகிறான் என்பது மிக முக்கியமானது. அவன் அடையும் மேன்மைக்கும் கீழ்மைக்கும் வாழ்க்கை முறையே முதல் காரணம் ஆகிறது. வாழ்க்கையைச் செப்பனிடக் கற்றுக்கொள்வது மிக முக்கியமானது.

## வாய்ப்பு

நம் கைவசம் பசுவின் பால் இருக்கிறது. இந்தப் பாலினின்று வெண்ணெய் எடுக்க நமக்குமுடியும். அதைத் தயிராக மாற்றிக் கடைவது ஒருமுறை. பாலினின்றே யந்திரத்தைக்கொண்டுமுதலில் ஆடைஎடுத்துப்பிறகு அதைவெண்ணெயாக மாற்றுவது மற்றொரு முறை. எந்த விதத்திலும் பாலின் சாரமாகிய வெண்ணெயைப் பிரித்து எடுத்து விடலாம். இச்செயலை அதிகாலையில் செய்வது சிறந்தது. எல்லா வேளைகளிலும் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்க முடியும் என்றாலும் அதிகாலையில்கடையும் தயிரினின்றே நல்ல பாங்கில் வெண்ணெய் அகப்படுகிறது. வெண்ணெயைப் பற்றிய இவ்வுண்மை ஒரு விதத்தில் மனிதனுடைய வாழ்க்கைக்கு நல்ல உபமானமாக வந்தமைகிறது. எப்பொழுது வேண்டுமானாலும் மனிதன் தன்னைத் திருத்தியமைத்துக்கொள்ள முடியும். அந்த முயற்சியை அவன் இளமையிலேயே எடுத்துக் கொள்வானாகில் அதினின்று அவனுக்குப் பெருநன்மை உண்டாகிறது. வாழ்க்கைமுறையைப்பற்றிக் கவனம் எடுத்துக்கொள்ளாது தற்செயலாய் அமைந்த போக்கில் வாழ்கின்ற

வர்களே விதவிதமான இயல்புடையவர்களாகப்போய்விடுகின்றனர். அத்தகையவர்களுக்குக் கடைப்பட்ட இயல்பு, இடை நிலையில் உள்ள இயல்பு, தலைத்தரமான இயல்பு ஆகியவைகள் தற்செயலாய் அமைந்துவிடுகின்றன. ஆனால் இளமையிலேயே நல்லதிட்டம் ஒன்றுக்கு உட்பட்டவர்களாக சிறுவர்கள் வாழ்ந்து வருவார்களாகில் மேலாம் இயல்பு ஒன்றே அவர்களிடத்து மிளிர ஆரம்பித்துவிடும். இளமைப் பருவம் அதற்குத் தகுந்த வாய்ப்பு ஆகிறது. சர்வகாலமும் இளமைப் பருவத்திலேயே யாரும் இருந்துவிடமுடியாது. நாள்தோறும் முதுமையை நோக்கிச் சிறுவன் ஒருவன் பயணம் போய்க்கொண்டிருக்கின்றான். இளமையில் இருக்கின்றபொழுது தன்னை நல்ல பாங்கில் திருத்தி அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு அவனுக்கு உண்டு. அந்த வாய்ப்பை வீண்போக யாரும் விட்டுவிடலாகாது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே ‘இளமையிற் கல்’ என்னும் கொள்கை பிறந்தது. கற்றல் என்பது கல் என்னும் அடிச்சொல்லிலிருந்து வந்திருக்கிறது. கல்லுதல் என்றால் கிளறுதல் எனப் பொருள்படுகிறது. மனதை முறையாகக் கிளறினால் பண்பட்டுள்ள பூமிக்கு அது ஒப்பாகும். அதனிடத்திருந்து நல்வாழ்வு என்னும் பெரிய விளைவைப் பெறலாம். மனதைப் பண்படுத்துவதே கல்வியின் நோக்கமாகும். உலகிலுள்ள பொருள்களைப்பற்றிய புள்ளி விவரங்களைக் கருத்தில் வாங்குவது அடிப்படைக் கல்வியாகாது; மனதைச் செப்பனிடுவதே அடிப்படைக் கல்வி. இளமை அதற்கு நல்ல சந்தர்ப்பத்தைத் தருகிறது.

இளமையைப் பற்றிய மற்றொரு கோட்பாடு உண்டு. அதையும் ஓர் உபமானத்தைக் கொண்டே விளக்குதல் பொருந்தும். களிமண்ணினின்று நமக்குப் பயன்படும் பல பொருள்களைச் செய்கின்றோம். குழந்தைகள் விளையாடுதற்கு விதவிதமான பொம்மைகளை களிமண்ணினின்று செய்கின்றோம். தானியங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு மிடா போன்ற பெரிய மட்பாண்டங்களைச்செய்கின்றோம். சமைப்பதற்கும், நீர் எடுப்பதற்கும் சட்டி, பானை, குடம் போன்றவைகளையும் களிமண்ணினின்று வனைந்தெடுக்கிறோம். கூரை மேய்வதற்கு அதே மண்ணினின்று ஓடு அமைக்கிறோம். சுவர் எடுப்பதற்குச் செங்கல் செய்கின்றோம். இத்தனைவிதமான பொருள்களுக்குக் களிமண் உதவுகிறது. இந்தக் களிமண்ணைப் பண்படுத்துவது மிக முக்கியமானது. எப்பொருளை அதனிடத்திருந்து அமைக்க விரும்புகின்றோமோ அதற்கேற்றவாறு களிமண்ணைப் பண்படுத்தியாக வேண்டும். ஜீவகளை ததும்பும் விக்கிரகத்தை அதனிடத்திருந்து உண்டுபண்ணலாம். அதற்காக அம்மண்ணை எவ்வாறு ஊற வைத்து அதை அரைத்துப் பக்குவப்படுத்த வேண்டும் என்னும் கோட்பாடு நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதன் உறுதியைப் பற்றி இனி ஆராய்வோம். பண்படுத்தாத களிமண்ணில் செய்யும் செங்கல் சுட்ட பிறகு உறுதியற்றதாய்ப் போய்விடுகிறது. நன்றாகப் பண்படுத்திய களி மண்ணினின்று செய்யும் செங்கல் சுட்ட பின் கருங்கல்லுக்கு நிகரான உறுதியைப் பெற்றுவிடுகிறது. பொருள்களிடத்துத் தென்படும் அழகு, உறுதி, பயன் ஆகிய யாவும் களிமண்ணைக் கையாண்ட விதத்தினின்று உரு வெடுத்துள்ளன. களிமண்ணைக் கையாளும் விதத்தைத் தெரிந்து கொள்ளுதல் மிக முக்கியமானது. இந்தக் களிமண்ணின் நிலையில் இருக்கின்றார்கள் சிறுவர்கள். முதிர்ச்சியடைந்த பிறகு சுட்ட சட்டி போன்று அவர்கள் ஆய்விடுவார்கள். சுடாத களிமண் பருவம் நல்ல வாய்ப்பு. அதை அப்பொழுது எந்தக் காரியத்துக்கு வேண்டுமானாலும் உதவும்படி செய்து விடலாம். களிமண்ணைப் பண்படுத்துவது ஒரு விதக் கலைஞானம். சிறுவர்களுடைய இளமையைப் பண்படுத்துவது அதை விடப் பன்மடங்கு சிறந்த கலைஞானம். களிமண்ணினின்று உயிரற்ற பொருள்களை



உண்டு பண்ணுகின்றோம். சிறுவர்களுடைய இளமைப் பருவத்தினின்றே உயிர்களையே பேருயிர்களாக மாற்றி அமைக்கிறோம். அத்தகைய அரும் பெரும் செயலுக்கு இளமைப் பருவம் மிகவும் பொருத்தமானது. ஆதலால் இளமைப்பருவம் கிடைப்பதற்கரிய வாய்ப்பு ஆகின்றது.

## பயிற்சி

கொழுத்திருந்த இளம் காளை ஒன்றை யுவன் ஒருவன் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் நடந்தான். சாதாரணமாக ஒரு மனிதனால் தூக்க முடியாத அவ்வளவு பளுவுடையதாக அந்தக்காளை இருந்தது. அந்த யுவன் செய்த செயல் அசாதாரணமானது. அதிசயத்தை உண்டு பண்ணும் அச்செயலைப் பார்த்தவர் வியப்படைந்தனர். மாந்திரிக சக்தியால் அதை அவன் தூக்குகிறானோ என்று ஒரு சிலர் சந்தேகப்பட்டனர். பிசாசின் அல்லது பில்லி சூன்யத்தின் ஏவலால் இம்மனிதன் இங்ஙனம் செய்கின்றானோ என்று வேறு சிலர் வியப்படைந்தனர். இது கண்கட்டி வித்தையாக இருக்கக் கூடுமோ என்று இன்னொரு கூட்டத்தார் ஐயம் கொண்டனர். ஆனால் அந்த யுவனுடன் எப்பொழுதும் பழகி வந்திருந்த நண்பர்களுக்கு வியப்போ, ஐயமோ உண்டாகவில்லை. அவனுடைய முயற்சியை அவர்கள் வெறுமனே பாராட்டினர். கொழுத்த காளையைத் தூக்குதற்கு அவனுக்கு வலிவு எங்கிருந்து வந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

காளையானது கன்றுக் குட்டியாயிருந்தபொழுது அதைத் தூக்கி நடந்து பழகினான். அந்தப் பயிற்சியை அவன் நாள்தோறும் கடைப்பிடித்து வந்தான். தன் தேகப் பயிற்சிக்கு ஏற்ற சத்துடைய நல்ல உணவையும் அவன் உண்டு வந்தான். கன்று வளர்ந்து பளுவில் அதிகரித்துக் கொண்டே வந்தது. பெரும் பாரத்தைத் தூக்கி நடக்கும் உறுதிப்பாடும் அந்த யுவனிடம் வளர்ந்து வந்தது. இதுவே அச்செயலுக்கு அடிப்படையாயிருந்த உண்மை. விஷயம் தெரியாதவர்கள் பொருளற்ற பாங்கில் பலவிதமாக அதற்கு வியாக்கியானம் கொடுக்க எண்ணினார்கள். பயிற்சியால் மனிதன் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடையலாம் என்பதற்கு அந்த யுவனுடைய செயல் தக்கதொரு சான்று ஆகும். மனிதன் எதைப் பெற விரும்பினாலும் அதற்குப் பயிற்சி முக்கியமானதொரு உபாயம் ஆகிறது. பழக்கத்தால் பலவிதமான ஆற்றல்களை மனிதன் பெற்றுவிடலாம். உடல் பயிற்சியில் பல பகுதிகள் இருக்கின்றன. இடைவிடாது அப்பயிற்சிகளைச் செய்து உடலைப் பண்படுத்தவும், பலப்படுத்தவும் முடியும். அதேபோன்று மனோமுயற்சிகள் பல இருக்கின்றன. அவைகளை முறையாகச் செய்வதினின்று மன இயல்பை வேண்டியவாறு மாற்றியமைக்கலாம். அறிவுத் திறனைப் பெறுதற்கும் பயிற்சி இன்றியமையாதது. முறையாக எண்ணுதல், முறையாக ஓர்தல், முறையாக ஆராய்ச்சி செய்தல், முறையாக ஓதுதல் ஆகியவைகளைக் கையாளுவதால் மனிதன் அறிவைத் தீட்ட முடியும். இத்தனை விதமான பாங்குகள் பயிற்சியினின்று வருகின்றன. நல்ல பயிற்சிகளில் பிரவேசிப்பதற்கு இளமைப் பருவம் மிக வசதியானது. எத்தகைய பயிற்சியில் ஈடுபட்டாலும் அதைச் செவ்வனே செய்து முடிப்பதற்கும், அதில் ஆழ்ந்து முன்னேற்றம் அடைதற்கும் இளமைப் பருவம் மிகவும் அனுகூலமானது. இக்காரணத்தை முன்னிட்டும் இளமையிற் கல் என்னும் கோட்பாடு வந்துள்ளது.

களிமண்ணில் விதவிதமான வஸ்துக்களைச் செய்கின்றவர்கள் அழகு நிறைந்த சித்திரங்களையும் அதன்மீது தீட்டலாம். அப்படித் தீட்டிய பிறகு அதைச் சூளையில் வைத்துச் சுட்டு விட்டால் பிறகு அச்சித்திரங்கள் அழிந்து பட்டுப்போகா. ஆனால் சுட்டெடுத்த ஓட்டின்மீது சித்திரங்களை அமைப்பது சுலபமானதன்று. பச்சைக் களிமண் போன்று பசையுடையது சிறுவர்களுடைய இயல்பு. அவர்களுடைய இயல்பை பழக்கத்தால்

வேண்டியவாறு திருத்தி அமைக்கலாம். முதுமை வந்தான பிறகு இயல்பை மாற்றுவது எளிதன்று. இளமையில் வேண்டியபடியெல்லாம் சிறுவர்களின் வாழ்வு வணங்கி அமைகிறது. நல்ல பயிற்சிகளைப் பெறுதற்கு அத்தருணம் சாலச் சிறந்தது. பயிற்சியின் மூலம் பாலர்களை எப்படி வேண்டுமானாலும் சீர்ப்படுத்தி அமைக்கலாம்.

## ஒழுங்குப்பாடான வாழ்வு

இக்காலத்திய இளைஞர்களுடைய வாழ்க்கையில் ஒழுங்குப்பாட்டைக்காண்பது அரிதிலும் அரிதாய்விட்டது. நாள்தோறும் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் புதிய புதிய செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர். மனம்போன போக்கிலெல்லாம் அவர்கள் போய்க்கொண்டிருக்கின்றனர். அதைச் சுதந்திரவாழ்வென்றும் அவர்கள் தவறுதலாக எண்ணிக்கொள்கின்றனர். காற்றில் சிதறடைந்துபோகும் மேகம் போன்று அவர்களுடைய வாழ்வு அதன்மூலம் சின்னாபின்னமடைகின்றது.

இயற்கையில் பருவங்கள் வருவதிலும், பூமி சந்திரன் நட்சத்திரங்கள் முதலிய கோளங்கள் சுழலுதலிலும் ஒழுங்குப்பாடு ஒன்று இருக்கிறது. இயற்கையின் பெருமை ஒழுங்குப்பாட்டில் இருக்கிறது என்று இயம்பலாம். தங்கள் வாழ்வைச் செப்பனிட விரும்பும் சிறுவர்கள் ஒழுங்குப்பாடே வடிவெடுத்தவர்கள் ஆகவேண்டும். அதிகாலையில் எழுந்திருப்பது ஒழுங்குப்பாட்டுக்கு இன்றியமையாத ஆதாரமாகும். சூரியோதயத்துக்கு முன்பே சிறுவர்கள் படுக்கையினின்று எழுந்திருக்கவேண்டும். தூக்கத்துக்காகவென்று ஒதுக்கிவைக்கும் நேரம் வயதை அனுசரித்துச் சற்று ஏற்றத்தாழ்வு உடையதாகின்றது. சின்னஞ்சிறு வயதிலிருக்கும் பாலகன் ஒருவனுக்கு ஒன்பது மணி நேரம் தூக்கம் தேவையாகிறது. ஆரோக்கியமான முதியவர் ஒருவருக்கு நான்கு மணிநேரம் தூங்கினால் போதுமானது. சிறுவர்கள் சிறிது சிறிதாக தூக்கத்தை வென்று பழகவேண்டும். அதற்கு அதிகாலையில் எழுந்திருப்பது முதற்படி ஆகிறது. உணவு குறைந்தால் உடல் உறுதி கெட்டுப்போய் விடும். உறக்கம் குறைந்தால் உடல் வளர்ச்சி தடைப்படும்; மனது தெளிவு அடையாது. இனி மிகைப்பட்ட உறக்கத்தால் உடல் வளர்ச்சி அடையும். ஆனால் மனது மந்தநிலைக்குப் போய்விடும். மனதைத் தெளிவாக்குவது மக்களுக்கு முக்கியமானசெயல். உடலுக்குத் தேவையாய் இருக்கும் உறக்கத்தை இரவில் முற்பகுதியில் கொடுக்கலாம். வைகறையில் துயில் எழுந்திருத்தலை சிறுவர்கள் ஒருநாளும் புறக்கணித்துவிடலாகாது. அதிகாலையில் எழுந்திருப்பவர்கள் மனத்தெளிவு அடைகின்றனர். பிறகு அன்று இரவு படுக்கப்போகும் பரியந்தம் வாழ்க்கையின் செயல்களை வகையுடன் வகுத்துவைக்கவேண்டும். உண்பது இன்னின்ன வேளைகளில், ஓய்வு எடுத்துக்கொள்ளுதல் இவ்வளவு நேரம், மனோ முயற்சிக்கென்று ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் நேரங்கள், தேகப் பயிற்சிக்காகவென்று குறித்துள்ள நேரம் — ஆகியவைகளில் ஒழுங்குப்பாடு இருக்கவேண்டும். ஒவ்வொரு செயலையும் அதற்கென்று குறித்து வைத்துள்ள வேளையில் செய்து பழகினால் உடல் அமைப்பிலும் மன அமைப்பிலும் ஒழுங்குப்பாடு வந்துவிடுகிறது. திறம்படப் பல செயல்களை நாள்தோறும் செய்துசாதிக்கச் சிறுவர்களுக்கு முற்றிலும் இயலும். நல்ல கடிகாரம் முறையாகத் தன் வேலையைச் செய்வது போன்று சிறுவர்களுடைய நித்திய கடமைகள் சிறிதேனும் முறை பிறழாது நிகழ்ந்துவருவது அவசியமர்கிறது. தின்பண்டங்கள் அகப்படும் வேளைகளிலெல்லாம் உண்ணுதல், தங்களுக்குத் தோன்றிய வேளைகளிலெல்லாம் வீண்காலம் போக்குதல், சோம்பித்திரிதல், பயன்படாப் புன்மொழிகளை பலருடன் கூடிப் பேசிக்கொண்டிருத்தல் ஆகிய செயல்கள் ஒழுங்குப்பாடுடைய வாழ்க்கைக்கு பேர் இடைஞ்சல்கள் ஆகின்றன. குறிப்



பிட்ட வேளைக்கே பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும். நெடுநேரத்துக்கு முன்பே அங்குச் சென்று வெறுமனே காத்திருப்பது ஒவ்வாது. வேளைக்குப் பிந்திப்போவதும் முறையன்று. வீணாகக் கழித்த நேரத்தைத் திரும்பவும் பெற்றுவிட முடியாது. ஒவ்வொரு நொடிப்பொழுதையும் முறையாகப் பயன்படுத்துவது மிக முக்கியமானது.

## பெற்றோரைப் பேணுதல்

சிறுவன் ஒருவன் தன்னை மாண்பு உடையவனாக மாற்றி அமைத்துக்கொள்ள முயன்று வரும்பொழுது அவனுக்கு மாணாக்கன் என்னும் பெயர் வருகிறது. மாண்பைத் தன்னகத்து ஆக்கிக்கொண்டிருக்கிறான் என அது பொருள்படுகிறது. பெற்றோரைப்போற்றுதல் அதற்கு முற்றிலும் அவசியமாகிறது. மரத்தில் தோன்றிய பிஞ்சு ஒன்று கனிந்த கனி ஆகும் பரியந்தம் அந்த மரத்தையே சார்ந்திருக்கிறது. அதைத் தவிர அதற்கு வேறு கதியில்லை. மரத்தினிடத்திருந்தே தன் வளர்ச்சிக்கு வேண்டிய சாரத்தை அது பெற்றுவருகிறது. கனிவதற்கு முன்பு மரத்தைவிட்டு அது பிரிந்துபோனால் அதன் வளர்ச்சி தடைப்பட்டு விடுகிறது. நல்ல கனியாக அது உரு எடுக்கமுடியாது.

இக்கோட்பாடு மற்றொரு பாங்கில் மக்களுக்கிடையில் அமைந்துள்ளது. சிறுவன் பிஞ்சுக்கு ஒப்பாவான்; பெற்றோர் அதை உரு ஆக்கும் விருக்ஷம் போன்றவர். மாணாக்கன் தனது மனப்பான்மையாலும், செயலாலும் பெற்றோருக்கும் தனக்கும் உள்ள இணக்கத்தை நினைவூட்டுகிறான். அவன் அடையவேண்டிய வளர்ச்சி மனநிலையில் இருக்கிறது. பெற்றோரிடம் அவன் கொண்டுள்ள பக்தி அவனைப் பண்படுத்துகிறது. அவனுடைய நடைமுறையைக்கண்டு களிப்புறும் பெற்றோர்களுடைய எண்ணமும் அவனுடைய மனவளர்ச்சிக்குப் பேராதரவு தருகிறது. மனம், மொழி, மெய் என்னும் மூன்று கரணங்களை உடையவன் மனிதன். இந்த மூன்றின் மூலமாகவும் மாணாக்கன் தாய் தந்தையரை வணங்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவன் தாய் தந்தையரைத் தரையில் வீழ்ந்துவணங்கக்கடமைப்பட்டிருக்கிறான். தன் மனத்தகத்துள்ள எண்ணத்தை இத்தகைய செயல் உறுதிப்படுத்துகிறது. தான் தாய் தந்தையருக்கே உரியவன் என்பதை அத்தகைய வணக்கத்தின் மூலம் உறுதிப்படுத்துகிறான். இது மெய் அல்லது காயத்தால் செய்யும் வணக்கமாகிறது. அதற்குமேல் காயத்தால் அவன் தாய்தந்தையர்க்குப் பணிவிடை செய்யமுடியும். பணிவிடை செய்யும் பயிற்சி ஐந்துவயது பூர்த்தியானதும் துவங்கவேண்டும். குற்றேவல் புரிகின்ற பாங்கில் தாய் தந்தையருக்கு சிறு பணிவிடைகள் பலவற்றைச் சிறுவன் செய்யமுடியும். நாள்தோறும் அவன் அதை மகிழ்வுடன் நிறைவேற்றக் காத்துக்கொண்டிருக்கிறான். தாய் தந்தையருடைய விருப்பத்துக்கு முரண்பட்ட எண்ணம் எதுவும் அவனுடைய மனத்தகத்து உண்டாகலாகாது. உடல் வேறு எனினும் மனநிலையில் சிறுவன் யாண்டும் பெற்றோரைச்சார்ந்திருப்பவன் ஆகின்றான். பெற்றோர் எதைச் செய்யவேண்டுமென்று தனக்குக் கட்டளை இடுகின்றார்களோ அதையே அவன் மகிழ்ந்து நிறைவேற்றவேண்டும். தனக்கு இடும் கட்டளையில் பெற்றோர்கள் முறை தவறிப்போய்விட்டால் அதனால் மாணாக்கனுக்கு ஒரு கேடும் வந்துவிடாது. முறை தவறிய கட்டளையையும் முழுமனதோடு நிறைவேற்றுவது அவனுடைய சீரியசெயலாகும். வேடன் அம்பை எய்கிறான். இலக்கைவிட்டு அம்பு தவறிப்போய்விட்டால் அது அம்புக்குச் சிறுமையாகாது. வேடன் கையில் கருவியாய் இருப்பதே அதற்கு அமைந்த சிறப்பு ஆகும். பெற்றோர் கையில் கருவியாய் இருப்பதே சிறுவனுடைய சிறப்பு ஆகிறது. இப்படிச் செய்து வருங்கால் மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களால் அவன் பெற்றோரைப் போற்றுபவன் ஆகிறான். பெற்றோ

ரைப்போற்றுது பெருநிலைக்கு வந்தவர்யாரும் இதுவரையில் உலகில் இருந்ததில்லை. பெற்ருேரைப் போற்றிக் கீழ்மையடைந்தவரும் இதுவரையில் உலகில் இருந்ததுகிடையாது. பெற்ருேரைப் போற்றும் செயலில் தீவிர நிலைக்குப்போகுமளவு சிறுவன் ஒருவன் நல்ல மாணுக்கனுக மாறி அமைகின்ருன்.

**குருபக்தி**

தாய் தந்தையரைப் போற்றிப் பழகிய மாணுக்கன் அப்பயிற்சியுடன் நின்று விடுவதில்லை. அவன் அதை இன்னும் விரிவுபடுத்துகிருன். மாணுக்கனுடைய அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாய் இருப்பவர் ஆசிரியர். ஆசிரியரிடமிருந்து சிறுவன் மனபரிபாகத்தைப் பெறுகிருன். அது வியாபார முறையில் அமைவதன்று. கொடுத்த விலைக்கேற்ற பொருளை எதிர்பார்ப்பது வியாபாரம். மனபரிபாகமோ அதை நாடுபவனுடைய மனத்தூய்மைக்கும், பணிவுக்கும் ஏற்றதாகிறது. தாய் தந்தையரைப் பேணுவது போன்றே குருபக்தியையும் வளர்ப்பது அவசியமாகிறது. குருபக்தி மேலோங்குமளவு மனத்தெளிவு உண்டாகிறது; மாணுக்கன் மனத்தகத்து மாசு இல்லாதவன் ஆகின்ருன். அத்தகையவனுக்கு ஆசிரியருடைய ஆசியும் இயல்பாகவே ஊற்றெடுத்து வருகிறது. குருபக்தி இல்லாதவனுக்கு பிறவிப்பேறு ஆக அமைந்துள்ள அறிவு தானே மழுங்கிப் போய்விடுகிறது. குருபக்தி உடையவனுக்கு பிறவியிலேயே அறிவு அமையாதுபோய்விட்டாலும் நாளடைவில் அது உரு எடுக்க ஆரம்பித்துவிடுகிறது. அறிவை வளர்ப்பதற்கு குருபக்திக்கு நிகரான உபாயம் இல்லை. தாய் தந்தையருக்குத் தருகின்ற வணக்கத்தையும், அதற்குமேலான வணக்கத்தையும் குருவிடம் காட்டுவது சான்ருேர்களுடைய செயலாக இருந்து வந்திருக்கிறது.

ஜகத்குரு ஆதிசங்கரருக்கு முக்கியமான சிஷ்யர்கள் நான்குபேர் அமைந்திருந்தனர். அவர்களில் தோடகாசாரியர் என்பவர் ஒருவர். ஆரம்பத்தில் அவர் அறிவிலியாயிருந்தார். புகட்டுவது ஒன்றும் அப்பொழுது அவருக்கு விளங்காதிருந்தது. ஆனல் குருபக்தி அவரிடம் மிகைபட இருந்தது. குருபக்தியில் நாளடைவில் நிறைஞானம் அவருக்கு வந்துவிட்டது. ஏகலைவன் என்பவன் குருபக்திக்கு மற்றொரு சான்று ஆகிருன். துரோணசாரியரிடம் வில்வித்தை கற்க அவன் சென்ருன். ஆனல் ஆசாரியர் அவனுக்கு அதைக் கற்பிக்க மறுத்துவிட்டார். துரோணசாரியரிடம் குருபக்தி வைத்து ஏகலைவன் அதை முற்றும் கற்றுவிட்டான். அர்ஜுனனுக்கு அவன் நிகர் ஆய்விட்டான். அதை அறிந்த துரோணசாரியர் ஏகலைவனுக்கு அஸ்திரவித்தையில் திறமை எப்படி வந்தது என்று கேட்டார். 'தங்களிடம் கொண்ட பக்தியால்' என்ருன் அவன். 'அப்படியானல் குருதக்ஷிணை கொடுப்பாயா?' என்ருர். ஏகலைவன் அதற்கு இசைந்தான். வலதுகைப் பெருவிரலை தக்ஷிணையாக அவர் வாங்கிக்கொண்டார். மாணுக்கன் மகிழ்வுடன் அதைக் கொடுத்தான். அவனுடைய குருபக்தியை உலகுக்கு எடுத்துக்காட்டுதற்கு துரோணர் அவ்விதம் செய்தார். சில வேளைகளில் குருஸ்தானத்தில் இருப்பவர் மாணுக்கனுடைய வணக்கத்துக்குத் தகுதியற்றவராக இருக்கலாம். ஆனல் அவர் வணக்கத்துக்குத் தகுதியற்றவர் என்ற எண்ணம் மாணுக்கனுடைய மனதில் உதிக்கலாகாது. 'எனக்குக் கல்வி புகட்டும் ஆசிரியரிடத்தில் குணக்கேடு ஏதோ இருக்கிறதென்று குற்றம் காணும் மனப்பான்மை என் மனத்தகத்து வந்துவிடலாகாது. குணத்தையே காணும் நல்லியல்பு என் உள்ளத்தில் வடிவெடுக்கவேண்டும். அடக்க ஒடுக்கத்துடன் ஒழுகி ஆசிரியரிடமிருந்து நல்லறிவை வாங்குவதே என்கடமை' என்று மாணுக்கன் எண்ணிக் கொள்ளவேண்டும். இத்தகைய இயல்பை வளர்த்துவரும் மாணுக்கன் நல்ல மாணுக்கனுக உரு எடுத்து வருகிருன்.

(தொடரும்)




## 36. சுக்கிரீவ பட்டாபிஷேகம்

[ T. R. ராமநாத சாஸ்திரி, M. A., வித்வான் R. வேங்கடசாமி ]

### வால்மீகி கண்டவிதம்

வாலியின் வீழ்ச்சியை அறிந்ததும் தாரை ஓடிவந்தாள். 'அங்குச் செல்லவேண்டாம். அங்கதனுடன் ஊர் திரும்புங்கள்' என்று அச்சமுற்று எதிரில் வந்த வானரர்களின் தடையையும் கருதாது சென்ருள். தரையிற் சாய்ந்திருந்த கணவனுகிய வாலியைக் கண்டாள். நீரைப்பொழிந்து ஓய்ந்துபோன வெண்முகிலோ, காற்றினல் சிதறுண்ட கார்மேகமோ, புலியினல் கொலையுண்ட கானரசன் சிங்கமோ எனத் தோற்றமளித்த வீரன் வாலியைக் கண்டாள். மயக்கமுற்ருள். தரையில் சாய்ந்தாள். எழுந்தாள். தழுவினுள். புலம்பினுள். ''நாதா! சுக்கிரீவனுடைய மனைவியைக் கவர்ந்தாய். அவனையும் துரத்தினுய். அதன் பயனை இப்பொழுது பெற்ருய். நான் கூறிய நன்மொழிகளைப் புறக்கணித்தாய். ராமா! இத்தகாத செயலை நீ செய்ய விரும்பமாட்டாய். காலம் உன்னுடைய உள்ளத்தையும் மாற்றிவிட்டது. சுக்கிரீவா! உன் எதிரி மறைந்தான். நீ இன்புறு. அங்கதா! தந்தையை நன்கு பார்த்துவிடு. நாதா! நான் தவறு செய்திருந்தால் மன்னித்துவிடு'' என்றெல்லாம் பிதற்றினுள். தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் கணவனின் அருகில் அமர்ந்தாள்.

தலைவர் ஹனுமான் முன் வந்தார். அரிய அரும் ஆறுதல்மொழிகளைக் கூறலானர்.

गुणदोषकृतंजन्तुः स्वकर्मफलहेतुकम् ।
अव्यग्रस्तदवाप्नोति सर्वंप्रेत्यशुभाशुभम् ॥

''தேவீ! எல்லாப் பிராணிகளும் தாம் செய்த நல்ல, தீய செயல்கட்கேற்ற பயனை இறந்த பின்னர் பெறுகின்றன. இறந்துபோகும் வாலி இப்பொழுது வருந்தும் நிலையில் இருக்கிருனே, மகிழும் நிலையில் இருக்கிருனே நாம் அறியோம். இதை உணர்ந்து, மக்கள் எப்பொழுதும் நற்செய்கைகளையே செய்யவேண்டும். வாலிபோன்ற வீரனின் நிலையே இதற்குச்சான்று. ஆயினும் வாலி நற்கதி பெறுவான் என்பதில் ஐயமில்லை. நீ அங்கதனை அரசனுக்கிக்கொள்'' என்று சொன்னர்.

ஆனல் தாரை அதை ஏற்கவில்லை. ''ஆயிரம் அங்கதர்கள் வந்தாலும் ஒரு வாலிக்கு நிகராகமாட்டார்கள். அங்கதனை கவனிக்கும் பொறுப்பு இனி சுக்கிரீவனைச் சேர்ந்தது. எனக்கு நாதனே கதி'' என்று கூறினுள் தாரை.

மயக்கந்தெளிந்த வாலி எதிரில் பணிவுடன் நின்ற சுக்ரீவனைக் கண்டான். மனம் இளகியது. அன்பொழுகப் பேசினன். ''சுக்கிரீவா! விதி என்னைத் தவருன பாதையில் இழுத்துச் சென்றது. அறிவை இழந்தேன். உன்னைத் துன்புறுத்தினேன். நீயும் நானும் ஒரே நேரத்தில் இன்புறக்கூடாது, ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழக்கூடாதென்பது விதியின் கருத்துப்போலும். நான் விரைவில் உயிர், அரசாங்கம், செல்வம், இகழ்ச்சி இவற்றைத் துறக்கப் போகிறேன். ஆட்சியை ஏற்றுக்கொள். உயிரினும் உயர்வாக நான் நேசிக்கும் அங்கதனை அன்புடன் நேசி. அரக்கர்களைக் கொல்லுவதில் அவன் உனக்கு உதவிபுரிவான். தாரையின் சொல்லையும் மதித்துநட. ராமருக்கு அளித்த வாக்கை நிறைவேற்று. என் பொன்மாலையைப் பெற்றுக்கொள்''

என்று சொல்லியவாறே மாலையைக்கழற்றிக் கொடுத்தான். சுக்கிரீவனும் அதை ஏற்றுக் கொண்டான்.

"அங்கதா! என்னிடம் நடந்த மாதிரி சுக்கிரீவனிடம் நடந்துகொள்ளாதே. அவனுடைய பகைவர்களை விலக்கு. அவன் நண்பர்களை நேசி. நடுநிலைமையிலேயே பழகு. சிற்றப்பன் என்று உரிமைபாராட்டாதே. கவனத்துடன் வாழ்" என்று கூறியவாறே ஓய்ந்தான் வானரர்கோன்.

உடனே எல்லா வீரர்களும் புலம்பினர். வீரனின் பெருமையைப் புகழ்ந்தனர். துயரந் தாங்கமுடியாது தாரை கதறினாள். வீரனான கணவனை மணப்பவர்கட்கு இதே நிலை, என்றாள். செல்வமிருந்தும் மைந்தரிருந்தும் கணவனில்லாவிடில் மங்கை இகழப்படுகிறாளென்று வருந்தினாள். அங்கதனை வணங்கச் செய்தாள். 'ஆசி கூறாதிருக்கிறீரே' என்று மடிந்த நாதனைக் கடிந்துகொண்டாள்.

தாரையின் மொழிகளினால் சுக்கிரீவனுடைய உள்ளம் தவித்தது. வருந்தினான். தன் செயலிற்காகத் தன்னைத் திட்டிக்கொண்டான். ராமரிடம் சென்றான். "அரசகுமாரரே! நீர் சொல்லைக்காத்தீர். என் மனம் அரசாங்கத்திலோ, இன்பங்களிலோ செல்லவில்லை. வாலியைக் கொன்றபின்னர் சுவர்க்கத்தைப் பெறுவதைக் காட்டிலும், மலையில் மறைந்து வாழ்ந்த நிலையையே சிறப்பாகக் கருதுகிறேன். நான் தோல்வியுற்ற நேரத்தில் 'உன்னைக்கொல்ல மனமில்லை' என்றான் என் அண்ணன். இழிவான மனப்பான்மை கொண்ட நானோ, அவனைக் கொல்லுமாறு உம்மைத் தூண்டினேன். 'இனி இவ்வாறு செய்யாதே' என்றார் வாலி. அவர் மகாத்மா, அறவாழ்வுடையவர். நான் துராத்மா, வானரன். நான் இனி வாழ விரும்பவில்லை. தீயிற் குதித்து உயிரைத் துறப்பேன். வீரவானரர்கள் சீதையைத் தேடி உம்மிடம் ஒப்புவிப்பர். துரோகியான நான் மடிவதற்கு அனுமதிகொடும்" என்று ராமரிடம் கெஞ்சினான்.

உடன்பிறந்தாரின் பெருமையை உணர்ந்து ராமரும் கண்ணீர் பெருக்கினார்.

அந்நேரத்தில் தாரை ராமரிடம் வந்தாள். என்றும் கண்டிராத அழகிய உடலமைப்பினாலும், ஒளியினாலும் ராமரென உணர்ந்தாள். "ராமா, நீ அறிவிற்கும் உள்ளத்திற்கும் எட்டாதவன், விவரிக்கமுடியாதவன், புலன்களை வென்றவன், அறவாழ்வு வாழ்பவன்; பொறுமையில் பூமிக்கு நிகரானவன், புகழ் குன்றாதவன், மனித வடிவத்தில் தோன்றிய தேவன். நான் செய்துகொள்ளும் வேண்டுகோளை நிறைவேற்று. என் கணவன், வீரன் வாலியைக்கொன்ற அம்பை என்மீது செலுத்து. நானும் உயிரைத் துறந்து என் கணவன் சென்றுள்ள ஸ்வர்க்கலோகத்திற்குச் செல்வேன். என் மீது வாலியின் அன்பு மிகவும் அதிகம். நானில்லாவிடில் ஸ்வர்க்கலோகமும் அவருக்கு மகிழ்வைத் தராது. 'மனைவியில்லாத வாழ்வு எவ்வளவு கடினம்' என்பதை ஸீதையை இழந்து வருந்தும் நீ நன்கு அறிவாய். பெண்ணைக் கொல்வதெப்படி என்றும் நீ கலங்கவேண்டாம். என் கணவனே நான். நானே என் கணவன். கணவனும் மனைவியும் ஒன்றென்று வேதங்கள் கூறுகின்றன. ஆதலால் என்னை வாலியுடன் சேர்த்துவிடு" என்று தாரை ராமரிடம் கெஞ்சினாள்.

அருள் நிறைந்த கடாக்ஷத்தைச் செலுத்திக்கொண்டே பிரபு பேசலானார். "வீரனில்லாளே! மூன்று உலகங்களிலுள்ள எவரும் விதியின் போக்கை மீறமுடியாது. இறைவன் விருப்பப்படியே நடந்துகொள்ள வேண்டும். நாம் விரும்பினாலும், நமக்கு ஆற்றலும் வசதிகளும் இருந்தாலும் விதிக்குமாறாக எதையும் நாம் செய்யமுடியாது. காலன் எவனுக்கும் உறவினனாகான். அறம், பொருள், இன்பம் ஆகியவையும் காலத்திற்குக் கட்டுப்பட்டே கிட்டும். வாலியும் காலம், விதி இவற்றிற்குக் கட்டுப்பட்டவன். உயிரில் அவன் ஆசைவைக்காமல்



தண்டனைபெற்றுத் தூய்மையை அடைந்து ஸ்வர்க்கலோகத்தைப் பெற்றான். மாண்டவனுக்கு அழுவது முறைதான். அதைச் செய்தாயிற்று. மீதிச் சடங்குகளைச் செய். அங்கதனைக் கண்டு இன்புறு" என்றார். தாரையும் சுயநிலையைப் பெற்றாள்.

பிறகு ராமலக்ஷ்மணர்களின் உத்திரவின்படி சுக்கிரீவன் அங்கதனை முன்னிட்டுக் கொண்டு தானே வாலியின் இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தான்.

"உடன் பிறந்த சுக்கிரீவன் வருந்தியது இயற்கையேயாகும். ஆனால் பிரபுவும் வாலியின் சாவு விஷயத்தில் சொல்லொணாத் துயரை அடைந்தவராய்ச் சடங்குகளைச் செய்யுமாறு தூண்டினார். என்னே வாலியின் பாக்கியம்!" என்று வால்மீகியே வாலிபெற்ற பேற்றை வியக்கிறார்.

நனைந்த ஆடை 'உலருவதற்கு முன்னதாகவே சுக்கிரீவன் ராமரிடம் வந்தான். பிரம்மாவைச்சூழ்ந்து முனிவர்கள் வீற்றிருப்பதைப்போல் ராமரைச் சூழ்ந்து வீரவானரர்கள் பணிவுடன் வீற்றிருந்தனர். அவர்களுள் பொன்மலைக்கொப்பான உடலும், இளங்கதிரவனுக்கு நிகரான முகமும் பெற்ற வாயுவின் புதல்வர் ஹனுமார் கைகூப்பியவாறு விண்ணப்பித்துக்கொண்டார்.

"பிரபுவே! இப்பெரிய வானர ராஜ்யத்தை உம்முடைய அருளினாலேயே சுக்கிரீவன் பெறமுடிந்தது. பல சிறந்த வீரர்கள் இந்த வானரசேனையில் இருக்கின்றனர். நீர் அனுமதிகொடுத்தால் சுக்கிரீவன் இந்த நகரிற்குள் நுழைவான். பச்சிலைச் சாறுகளினாலும் மணப்பொருள்களாலும் அபிஷேகம்செய்து கொண்டு பின்னர் மிகுதியான செயல்களில் கவனம் செலுத்துவான். இங்குள்ள அழகிய மலைக்குகைக்குள் நீங்கள் சுகமாக வசிக்க வேண்டும். அரசன் சுக்கிரீவன் பன்முறைகளிலும் உங்களுக்குப் பணிபுரிவான். உங்களுடைய தொடர்பு பெற்றமையினால் சுக்கிரீவன் அதிகமானபுகழைப்பெறுவான்" என்று வேண்டினார்.

பேச்சுத் திறமையுள்ள ராமர்:

'चतुर्दश समाः सौम्य ग्रामं वा यदिवा पुरम्।
नप्रवेक्ष्यामिहनुमन् पितुर्निर्देशपारगः॥

"ஹனுமானே! என் தந்தைக்கு நான் அளித்த சொல்லைப் பாதுகாப்பதற்காக 14 ஆண்டுகள் ஊரிற்குள்ளோ நகரிற்குள்ளோ நுழையமாட்டேன். இது உறுதி. ஆதலால் உடனே முறைப்படி சுக்கிரீவனுக்கு முடிசூட்டு. தந்தை வாலிக்கு நிகரான வலிமையைப்பெற்றவனும் வாட்டமுறா உள்ளத்தினனுமான அங்கதனுக்கு இளவரசு நிலையை அளித்துவிடு. மழை மாதங்கள் நான்கையும் நான் இந்த மலைக்குகையிலேயே கழித்துவிடுகிறேன். இந்நாட்களில் முயற்சி செய்வது முடியாது. கார்த்திகை மாதம் வந்ததும் ராவணனைக் கொல்வதற்கேற்ற முயற்சியைச் செய்" என்று சொல்லிமுடித்தார்.

பிரபுவின் அனுமதியைப் பெற்றதும் சுக்கிரீவன் கிஷ்கிந்தையில் நுழைந்தான். ஆயிரக்கணக்கான குரங்குகள் அவனுடன் சென்றன, வணங்கின. உடன் பிறந்தான் வாலியின் அந்தப் புரத்திற்குள் நுழைந்த சுக்கிரீவனைத் தூய நீர்களினால் வானரர்கள் நனைத்தனர். தங்கப்பிடியைக் கொண்ட வெண்குடையை ஒரு வானரன் ஏந்தினான். வெண்சாமரங்களை இருவர் ஏந்தி வீசினர். ரத்தினங்கள், தானியங்கள், பால் மரங்களின் முளைகள், மலர்கள், வெண்மையாடைகள், வெள்ளைப் பூச்சு, அரிசி, பொன், தேன், நெய், தயிர், புலித்தோல், சிறப்புற்ற காற்சுவடுகள் முதலியவற்றை ஏந்திய பதினாறு இளங்கன்னிகள் சுக்கிரீவனைச் சேவித்தனர். அறிஞர்கள் தீயில் முறைப்படி ஹோமம் செய்தனர். இவ்வாறு அபிஷேகம் செய்துகொண்ட சுக்கிரீவன், ராமருடைய விருப்பத்தை மதித்து அங்கதனை இளவரசனாக்கி அபிஷேகம் செய்தான். சுக்கிரீவனுடைய நேர்மையை எல்லோரும் புகழ்ந்தனர். சுக்கிரீவன் மறுபடியும் ராமரிடம் சென்று தான்

முடியேற்றதையும் அங்கதனுக்கு இளவரசு பதவியளித்ததையும் தெரிவித்துக் கொண்டான். பிறகு பல்லாண்டுகளாகத் தான் விரும்பிய ஆட்சியையும் மனைவி ருமாவையும் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தான்.

ராமரும் மலைச் சிகரத்தில் அமைந்திருந்த ஓர் அழகிய குகையில் மழை நாட்களைக் கழிக்கத் தீர்மானித்தார்.

### துளஸி நோக்கிய விதம்

வாலியின் முடிவுச் செய்தி கிஷ்கிந்தையில் விரைவிற் பரவியது. எல்லா வானரர்களும் உள்ளங் கலங்கி ஓடி வந்தனர். வாலியின் பட்டமகிஷி தாரையும் நடுங்கியவாறு வந்தாள். உடலுணர்வையே அவள் இழந்திருந்தாள். கூந்தல் விரிந்து தொங்கிற்று. அதையும் அவள் கவனியாது வந்தாள். ராமர் அவளுடைய நிலையைக் கண்டு இரக்கங் கொண்டார். அவளுடைய உள்ளத்தில் நிறைந்திருந்த மாயையை, அறியாமை இருளைத் தன் பெருமையினால் அகற்றினார். ராமருடைய உபதேச மொழிகளைப் பெறுவதற் கேற்ற நிலை ஏற்பட்டவுடன் அறிவுரையைப் பகர்ந்தார். "பேதையே! இவ்வுடல் மிகவும் இழிவானது. இதை பூமி, தண்ணீர், ஒளி, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்கள் அமைத்துள்ளன. இந்த உடல் உன் எதிரிலேயே முன் போலவே தரையிற்கிடக்கிறது. ஆனால் அவ்வுடலில் ஏதோ ஒன்று இல்லை என்றுதான் நீ வருந்துகின்றாய். அதுதான் ஆத்மா. ஆத்மாவோ அழிவற்றது. எங்கும் நிறைந்தது. அதை எவரும்அழிக்கமுடியாது. ஆகவே அதற்காகவும் நீ அழுவது முறையல்ல. எதைக் கருதி நீ அழுகிறாய்? சொல்" என்று கேட்டார்.

தாரையின் உள்ளத்தில் அவ்வுரை நன்கு பதிந்தது. அறியாமை அகன்று நல்லறிவு தோன்றியவுடன் தாரை ராமரின் திருவடிகளில் பணிந்து "பிரபுவே! உம்மிடம் என் மனம் என்றும் ஈடுபட்டிருக்குமாறு அருள் புரியும்" என்று வேண்டினாள்.

ராமருடைய அனுமதியைப் பெற்ற பின்னர் சுக்கிரீவன் வாலியின் இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தான். ராமருடைய திருவடிகளை வணங்கி நின்றான். ராமர் லக்ஷ்மணனையழைத்தார். "இளையோனே! நீயும் கூடச் செல். சுக்கிரீவனுக்கு முடி சூட்டு. அவனை அரசனுக்கு" என்று ஏவினார். ராமருடைய நேர்மையை அறிந்த வானரர்கள் ராமரை வணங்கிப் புகழ்ந்து கொண்டே சென்றனர்.

இளையோன் பெரியோர்களின் அவையை ஏற்படுத்தினான். சுக்கிரீவனை அரசனாகவும் அங்கதனை இளவரசனாகவும் அமர்த்தினான்.

தடையின்றி எங்கும் பெருக்கெடுத்துப் பாகுபாடின்றிப்பாயும் ராமருடைய கருணைப் பிரவாகத்தைக் கண்டு மகிழ்ந்தும், மக்களின் அறியாமையைக் குறித்து வருந்தியும் துளஸி சொல்கிறார்.

"உலகில் தேவராகிலும், மனிதராகிலும் யாவரும் சுயநலங் கருதியே ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டுகின்றனர். உதவி செய்வானென்றோ, செய்தானென்றோ நேசிப்பது இயற்கை. ஆசிரியர், தந்தை, அன்னை, உறவினர், தலைவன் ஆகியவரும் இந்நிலையிலுள்ளவரேயாவர். காரணமின்றி நேசிப்பவர் கிடையாது. இவர்களுள் ராமருக்கு நிகரானவர் எவரையாவது காண்பது எவ்வாறு இயலும்? சுக்கிரீவனால் பிரபுவிற்கு ஆக வேண்டியது உண்டா? ஆயினும் ராமர் அவனை ஆதரித்தார். இரவும் பகலும் வாலியைப் பற்றிய கவலையினால் மனமொடிந்திருந்தவன், வாலியினிடம் பெற்ற ஏராளமான காயங்களின் வடுக்கள் நிறைந்த உடலினன் – அந்த சுக்கிரீவனை வானரராஜனாக்கினார். எவரும் வெல்ல முடியாத வாலியைக் கொன்றார். இந்தப் பெருமானை ஏன் மக்கள் மறக்க வேண்டும், துயரத்துக்கு ஆளாக வேண்டும்?" என்று துயருறுகிறார்.

சுக்கிரீவனுக்கு உபதேசங்களைச் செய்து அனுப்பிய பின்னர் ராமர் மலைக்குகையில் வசிக்கலானார்.



158815

### கம்பன் கண்ட விதம்

#### வாலி பெற்ற பேறு

இராமனுடைய செய்கையை அங்கீகரித்த வாலி தான் பெற்ற பேற்றினை எண்ணி எண்ணிப் பெருமிதமடைந்தான். இராமன் தன்னை அழித்துவிட்டதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. தனக்கும் தம்பிக்கும் இடையே உள்ள பகையைப் போக்கியது மட்டும் அன்றி இருவர்க்கிடையே பெருநட்பினை உண்டாக்கிவிட்டான் இராமன் என்று எண்ணுகிறான் வாலி. இடையே தன்னைப் பகைத்த தம்பி தனக்குச் செய்த பேருபகாரத்தை எண்ணித் தம்பிக்குப் பெருநன்றி செலுத்துகிறான்.

" வெற்றர செய்தி யெம்பி
வீட்டர செனக்கு விட்டான் "

என்பது வாலியின் வாக்கு. சுக்கிரீவன் பயனற்ற இந்த உலகரசை அடைந்து தனக்கு அந்தமில் இன்பத்தை அளிக்கும் மோட்ச சாம்ராஜ்யத்தை அளித்துவிட்டதாக எண்ணித் தம்பியின் தியாகத்தை மெச்சுகிறான்.

இத்தகைய பேறு தனக்குக் கிடைத்தது தான் முன் செய்த தவத்தின் பயன் என்பது வாலியின் முடிபு.

" யான் தவ முடைமையால்
இவ்விறுதி வந்திசைந்தது "

என்று தன் தவப்பெருமையையும் கணக்குப் போடுகிறான். தான்பெற்ற இன்பம் தம்பியும் பெற வேண்டுமென்று எண்ணி இராமனை

மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த!

என்று அறிவுறுத்துகிறான். மார்பில் பாய்ந்துள்ள வாளியைப் பிடித்த பிடி இத்துணை நேரம் வாலிக்கு இவ்வுலக ஞாபகத்தை ஊட்டிக்கொண்டிருந்தது. அவ்வுலக இன்பம் பெறும் ஆவலிலே அவ்வாளியை அப்படியே கைந்நெகிழ விட்டுவிட்டான் வாலி.

.........உலகை மேழும் ஏத்தின; இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக் கப்புறத் துலகனானான்.

#### தாரையின் புலம்பல்

கணவன் இறந்த செய்தியைத் தாரை கேள்விப்பட்டாள். ஓடிவந்தாள். கணவன் மேல் கதறி வீழ்ந்தாள்.

" வேல்விழித் தாரை கேட்டாள்
வந்தவன் மேலின் வீழ்ந்தாள் "

தாரை பன்னிப் பன்னி அழுதாள். வாலியின் வலிமையில் தனக்கிருந்த பெரு நம்பிக்கையில் வாலி இறந்துபட்டான் என்ற எண்ணமே அவளுடைய உள்ளத்தில் எழவில்லை. இறந்துபட்டிருப்பது வேறு வாலியோ என்று ஐயுறுகின்றாள்.

நீரும் மேருவும் நீநெ ருக்கினால்;
மாறோர் வாளிஉன் மார்பை ஈர்வதோ?
தேறேன் யான்இது தேவர் மாயமோ?
வேறோர் வாலிகொ லாம்வி ளிந்துளான்!

மென்மேலும் துயரம் மேலிட்ட தாரை மூர்ச்சித்து விழுந்தாள். பணிப்பெண்கள் எடுத்துச் சென்று படுக்கையில் சேர்த்துப் பணிவிடை செய்து மூர்ச்சை தெளிவித்தனர். இதற்கிடையில் சுக்கிரீவன் வாலிக்குச் செய்த ஈமக்கடன் விஷயத்தைத் தெளிவுறச் சொன்னான் அனுமன்.

#### அண்ணலின் அறிவுரை

சுக்கிரீவனின் முடி சூட்டு விழா பெருஞ் சிறப்புடன் முடிவடைந்த பின், அரசு செலுத்த வேண்டிய முறைகளைப் பற்றி சுக்கிரீவனுக்கு அறிவுறுத்தத் தொடங்கினார் அண்ணல் ராமன். நீதிகளை வேத நூல்களிலிருந்தும் அல்ல, அரசியல் சட்ட நூல்களிலிருந்தும் அல்ல, தம் சொந்த அனுபவத்திலிருந்து சான்று கூறினார் இராமர்.

சிறு வயதிலே நடந்த சம்பவமொன்று அவருடைய ஞாபகத்திற்கு வந்துவிட்டது. அன்றொரு நாள், அரண்மனைப் பணிப்பெண் ஒருத்தி கூனிக் குறுகி நடந்து வந்தாள். பெயர் மந்தரை. மந்தரையின் முதுகு இராமனுக்குப் பார்ப்பதற்கு வேடிக்கையாயிருந்தது. வில்லையும் மண் உண்டையையும் எடுத்தான். குறிபார்த்து அடித்து விட்டான்

கூனியின் முதுகில். அரசகுமாரனல்லவா! பொங்கி வந்த சினத்தை அடக்கி வைத்துக் கொண்டாள் கூனி. பட்டாபிஷேக தினத்தன்று கைகேயிக்குத் தூபம் போட்டுத் தன்னைக் காட்டுக்கு அனுப்பி விட்டாள். சிறியோர் என்றிகழ்தல் எத்துணைத் தவறான செயல் என்னும் பாடத்தை அப்பொழுது கற்றுக்கொண்டான். அதேபாடத்தைத்தான் சுக்கிரீவனுக்கும் போதிக்கின்றான் இப்பொழுது.

சிறியர் என்று இகழ்ந்து நோவு
செய்வன செய்யல் மற்றுஇந்
நெறி இகழ்ந்து யான் ஓர்தீமை
இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறிய தாம் மேனி ஆய
கூனியால், குவவுத் தோளாய் !
வெறியன எய்தி நொய்தின்,
வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்.

*நோவு செய்வன — பிறர்க்குத் துன்பந் தருவன.*
*இந்நெறி — அஹிம்ஸை மார்க்கம்.*

**சுக்கிரீவனின் அரசாட்சி**

இராமபோதனையைப் பெற்றபின் இராமனைத் தன்னோடு தங்குமாறு பன்முறை வேண்டினான் சுக்கிரீவன். இராமன் அதற்கு மறுத்துவிட்டு அங்கதனையும் அழைத்து சுக்கிரீவன் பின் சென்று நன்முறையில் நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார். அண்ணலின் ஆசியைப் பெற்றுக்கொண்டு அகன்று கிஷ்கிந்த மலைக்குச் சென்றான் சுக்கிரீவன். சுற்றத்துடன் தாரையிடம் சென்றான். தாய் என அவளை வணங்கினான். தனக்குத் தந்தை போன்று வாலியை எண்ணி அவன் இறக்குந்தருவாயில் கூறிய அறிவுரைகளை அகத்துட்கொண்டான். அவற்றைக் கைக்கொண்டு அரசுபுரியத் தொடங்கினான்.

ஆரியன் அருளிற் போய், அவ்
அகல்மலை அகத்த னுய
சூரியன் மகனும், மானத்
துணைவரும் கிளையும் சுற்றத்,
தாரையை வணங்கி, அன்னாள்
தாயெனத் தந்தை முந்தைச்
சிரியன் சொல்லே என்னச்
செவ்விதின் அரசு செய்தான்.

*ஆரியன் — இராமன்; சூரியன் மகன் — சுக்கிரீவன்.*

இப்பகுதியில், வாலி தான் பெற்ற பேற்றினை எண்ணி மகிழ்தல், வாலியின் வலிமை எண்ணி அவனுடைய இழப்பிற்கு தாரை அளவிலாத்துயரை அடைதல், அரசனாகப் போகும் சுக்கிரீவனுக்கு அண்ணலின் அறிவுரை, சுக்கிரீவன் ஆன்றோர்களின் அறிவுரைப்படி ஆட்சி புரியத் தொடங்குதல் ஆகிய செய்திகளனைத்தும் கம்பன் கவிதையில் கற்று எண்ணி இன்புறற்பாலது.

## பொங்கல் வாழ்த்து

**பொன்னுலகும் போற்றிடுநம்**
**குருதேவர் அளித்திட்டார்**
**மின்னுகின்ற ஞானமெனும்**
**பொங்கல் புதுஅரிசி**
**அன்னை அதில் அருள்தீம்பால்**
**அளைந்திட்டு ஆக்கியிட**
**பின்னை விவே கானந்தன்**
**வழங்கிட்டான் வையகத்தே.**

**மூவருளம் பயின்றிட்ட**
**மூவாத அமுதினையே**
**தாவருஞ்சீர்த் தைத்திங்கள்**
**நன்னாளில் தகவுடையீர்**
**ஆவலுடன் அருந்திடுவீர்**
**ஆன்றவறி வன்புடனே**
**மாவலிமை பெற்றிடுவீர்**
**மாநிலத்தில் வாழியரோ !**

**— ரா. வேங்கடசாமி**




*[ அன்பர்கள் தமக்குற்ற சந்தேகங்களை ஆசிரியருக்கு எழுதியனுப்பலாம் ]*

**கேள்வி: (91)** *தந்தை செய்த பாப புண்ணியத்தில் தம் மக்களுக்கும் பங்கு உண்டா?*
ம. க. ம.

உலக இயல்பில் வைத்து ஆராய்ந்து பார்த்தால் தாய் தந்தையர் செய்யும் குற்றத்தில் அவர்களுடைய புதல்வர்களுக்குப் பங்கு இல்லை. களவாடுதல் என்னும் குற்றத்தை ஒரு மனிதன் செய்து விட்டால் அதை முன்னிட்டு அவனுடைய மகனைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள சட்டத்தில் இடமில்லை. தான் செய்த குற்றத்துக்குத் தானே பொறுப்பாளி.

வினைப்பயன் இதே கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஜீவனும் தன் வினைப்பயனுக்குத் தானே பொறுப்பாளி ஆகின்றான். ஆனால் ஒவ்வொரு ஜீவனும் தன்னை மற்றவர்களோடு பந்தப்படுத்திக் கொள்ளுமளவு மற்றவர்களுடைய வினைப்பயனைத் தானும் சிறிதளவு அனுபவித்தே ஆகவேண்டும். நோய்வாய்ப்பட்டிருக்கும் பெற்றோர்க்கு ஒருவன் பிள்ளையாகப் பிறக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். பெற்றோரிடம் உள்ள நோய் பிள்ளைகளுக்கு வருவதுண்டு. தம் வினைப்பயனால் பெற்றோர்கள் நோயாளிகள் ஆனார்கள். மைந்தன் நோயாளியாக அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தது தன் வினைப்பயனைப் பொறுத்திருக்கலாம்; அல்லது இவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்ததின் விளைவாக அவர்களுடைய துன்பத்தில் சிறிது தானும் அனுபவித்தே ஆகவேண்டும். பந்தபாசத்தால் உற்றாருடைய வினையைத் தன் வினை போன்று கருதி அதன் பயனை அனுபவிப்பது உயிர்களிடத்துள்ள இயல்பு ஆகும். ஆதலால் ஒருவிதத்தில் தாய் தந்தையருடைய வினைப்பயனை மைந்தனும் அனுபவிக்கிறான் என்றே சொல்லவேண்டும். பற்றுதல் உடையவர்களுக்கு விதவிதமான பாங்கில் வினைப்பயன் வந்தமைகிறது. தாய் தந்தையரின் வினைப்பயன்களை மைந்தன் அனுபவிப்பது அம்முறைகளில் ஒன்று ஆகிறது. ஆனால் பற்றற்றார்க்கு அத்தகைய வினையின் தொடர்பு ஒன்றும் கிடையாது.

**கேள்வி : (92)** ***எங்கள் ஊரில் ஒருவர் வீட்டில் ஒரு நகை திருட்டுப்போய்விட்டது. அதற்கு அவர்கள் ஒரு மந்திரவாதியை அழைத்து வந்தார்கள். அந்த மந்திரவாதி அவர்களுக்குச் சந்தேக முள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். பிறகு ஒரு கிண்ணியை வைத்து என்னமோ மந்திரம் ஓதினான். அந்தக் கிண்ணி ஒருவன் வாயிற்படி வரையிலும் தத்தித்தத்தி ஓடி நின்றுவிட்டது. அந்த மந்திரவாதி அந்த வீட்டிலுள்ளவன்தான் திருடினான் என்றான். இது உண்மையா ?***
ந. பா.

இத்தகைய முறையைக் கையாளுவது அறிவாளிகளுடைய செயல் ஆகாது. இது மிகவும் அநாகரிகமானது, யுக்திக்குப்பொருந்தாதது, தத்துவத்துக்கு முரண்பட்டது. மக்களிடத்துள்ள குருட்டு நம்பிக்கையைப் போலி மந்திரவாதிகள் தங்களுடைய ஜீவனோபாயத்தின் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நேர்மையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நேர்மையாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முயலவேண்டும். பொருள் அகப்படாது போய்விடுமிடத்தும்

அதை அனுபவிப்பதற்குரிய பிராப்தம் அதற்குமேல் தம்மிடத்து இல்லை என்று மனதைச் சமாதானப்படுத்திக்கொள்ள வேண்டும். அசாதாரணமான முறைகளில் மனதைச் செலுத்தி சந்தேகத்தை வளர்ப்பதும், சஞ்சலத்தை உண்டுபண்ணுவதும் பொருந்தாது.

**கேள்வி : (93)** **துறவிகளுக்கு சிறந்த பெருமை கொடுக்கப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் சில இடங்களில் துறவிகளை வரவேற்று மதிப்புக் கொடுப்பதோடு வேறொரு செயலும் நடைபெறுகிறது. அதாவது துறவிகளை ஆசனத்திருத்தி பாதம்கழுவி மலரிட்டு வணங்குகின்றனர். இதனை ஆடவர்கள் செய்வதோடு பெண்களும் செய்கின்றனர். பெண்களில் சுமங்கிலிப் பெண்களும், விதவைகளும் செய்கின்றனர். இந்த பாத பூஜையை வழிபாடாகவே கருதி காஷாயம் போட்டவர்கள் எல்லோருக்கும் செய்யலாம் என்று பெண்களில் சிலர் கூறுகின்றார்கள். இந்த முறை சரிதானா? தன் கணவனுடைய காரியத்தில் முறையான செயல்கள் செய்யாமல் அசட்டை செய்து இல்லறத்தில் வாழும் பெண்கள், துறவிகளுக்கு இத்தகைய மதிப்புக்கொடுத்துச் செய்வது சிவனடியாராகவே பாவித்துச் செய்வதாகும் என்றும் கூறுகின்றனர். சில துறவிகளிடம் கேட்டால் அது விரும்பத்தக்கதல்ல, பெண்களுக்குக்கூடாது என்கிறார்கள். பெரிய புராணத்தில் அப்பூதியடிகள் அப்பரைத் தம் மில்லத்தில் அழைத்து வந்து**

"மனைவியாருடன் மக்கள்
மற்றுமுள்ள சுற்றத்தோர்
அனைவரையும் கொண்டிறைஞ்சி
ஆராத காதலுடன்
முனைவரை உள்ளெழுந்தருளு
வித்தவர்தாள் – முன்விளக்கும்
புனைமலர் நீர்தங்கள்மேல்
தெளித்து உள்ளும்பூரித்தார்"

**என்று பகரப்பட்டிருக்கிறது. அவர் மனைவியாரும் அங்ஙனம் வணங்கினார் என்றில்லை. பெண்துறவி, காஷாயம் போட்டவர்களுக்கும் இத்தகைய செயலை வழிபாடு என்று கூறி பெண்கள் மலரிட்டு வணங்கலாமா?**
**சி. ஓ.**

எல்லா ஜீவர்களையும் கடவுள்சொரூபமாக வணங்குவது ஆத்ம சாதகனுக்குச் சாலச் சிறந்தது. அப்படிச்செய்ய இயலாதவர்கள் கடவுளுடைய மெய்யன்பர்களையாவது கடவுள்சொரூபமாகப் பாராட்டலாம். அப்படிச் செய்வதால் மனபரிபாகம் உண்டாகிறது. இது விஷயத்தில் கணவனும் மனைவியும் முழுதும் ஒத்திருக்கவேண்டும். கணவன் செய்வதைப் பின்பற்றி மனைவியும் பெரியோரைப் போற்றலாம். ஆனால் கணவனைப் புறக்கணித்துவிட்டு மனைவி தன்போக்கில் இத்தகைய செயலில் ஈடுபடலாகாது. கடவுளுடைய அன்பர்கள் ஆண்பாலராகவும் இருக்கலாம், பெண்பாலராகவும் இருக்கலாம். பால் வேற்றுமை பக்திக்கு இடைஞ்சல் அல்ல. தொண்டர் புராணம் முழுதும் பெரியோரைப் போற்றுதற்கு வழி காட்டுகிறது.

**கேள்வி : (94)** **நம்முடைய அரசாங்கம் மதச் சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லப்படுகிறது. இது நடைமுறைக்கு சாத்தியமா?**
**ர. கு.**

நமது அரசாங்கம் மதச் சார்பு அற்றது என்பதனுடைய பொருள் மதத்தில் நம்பிக்கை இல்லாதது என்பதல்ல. இந்தியாவில் பல மதங்கள் இருக்கின்றன. இவைகளுள் அரசாங்கத்துக்குரிய மதம் இன்னதென்று தனியாக ஒன்றைப் பொறுக்கி எடுத்துக் கொள்ள நமது அரசாங்கம் ஆயத்தமாய் இல்லை. ஒன்றைப் பொறுக்கி எடுத்துக் கொள்வது ஓரம்சார்வதற்கு ஒப்பாகும். மத விஷயத்தில் நடுநிலை வகிப்பதே நம் அரசாங்கத்தின் கொள்கையாகும். இப்பொழுது நம் சமுதாயத்தில் உள்ள மத வேற்றுமைகளை ஒழுங்குப்படுத்துதற்கு இக்கொள்கை நாளடைவில் பெரிதும் துணைபுரியும்.

**கேள்வி: (95)** **உலகில் நாம் கர்மாவையும் அதன் பலனையும் அடுத்து நிகழ்வதைக் காண்கிறோம். ஆனால் மனிதனுடைய வாழ்வில் முன் ஜன்மத்தின் கர்ம பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிப்பதாக வேதாந்தம் சொல்லுகிறது. இது ஏன்? கர்மாவும் அதனுடைய பலனும் ஏன் உடனே ஏற்படாது முந்தியதும், பிந்தியதுமான ஜன்மங்களில் பிரிந்து போகிறது?**
**ந. ஓ.**



சில வினைகளுக்கு உடனே பயன் வந்து அமைகின்றது. வேறு சில வினைகளின் பயன் நெடுநாளைக்குப் பிறகு கிட்டுகிறது. ஒரு பூமியில் ஒருவன் கீரை, நெல், பனை ஆகியவைகளுக்குரிய விதைகளை ஒரே வேளையில் விதைக்கிறான். கீரை சில வாரங்களில் பலன் கொடுத்து விடுகின்றது; நெல் சில மாதங்களில் பலன் கொடுக்கிறது; பனையின் பயன் மூன்றாம் தலை முறைக்குத்தான் கிட்டும். இதை முன்னிட்டே பனை பாட்டனார் காலத்தில் விதைக்கப்பட்டதாக வேண்டும் என்னும் பழமொழி வந்தது. நம் வினைப் பயனும் இத்தகையதே. சில வினைப்பயனை ஜீவன் அதே ஜன்மத்தில் அனுபவிக்கின்றான். வேறு சில வினைப்பயனை அனுபவிக்கப் பின் வரும் பிறவிகளுக்கு அவன் காத்திருக்க வேண்டும்.

**கேள்வி : (96)** **நாம் சொப்பனாவஸ்தையில் இருக்கும் பொழுது ஏற்படுகிற நிகழ்ச்சிகளை மனந்தான் உணருகிறது. ஆனால் தெளிவற்ற நிலைமையில் இருந்து மனம் உணருகிறது. பிறகு ஜாக்கிரதாவஸ்தைக்கு வந்தவுடன் மனம் தெளிவுற்று, கனவில் நடந்த நிகழ்ச்சி எல்லாம் பொய்த் தோற்றம் என்றுதெளிந்து கொள்ளுகிறது. கனவில் தோன்றுகின்ற நிகழ்ச்சிகளில் உள்ள ஜடப் பொருள்கள் வெறும் தோற்றமே தவிர ஸ்பரிசத்துக்கு எட்டும் ஜடப் பொருள் அல்ல. ஆனால் நனவில் தோன்றுகின்ற நிகழ்ச்சிகளில் உள்ள ஜடப்பொருள்களுக்கு தோற்றமும் உண்டு ஸ்பரிசமும் உண்டு. கனவில் காணும் நிகழ்ச்சிகளை நனவிற்கு வந்தவுடன் பொய் என்கின்றோம். அதுபோல நனவில் காணும் காட்சிகளை, எந்தப் பக்குவத்திற்கு போனால் நனவும் பொய் என்கிற உணர்வு தென்படும்? சாஸ்திரங்கள் மூலமாக, நனவுத் தோற்றத்தையும் பொய் என்று உணருகிற ஆற்றல் மனதிற்கு ஏற்படுகிறது என்று அறிகிறோம். அப்படி நனவையும் பொய் என்று தெளிவடையும்பொழுது நனவில் தோன்றுகின்ற ஜடப் பொருள்கள் ஸ்பரிசமும் இல்லாமல் போய்விடுமா?**
**அ. ப.**

ஜாக்கிரதாவஸ்தையில் காணும் பொருள்கள் ஜாக்கிரதாவஸ்தையில் உண்மையானவைகள். தூங்கும் வேளையில் ஸ்பரிசத்தை உண்டு பண்ணினாலும் தூங்கும் ஜீவனுக்கு அந்த ஸ்பரிசம் உண்மையல்ல. விழித்திருக்கும் வேளையில் ஒருவன் நெற்றியில் பொட்டு வைக்கிறோம். அந்த ஸ்பரிச உணர்ச்சி அவனுக்கு உண்டு. தூங்கும் பொழுது பொட்டு வைத்தால் அவன் அதை உணர்வதில்லை. அந்த நிலையில் ஸ்தூல உடலை ஒட்டிய ஸ்பரிச உணர்ச்சி அவனுக்குப் பொய்யாய் விடுகிறது. கனவில் அதே மனிதன் கனவுப் பொருள்களை ஸ்பரிசிக்கிறான். கனவை அவன் நனவு என்று எண்ணுகின்றான். அந்த எண்ணம் இருக்கும் வரையில் அவனுக்குக் கனவே நனவு ஆகிறது. கனவுப் பொருளே உறுதிப் பொருள் ஆகிறது. கனவு நனவைப் பொய்யாக்குகிறது; நனவு கனவைப் பொய்யாக்குகிறது. இப்படி நாள்தோறும் ஒன்று மற்றொன்றைப் பொய்யாக்கும் அனுபவத்தை எல்லா ஜீவர்களும் அனுபவித்து வருகிறார்கள். ஞானிக்கோ கனவும் நனவும் ஒன்றே. இரண்டும் மனங்களின் விகாரங்களாம். மனமற்ற நிலையில் கனவுமில்லை, நனவுமில்லை; ஸ்பரிச உணர்வும் இல்லை. ஆத்ம உணர்வு ஒன்றே மிச்சம். இந்த உணர்வு சுஷுப்தியில் ஒடுங்கியிருக்கிறது. நிறைஞானிக்கோ எந்த நிலையிலும் அது ஒடுங்குவதில்லை. ஜாக்கிரத, சொப்பன, சுஷுப்தி ஆகிய மூன்றையும் கடந்தவன் ஞானி. அவனே மூன்று அவஸ்தைக்கும் அப்பாலுள்ள மெய்ப்பொருளை உணருகின்றான். மற்ற ஜீவர்கள் மூன்றில் ஒன்றன்பின் ஒன்றைப் பெற்று அதில் உழன்று அப்போதைக்குத் தாம் அனுபவிப்பதே மெய்யான நிலை என்னும் மயக்கத்தில் இருந்து வருகின்றனர். இந்த மயக்கத்துக்கு அப்பால் செல்லுவது நமது குறிக்கோள்.

# அண்ணலை அடைந்த அடியார்கள்

## 6. பூர்ண சந்திர கோஷர்

பிரகிருதியில் இயங்கும் சக்திகளுள் ஆகர்ஷணம் என்பது ஒன்று. இயற்கையில் உள்ள பொருள்கள் பரஸ்பரம் வசீகரித்துக் கொள்ளுகின்றன. அதைப்போலவே பரப்பிரகிருதி நிலையில் அதியாச்சரியமானதொரு ஆகர்ஷணம் உள்ளது. ஜீவனுக்கும் சிவனுக்கும் இடையே உள்ள வசீகரமாகும் இது. மகேசுவரன் மனிதனைத் தன்னிடம் இழுத்துக்கொண்டே இருக்கின்றான். கடலிலிருந்து நதி எவ்வளவு தூரத்தில் உற்பத்தியானபொழுதிலும் நதியினுடைய கதி கடலை நோக்கிப் பிரவகித்து இறுதியில் கடலில் சங்கமமாவதுதான். அதேபோல ஜீவாத்மா எனும் இரும்பு பரமாத்மா எனும் காந்த வயப்பட்டு முடிவில் அதனுடன் சேர்ந்து கொள்ளுகின்றது. இந்த ஜீவ — பர ஈர்ப்பு ஓயாததொரு இயக்கம். இந்நிகழ்ச்சியையே நினைவூட்டுவதாகும் கோபி — கிருஷ்ண லீலை. உண்மையில் ஒவ்வொரு பக்தனும் ஒரு கோபியாகின்றான். ஜீவ நாயகிகள் அனைவர்க்கும் ஒரே நாயகன் கண்ணன் என்று உருவகப்படுத்தப்பெற்ற பரமன். அவன் ஏகனே ஆனாலும் அநேகனும் ஆகின்றான். இராஸ லீலையில் கோபிக்கொரு கண்ணனாக அவன் காட்சி தந்ததைப்போல பக்தன் ஒவ்வொருவனுக்கும் அவனவனது இயல்புக்கும் தேவைக்கும் ஏற்பப் பரமன் தன்னைத் தந்துகொள்ளுகின்றான். இவ்வாறு பரமன் வந்துறும்பொழுது பக்தனுடைய ஜீவபோதம் சுருங்கி ஒடுங்கி அவனிடத்துச் சிவபோதம்தலையெடுக்கின்றது. ஆனால்இந்த சிவபோதம் வந்துறுவது எப்பொழுதுமே பிறருக்குப் புலனாகும் வகையில் அமைய வேண்டுமென்ற நியதி இல்லை. ஒரு சிறிது வளர்ச்சியுற்றதுமே பூத்து மலரும் செடிகளும் உண்டு. தமது வளர்ச்சியை யெல்லாம் நீண்டகாலம் உள்ளடக்கிக்கொண்டு கனிவுறும் மரங்களும் உள. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸதேவருடைய பத்தினித் தெய்வமான சாரதாதேவியார் பரஞானத்தைப் பலருக்கும் அள்ளிக் கொடுக்கக்கூடிய அருட்சக்தியாக இருந்தும் வெளிப்பார்வைக்கு சர்வ சாதாரணமான நாட்டுப்புற ஸ்திரீபோலவே இருந்தார். தமது அபாரமான ஞானப்பண்புகள் யாவையும் உள்ளடக்கிக்கொள்ளும் வன்மை சாரதாதேவியிடம் திகழ்ந்ததை அவரை அண்டிய சான்றோர்கள் சிலரே அறிந்து வியந்தனர். பிற்காலத்தில் விவேகானந்தரான நரேந்திரர் இளைஞராக இருந்த பொழுதே இராமகிருஷ்ணரை அடைந்து ஆத்ம சாதனையில் ஈடுபட்டார். அவர் ஒரு சமயம் பரமஹம்ஸதேவரிடம் ஏனைய சீடருக்கு ஏற்பட்ட சில சாதன அனுபவங்கள் (பாவ நிலைகள்) தனக்கு ஏற்படவில்லையே என்று முறையிட்டுக் கொண்டபொழுது பரமஹம்ஸர் யானை ஒன்று ஒரு சிறு குளத்தினுள் இறங்கினால் அந்தச் சிறு குளம் கலக்கப்பட்டுக் குழம்பி விடுகின்றது, ஆனால் அதே யானையானது கடலுக்குள் இறங்கினால் கடல் கலங்கிப் போவது இல்லை, அதுபோலச் சில சாதனானுபவங்கள் ஏற்பட்டதுமே அவற்றைத் தாங்கவொண்ணாது பொங்கி வழியும் இயல்பு சாமானிய சாதகருடையது, ஈசுவர கோடிகளான உத்தமர்களுடைய இயல்போ கடலைப் போன்றது, உணர்ச்சி அலைகள் அவற்றில் இலகுவில் ஏற்படுவதில்லை என்று விளக்கிக் கூறினார். எனவே பாமரமக்கள் செய்வதைப்போல, ஒரு சாதகனுடைய வெளித் தோற்றங்களையும் அடையாளங்களையும் கண்டு அவனுடைய ஞானப்பண்பை அளவிடுவது சரியாகாது.

இராமகிருஷ்ணதேவருடைய நேர்ச் சீடர்களுள் ஒருவரான பூர்ணசந்திரகோஷர் என்பார் மேலே கூறிய உண்மைக்கு நிதரிசனமாயிருந்தார். பல சந்தர்ப்பங்களை முன்னிட்டு அவர் இலௌகிக வாழ்வினை ஏற்றுக் கொள்ளவேண்டியவர் ஆனார். இது அவருடைய இலட்சியத்திற்குச்சிறிதும் பொருத்தமில்லாத ஒரு சூழ்நிலையினை ஆக்கித்தந்தது. ஆனாலும் இறைவன் தன்னை எந்த நிலைமையில் வைத்தானோ அதே ஸ்தானத்தில் இருந்து பணியாற்றிச் சிறப்புற்றார் பூர்ணசந்திரர். அவருடைய பெருமையும் அதியாச்சரியமான அத்யாத்ம மலர்ச்சியும் பலருக்குத் தெரியாமல் மறைந்திருந்தன. ஆனாலும் இராமகிருஷ்ணருடைய அந்தரங்க பக்தர்களுக்குத் தெரிந்திருந்தது அவருடைய அகவுணர்வின் சிறப்பு.



பூர்ணசந்திரருடைய தந்தையாகிய தீனநாதர் என்பார் அரசாங்கத்தில் உயர்ந்ததொரு உத்தியோகம் வகித்தவர். உத்தம குலத்தைச் சேர்ந்தவர். பூர்ணசந்திரருக்குச் சிறுவயதிலேயே அத்யாத்ம உணர்வு மேலிட்டிருந்தது. ஸ்ரீராமகிருஷ்ண கதாம்ருதம் என்ற பெருங்காப்பியத்தின் ஆசிரியரான மகேந்திரநாத குப்தர் தலைவராக இருந்த பள்ளியொன்றில் சேர்ந்து பூர்ணர் படித்து வந்தார். தம்மிடம் படித்த மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதுடன் நின்று விடாமல் அவர்களுள் நல்ல ஸம்ஸ்காரம் உடையவர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களைப் பரமஹம்ஸரிடம் இணக்கம் பெறச்செய்யும் அரும்பணியையும் ஆற்றி வந்தார் மகேந்திரர். பூர்ணர் உறுதியான உடலும் பிரகாசமான நயனங்களும் இனிமையான சுபாவமும் உடைத்திருந்தார். மகேந்திரர் தம்முடைய அருள் வலையில் பூர்ணரையும் பிடிபடுமாறு செய்து அவரைப் பரமஹம்ஸரிடம் கொண்டு சேர்த்துவிட்டார்.

பூர்ண ஞானியான இராமகிருஷ்ணர் முக்காலமும் உணர்ந்தவர். தம்மை வந்தடையவிருக்கும் சீடருடைய அருமை பெருமைகளையெல்லாம், பிற்காலத்தில் அவர்கள் புரியவிருந்த சாதனைகளையெல்லாம், அவர் முன்னாலேயே அறிந்துணர்ந்து கூறுவார். பூர்ணரைப்பற்றி அவர் தமது அந்தரங்கமான அன்பர்களிடம் பகர்ந்ததாவது: "பூர்ணர் ஒரு ஈசுவரகோடி. ஈசுவரகோடிகள் எனப்படுவோர் தலைசிறந்த பக்தர்கள் சங்கமாவர். ஒரு சிறிது முயற்சி செய்ததும் அவர்களுக்குள் அடங்கியிருக்கும் பேரியல்பு மிளிரத் தொடங்குகின்றது. முதலில் காய் உண்டாகிப் பின்னால் பூக்கும் பூசனி, சுரை வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இவர்களுக்கு ஈசுவர சாக்ஷாத்காரம் முதலில் கிட்டிவிடுகின்றது. பின்னால் அவர்கள் சமய சாதனை புரிகின்றனர். பூர்ணரிடத்து நாராயண அம்சங்கள் சில உள்ளன. அவன் சத்துவம் நிறைந்தவன். இந்த இயல்பைப் பொறுத்த மட்டில் அவனை நரேந்திரனுக்கு (விவேகானந்தருக்கு) அடுத்த படியில் நான் வைப்பேன். ஞான வாழ்வினை நாடி என்னை வந்தடையவிருக்கும் சீடர் குழாத்தினுள் பூர்ணரே கடைசியானவன்."

பணிவே வடிவெடுத்தவர் பூர்ணர். பிறர் தமக்கு மரியாதை செய்வதையும் தம்மைப் புகழ்வதையும் அவர் சகிக்கமாட்டார். ஆனாலும் இராமகிருஷ்ண மடத்து சாதுக்கள் அவரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு ஒழுகினர். குருதேவரைப் பற்றியோ அருளன்னை சாரதா தேவியாரைப் பற்றியோ பூர்ணர் அதிகமாகப் பேசமாட்டார். தமது உள்ளம் கவர்ந்த பரமஹம்ஸரை வாய்ச் சொற்கள் மூலம் விளக்கிக் காட்டும் முயற்சி குறைவுடையது என்பது அவரது துணிபு. ஆனாலும் குருதேவருடைய அவதார கைங்கரியம் (ஜீவர்களை உயர் நெறிக்கு மீட்பது) பூர்ணர் மூலமும் நன்கு நடைபெற்றுவந்தது.

மகேந்திரநாதர் பூர்ணருக்கு அடிக்கடி சமயபோதனை செய்து வந்தார். சைதன்ய சரிதாம்ருதம் போன்ற நூல்களைப் படிக்கச் செய்தார். ஒரு நாள் பூர்ணரிடம், "சைதன்யரை ஒத்த மகாபுருஷரொருவரை நீ காண விரும்பினால் என்னுடன் வருவாயாக, நான் அவரிடம் உன்னைக் கூட்டிச் செல்லுவேன்"

என மொழிந்தார் மகேந்திரர். இந்த அழைப்பு பூர்ணரைப் பரவசப்படுத்திவிட்டது. மகாப்பிரபு சைதன்யரைப்போன்றதொரு மகானைக் காணும்பேறு தமக்குக் கிட்டவிருந்ததை எண்ணி பூர்ணர் அகமகிழ்ந்தார்.

மகேந்திரரும் பூர்ணரும் வண்டியொன்றில் தக்ஷிணேசுவர ஆலயம் போய்ச் சேர்ந்தனர். ஆலய வாயிலை அடைந்தபொழுதே பூர்ணருக்கு உணர்ச்சி மேலிட்டது. மகேந்திரரைப் பின்பற்றிச் சென்று அவர் பரமஹம்ஸருடைய சன்னிதியில் நின்றார். அச்சமயம் அவருடைய உள்ளத்தே எழுந்த எண்ணங்களை யாரே வர்ணிக்கவல்லவர்! பரமரக்ஷகரும் பரமகருணா மூர்த்தியும் நரதேவருமான பரமஹம்ஸருடைய முன்னிலையை அடைந்தது அவருடைய ஆத்மாவுக்குப் பூர்ணானந்தத்தைத் தந்தது. எந்த ஒரு பொருளை அடைந்தால் வாழ்வின் சிக்கல்கள் தீர்ந்து சாந்திநிலை கிட்டுகின்றதோ அந்தப் பொருளை அடைந்த பிறகு இனியும் அடையத்தக்கது வேறென்னஉண்டு! பூர்ணர் பரிபூர்ணர் ஆனது போன்று உணர்ந்து பூரித்தார். பரமஹம்ஸரை நமஸ்கரித்தார். அவருடைய அருள் திருஷ்டிக்குப் பாத்திரரானார். தாயினுடைய விசேஷ அன்புக்கு இலக்காகும் கடைசிக் குழந்தையையொப்ப, பரமஹம்ஸருடைய நேர்ச்சீடருள் இறுதிச் சீடரான பூர்ணர் அவருடைய தனி அன்புக்கு உரியவரானார். தாயன்பைவிடத் தக்ஷிணேசுவரப் பெம்மானுடைய அன்பு மிகமிகத் தித்தித்தது. இதைப் பூர்ணர் சுவானுபவமாக உணர்ந்து பேருவகையடைந்தார். வீடுதிரும்ப வேண்டுமென்ற உணர்வுகூட இல்லாதவராய்ப் பரமஹம்ஸ சன்னிதியில் சொக்கிப் போய் உட்கார்ந்திருந்தார். வீடு திரும்பும் நேரம் கடந்துவிட்டதென்பதை மகேந்திரர் இவ்விளைஞருக்கு நினைவூட்ட வேண்டியதாயிற்று. இராமகிருஷ்ணரிடம் சென்ற பல அன்பர்களுக்கு இதே போன்று முதல் சந்திப்பிலேயே அவருடன் வெகு ஆழ்ந்த இணக்கம் ஏற்பட்டு வந்தது. ஆத்மீக உறவின் தன்மையே அலாதியானது. மகாபுருஷர் ஒருவருடைய அண்மையில் வருஷக்கணக்காக வாழ்ந்து வரும் ஒருவன் அதனால் அதிக நற்பயன் எய்தாமல் போவதும் உண்டு. ஒரே தடவை அவரைச் சந்திக்கும் வேறொருவன் ஜன்மஸாபல்யம் பெற்றுய்வதும் உண்டு.

வீடுசென்ற பூர்ணருடைய உடல் இல்லத்தில் இயங்கியபொழுதிலும் அவரது மனம் பரமஹம்ஸருடைய சிந்தையிலேயே ஈடுபட்டுக்கிடந்தது. மீண்டும் தக்ஷிணேசுவரம் செல்ல அவருடைய நாடி நரம்புகள் துடிதுடித்தன. ஆனால் சான்றோர் இணக்கத்தை நாடிய பூர்ணருக்கு அவரது ஆசை நிறைவேறுவதில் விக்கினம் ஒன்று வாய்த்தது. அவரைப் போஷித்த மூத்தோர்கள் அவரைக் கண்டவர்களிடமெல்லாம் பழக்கம் கொள்ளுமாறு விடுக்க மறுத்தனர். மேலும் தக்ஷிணேசுவரப்பெம்மானை ஒரு பித்தரெனவும் பல இளைஞர்களுடைய போக்கை மாற்றியமைத்துக் குடிகெடுக்கும் கேடர் எனவும் கருதிய புல்லியர் கூட்டத்தைச் சேர்ந்தவர் அந்த மூத்தோர்கள். ஆனால் ஜீவ-சிவ இணக்கத்தை, சிஷ்ய--குரு சேர்க்கையைத் தடுக்கும் வன்மை இலௌகிகருக்குக்கிடையாது. ஞானப்பசியுள்ள ஒருவன் எவ்வாற்றானும் சத்குருவைச் சந்தித்துவிடுவான். மேலும் பூர்ணருக்குப் பரமஹம்ஸரைக்காணும் ஆவல் இருந்ததைப்போலப் பன்மடங்கு அதிக ஆவல் பரமஹம்ஸருக்கு பூர்ணரைக் காண்பதில் இருந்தது. 13, 14 ஆண்டுகளே நிரம்பியிருந்த இந்தச் சிறுவனைக் காண்பதற்கென்றே பரமஹம்ஸர் கல்கத்தா நகர்சென்ற நாட்களும் உண்டு. பூர்ணரைக் காணவேண்டுமென்று கண்ணீர் வடிப்பாராம் பரமஹம்ஸர். பகவானே பக்தனைத் தேடிவரும்பொழுது அந்த பக்தனின் பரமபாக்கியத்தை என்னவென்று கூறுவது!

(தொடரும்)

சென்னை அரசாங்கம் நியமித்துள்ள

# ஆரம்பக் கல்விக் குழு

நம் ராஜ்யத்தில் ஆரம்பக்கல்வியை எப்படித் திருத்தியமைப்பது என்பது பற்றி இக்குழு எழுபத்திரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறது. கல்வித்துறையில் கருத்தைச் செலுத்துகின்றவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம் என இக்குழு அறிவித்திருக்கிறது. அக்கேள்விகளில் சிலபகுதிகளுக்கு விடையாகக் கீழே காணும் கருத்துக்களை வெளியிடுகிறோம்:—

1. இரண்டு வயதுமுதல் ஐந்து வயதுவரையில் இருக்கும் சிசுக்களின் (Nursery school) பயிற்சியைப்பற்றிய அபிப்பிராயத்தையும் கல்வித்துறையில் இருப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது அரசாங்கம் இத்துறையில் ஈடுபட வேண்டிய அவசரம் ஒன்றுமில்லை. எந்த இடங்களில் இதற்குத் தேவை ஏற்படுகின்றதோ ஆங்கு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இத்தகைய் பள்ளிக்கூடங்களை நடத்தலாம். அவைகளுக்கு அரசாங்கம் ஆதரவு தரவோ, ஆக்ஷேபனை செய்யவோ முன்வர வேண்டியதில்லை.

2. ஆரம்பப் பாடசாலையில் பலவிதமான தரங்கள் அமையப் பெற்றிருப்பது நம் நாட்டுக்கு முற்றிலும் அவசியமாகிறது. அச்சில் வார்த்தது போன்று ஒரே பாங்கான பள்ளிக்கூடங்களை எல்லா இடங்களிலும் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தை அறவே மறந்துவிடவேண்டும். எத்தனைவிதமான பள்ளிக்கூடங்கள் உரு எடுக்கின்றனவோ அத்தனை விதங்களில் நாட்டு மக்களின் கல்வி வளர்ந்தோங்கும். அதற்கு அரசாங்கம் உற்சாகம் தருவது முற்றிலும் பொருந்தும்.

3. சிறார்க்கு நல்ல பயிற்சி தரவேண்டும் என்று விரும்புகின்ற மக்கள் அதற்குரிய நல்ல பாடசாலைகளை அமைப்பதற்குத்தங்கள் சொந்த ஹோதாவில் வேண்டியவாறு ஊக்கம் காட்டலாம். அரசாங்கத்திடமிருந்து அவர்கள் உதவியை எதிர்பாராதிருப்பது நலம். அப்படி உதவியை எதிர்பார்த்தால் ஒரு சிறிய அளவு உதவியை அரசாங்கத்திடமிருந்து வாங்கிக்கொண்டு பெரும் பகுதியான செலவைத் தாங்களே சமாளித்துக் கொள்ளும் எண்ணம் அவர்களுக்கு இருக்க வேண்டும். சிறுவர்கள் பயிற்சியில் எவ்வளவுக்கு ஆழ்ந்து கருத்து செலுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு நல்ல பலன் கிடைக்கும். பொருள் படைத்திருப்பவர்கள் தங்கள் சொந்தக் குழந்தைகளுக்காவது வேண்டியவாறு செலவு செய்து மேலாம் பயிற்சியைத் தரவேண்டும்.

4. இடைத்தரமான பொருளாதார நிலையில் இருப்பவர்கள் அரசாங்கத்திடமிருந்து உதவியை ஏற்றுக்கொள்ளலாம். அதற்குமேல் தங்கள் கைப்பொறுப்பினின்றும் ஆரம்பக் கல்வியின் பொருட்டுக் கொஞ்சம் பணம் செலவிடுவது முற்றிலும் அவசியமாகிறது. குழந்தைகளுக்குத்தரும் பயிற்சிக்கு எந்தவிதமான இடையூறும் பொருளாதாரத்தை முன்னிட்டு வந்துவிடலாகாது. அதற்கு வேண்டியவாறு பணம் செலவிட முன்வருவதே முற்றிலும் வேண்டப்படுகிறது.

5. பொருளாதாரத்தில் இன்னும் பிற்போக்கில் இருக்கும் பொதுமக்களுடைய ஆரம்பக்கல்விக்கு அரசாங்கம் முழு ஆதரவு தரவேண்டும். ஆனால் தலை சிறந்த பயிற்சியைப் பொது மக்கள் அனைவர்க்கும் தாங்கள் தந்துவிட முடியுமென்று அரசாங்கத்தார் ஆசைப்படுவார்களாகில் அது ஒருநாளும் நிறைவேறப் பெறாத ஆசையாகும். பொது மக்களுக்கு ஏகதேசம் நன்மை பயக்கும் விதவிதமான இயல்புகளையுடைய ஆரம்பப்பாடசாலைகள் ஏராளமாக அமையப்பெறவேண்

டும். தொழிலாளர்களுடைய குழந்தைகள் ஆறு அல்லது ஏழு வயதுக்கு மேல் பள்ளிக்கூடத்துக்குவர ஆரம்பித்தால்போதுமானது. அவர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு மணிநேரம் அல்லது இரண்டுமணி நேரம் முறையாகக் கல்வி கற்றாலும் போதுமானது. ஆரம்பப் பள்ளியில் எண்ணும் எழுத்தையும் ஏகதேசம் தெரிந்து கொள்வதோடு ஏதேனும் ஒரு தொழிலில் நன்றாக உழைக்க அவர்கள் பயிற்சி பெற்றுவிட்டால் அதுவே அவர்களுக்குத் தக்க முன்னேற்றமாகும். பாமரர் முன்னேற்றமடையும் விஷயத்தில் நாம் எதிர்பார்ப்பது இதுவேயாம். இப்பொழுது ஒன்றும் அடையப்பெறாதிருக்கும் பாமரர்க்கு குறைந்தது இவ்வளவு பயிற்சியாவது தந்தே ஆகவேண்டும். இதை நிறைவேற்றி வைக்க அரசாங்கமும், சமுதாயமும் விரைவில் முன்வரவேண்டும்.

6. கிராமங்களில் இருக்கும் ஆரம்பப் பாடசாலை ஒவ்வொன்றுக்கும் கொஞ்சம் சொந்த பூமி இருக்கவேண்டும். அதைப் பள்ளிக்கூடத்துக்குத் தேடிக் கொடுக்க அரசாங்கமும், பொதுமக்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்பூமியினின்று கிடைக்கும் விளைவு பள்ளிக்கூடத்து ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளில் பாதிக்கு மேற்பட்டவர்களுக்கும் உணவு ஊட்டக் கூடியதாய் இருக்கவேண்டும். கல்வியும் தொழிலும் இப்பள்ளிக்கூடங்களில் மாறி மாறி நிகழ்ந்து வரும். உணவு இல்லாக் குறையால் பெரும்பாலர் பள்ளிக்கூடத்துக்கு வருவதில்லை. ஒரு வேளை உணவு கொடுப்பதன் மூலம் பல பேரைப் பள்ளிக்கூடத்துக்கு வரத்தூண்டலாம்.

7. பிள்ளைகளுடைய வளர்ச்சிக்கு விளையாட்டு மிக முக்கியமானது. உணவை விரும்புவதைவிட மிகைபட விளையாட்டை விரும்பும் சிறுவர்கள் இருக்கிறார்கள். விதவிதமான விளையாட்டுகள் மூலமாகச் சிறுவர்களுக்கு நல்ல பயிற்சியையும் கொடுக்கலாம்; நல்ல வளர்ச்சிக்கும் துணைபுரியலாம். மகிழ்வுடன் அவர்களை விளையாடச் செய்வதே ஒரு நல்ல தேசசேவையாகும். பொருள் செலவை மிக உண்டுபண்ணும் வெளிநாட்டு விளையாட்டு வகைகளை ஆரம்பப்பள்ளிகளில் புகுத்தவேண்டிய அவசியமில்லை. செலவில்லாத விளையாட்டே பெரும்பான்மையான ஆரம்பப் பள்ளிகளுக்குப் போதுமானது.

8. மத போதனையைப் புறக்கணிக்குமளவு மக்கள் விலங்கின் நிலைக்குக் கீழ் இறங்குதற்குச் சந்தர்ப்பம் தருவதாகும். மத வெறியைச் சிறுவர்களுக்கிடையில் புகுத்திவிடலாகாது. மனதைப் பண்படுத்தும் மதத்தின் மேலாம் பகுதிகளைச் சிறுவர்களுக்குப் புகட்டுவது முற்றிலும் அவசியம். நீதி போதனை மதபோதனையில் ஒரு சிறிய பகுதியாகிறது. மதங்களுக்கிடையில் வித்தியாசத்தைப் புகட்டாது ஹிந்துமதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாமியமதம், புத்தமதம் ஆகியவைகளை சமரசப்படுத்தியே குழந்தைகளுக்குப் புகட்டலாம். இராமாயணம், மஹாபாரதம் போன்ற இதிகாசங்கள் குழந்தைகளுக்கு எவ்வளவு பெரு நன்மையை விளைவிக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். மத வேற்றுமைக்கு இந்நூல்களில் இடமில்லை.

9. ஆரம்பப் பாடசாலைகளில் பெரும்பான்மையானவைகள் வெட்ட வெளியில், மரத்தடியில் இருக்கலாம். கோயில்களையும் சாவடி, சத்திரங்களையும் பயன்படுத்தலாம். மழையை முன்னிட்டு பள்ளிக்கூடங்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்கள் நம் நாட்டில் மிகக் குறைந்தவை.

10. ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் சிறுவர்களுக்கு உடல் முழுதும் மூடிக் கொள்ளுகிற பாங்கில் உடைகளைக் கொடுத்துப் பழக்கலாகாது. இடுப்பில் ஒரு துண்டு இருந்தால் போதுமானது. புஸ்தகங்களின் தேவையையும் குறைப்பது நலம். மணலில் எழுதவும், கேட்டு மனப்பாடம் பண்ணவும் குழந்தைகளுக்குப் பயிற்சி தரலாம். இத்தகைய சிக்கனமான முறை பொருளாதார இடைஞ்சலை மீளுதற்குத் துணைபுரியும்.



11. கல்வி கற்கும் குழந்தைகள் அனைவரையும் படிப்படியாக மேல்படிப்புக்கு இழுத்துச்செல்ல அவசியமில்லை. ஆரம்பக்கல்வி முடிந்ததும் பெரும் பகுதி மாணுக்கர்கள் தொழிலுக்குப் போய்விடலாம். அதே பாங்கில் ஒவ்வொரு படித்தரத்திலும் வடிகட்டி பெரும்பாலரைத் தொழிலின்கண் பிரவேசிக்கும்படித் தூண்டுவது நலம். இன்றைக்கு உயர் கல்விக்குப்போகும் மக்களில் பெரும்பான்மையோர் நாட்டுக்கு வெறும் தலைச் சுமைகளாக வெறுமனே வாளாவிருக்கிறார்கள்.

12. ஆரம்பப் பாடசாலைகளில் பெரிதும் கணவனும் மனைவியுமாக ஆசிரியர்களாக அமைவது நலம். இன்னும் சில பள்ளிக்கூடங்களில் எல்லோருமே பெண்பாலர்களாக அமைந்துவிடலாம். தனி ஆடவர்களால் நடத்தப்படும் ஆரம்பப்பாடசாலைகள் இருக்கலாகாது.

13. ஆசிரியர் உலகில் முன்னாளில் இருந்ததுபோன்று பண்பாடும், சீலமும் வடிவெடுத்துள்ள ஆசிரியர்களை எவ்வளவுக்கு ஏராளமாக உண்டு பண்ணுகின்றோமோ அவ்வளவுக்கும் தேசத்துக்கு அது ஊதியமாகும். அத்தகைய ஆசிரியர்களை வறுமை எவ்விதத்திலும் வாட்டலாகாது. பெருமிதமான சுக ஜீவனத்தை நாடுகிறவர்களும் ஆசிரியத்தொழிலுக்குத் தகுதியற்றவர்களாகிறார்கள்.

14. அலாதியாக ஒரு ஜாதி அல்லது ஒரு சமயத்துக்குரிய பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் எந்தவிதத்திலும் ஆதரவு கொடுக்காது விட்டுவிடுவது நலம்.

15. ஒவ்வொரு கிராமத்திலும் கல்விக்குரிய குழு ஒன்று அமைவது முற்றிலும் அவசியம். சமுதாய நலத்தின் பொருட்டே அக்குழு பணியாற்றுதல் வேண்டும். அரசியல் பிணக்கு, பொருளாதாரப் போட்டி ஆகியகேடுகள் இக்குழுவினிடத்து நுழைந்துவிடலாகாது. கிராமக் கல்வியின் முன்னேற்றம் பெரிதும் இக்குழுவின் திறமையைப் பொறுத்ததாகும். பள்ளிக்கூட நலத்துக்கென்றே உழைக்கும் குழுவினர்கள் பள்ளிக்கூடத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளலாம். மற்றவர்கள் பள்ளிக்கூடத்துக்குள் நுழையாதிருப்பதே சிறந்தது. சமுதாய நலத்துக்குரிய ஏனைய இயக்கங்களெல்லாம் வேறு எங்கேயோ நிகழலாம். பள்ளிக்கூடத்தின் எல்லைக்குள் அவர்கள் வரலாகாது.

16. இக்காலத்தில் பள்ளிக்கூடத்துக் கட்டிடங்களைத் தேர்தலுக்காக என்று அரசாங்கம் பெரிதும் பயன்படுத்தி வருகிறது. இது பாராட்டத்தக்க செயல் அல்ல. மறைமுகமாகப் பிள்ளைகளின் உள்ளத்தில் இச்செயலின் வாயிலாக அரசியல் பிணக்கு நுழைந்துவிடுகிறது.

17. கல்வித்துறையில் ஆராய்ச்சிக்கழகம் (Educational Research Bureau) பெரு நலனை விளைவித்து விடாது. அதற்காக வென்று பொருளை ஏராளமாகச் செலவிட்டதே கண்ட பலனாகும். அந்தக் கழகத்திற்குப் பதிலாக இடை யிடையே கல்வி மஹாநாடுகள் கூட்டலாம். கல்வியைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் பத்திரிகை ஒன்று அதற்காக அமையலாம். இது குறைந்த பணச் செலவில் அதிகமான பலனைத்தரும்.

18. நம் நாட்டில் எஸ். எஸ். எல். ஸி படிப்புடன் நின்று கொள்கிறவர்கள், இன்டர்மீடியேட் படிப்புடன் நின்று கொள்கிறவர்கள், கல்லூரிப் படிப்பைப் பூர்த்தி செய்கிறவர்கள் ஆகிய மாணுக்கர்கள் எல்லோரும் ஆரம்பக் கல்விக்காக என்று ஓர் ஆண்டு கௌரவ ஆசிரியர்களாக உழைத்தான பிறகே தங்களுக்குரிய பட்டங்களைப் பெற வேண்டும். தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களுக்குக் கீழ் அவர்கள் உழைக்க வேண்டும். தங்கள் உழைப்பின் பயனையும் ஆண்டின் இறுதியில் அவர்கள் நிரூபித்துக் காட்டுவது அவசியமாகும். இம்முயற்சியின் மூலம் குறைந்த செலவில் படிப்பைப் பலர்க்கிடையில் பரப்ப இயலும்.

விவேகானந்த ஸ்வாமிகளின்

# பூப்பிரதக்ஷிணம்

(சக்கரம் 3 – 476ம் பக்கத் தொடர்ச்சி)

புராதன நாளிலே நீரின்மீது பிரயாணம் செய்யும் பொருட்டுப் பெரிய மரமொன்றைத் தீயிட்டுக் குடைந்தோ அல்லது சில மரக்கட்டைகளை ஒன்று சேர்த்து இறுக்கிக் கட்டியோ படகுகளை ஆக்கிக்கொண்டனர். ஓரிஸ்ஸாவிலிருந்து கொழும்பு வரையிலும் கடற்கரையோரமாக உபயோகிக்கப்படும் கட்டை மரங்களைக் கண்டதில்லையா? இந்தக் கட்டை மரங்கள் கடலினுள் எவ்வளவு தூரம் செல்லவல்லவை என்பதையும் பார்த்திருப்பீர்கள். கப்பல் கட்டும் முயற்சியின் மூலாவஸ்தையைக் காட்டுகின்றது இந்தக் கட்டைமரம்.

நீர்க்கலங்களில்தான் எத்தனை வகைகள் உள்ளன! கிழக்கு வங்காளத்துப் படகோட்டிகளின் படகு ஒரு ரகமாகும். அதில் ஏறிக்கொண்டவுடனே பத்திரமாகப் பிரயாணத்தை முடிப்பதற்காக ஆற்றினுடைய ஐந்து அதிதேவதைகளையும் வேண்டிக் கொள்ளவேண்டும்! சிட்டகாங் பிரதேசத்தைச்சேர்ந்த படகோட்டிகள் கையாளுகின்ற வீடுபோன்ற படகு ஒன்றும் உள்ளது. ஒரு சிறு புயல் வீச ஆரம்பித்தாலும்கூட அந்தப் படகை இயக்கும் ஓடமோட்டி இனித் தன்னால் சுக்கானை சமாளிக்கமுடியாது என்று கூறிக் கையை விரித்துவிடுவான்! பிரயாணிகள் யாவரும் தம்தம் இஷ்ட தெய்வத்தை ஸ்மரித்துக்கொள்ளுவதிலேயே கதிமோட்சம் உண்டு என்றும் கூறிவிடுவான்! மேற்கத்தியப் பிராந்தியத்திலே பெரியதொரு தெப்பத்தைக் காணலாம்; அதன் முற்பாகத்தில் விசித்திரமான முறையில் இரு பித்தளைக் கண்கள் பொருத்தப்பட்டிருக்கும்; அதைச் செலுத்திச்செல்லும் துடுப்புக்காரர் நின்றுகொண்டே துடுப்புப் போடுவதைக் காணலாம். இலக்கியத்துறையில் கவிகங்கணர் என்பவர் படகொன்றை வர்ணித்துள்ளார். (ஸ்ரீமந்தன் என்ற வியாபாரி அந்தப் படகில் கடற்பிரயாணம் செய்ததாகக் கதை கூறும். வங்கக்கடலினை அந்த ஸ்ரீமந்தன் துடுப்பின் உதவியாலேயே படகைச்செலுத்திக் கடந்துவிட்டானும். வழியில் நண்டுகள் திரள்திரளாக இருந்தவிடத்தில் அவனது படகு சென்று அவற்றின் ஸ்பர்சினிகளிடையே சிக்குண்டு கவிழ்ந்து யாத்திரிகர்களை மூழ்கடித்துவிடும் போன்ற ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டதாம். கிளிஞ்சிலைப் பார்த்து அதை ஒரு சிறு மீன்வகை என எண்ணினராம். இவ்வாறெல்லாம் கவிகங்கணரின் கதை போகின்றது.) பிறகு கங்காஸாகர் பிரதேசத்தில் ஓடமொன்று உள்ளது. அதன் மேலே அழகானதொரு கூரை இருக்கும், அடித்தலத்தில் மூங்கிற் கூறுகள் பரவப்பெற்றிருக்கும். கங்கா ஜலம் நிறைந்த ஜாடிகள் வரிசை வரிசையாகப் படகினுள் வைக்கப்பட்டிருக்கும். இந்த கங்கா ஜலம் குளிர்ந்து இனிமையுடைத்ததாம். ஆனால் ஒரு விஷயம் மட்டும் கூறவேண்டும். நல்ல குளிர்காலத்தில் கங்காஸாகருக்குச் சென்று பாருங்கள். வடக்கினின்று வீசும் குளிர் காற்று மேலே பட்டதுமே குளிர்ந்தபானம் பருகவேண்டுமென்ற வேட்கையையே அது அடியோடு போக்கிவிடுகின்றது. படகுகளில் இன்னுமொரு வகை யாதெனில் நாடோறும் வங்காள கனவான்களை வீட்டிலிருந்து உத்தியோகசாலைக்கும் பின்னர் திரும்பியும் அவர்கள் இல்லத்திற்கும் இட்டுச் செல்லுகின்ற சின்னஞ்சிறு படகு ஆகும். பாலி என்ற பிரதேசத்தைச்சேர்ந்த படகோட்டிகள்தான் இந்தப்படகினைச்செலுத்தும் வேலையையெல்லாம் கவனித்து வருகின்றனர். இவர்கள் அதி திறமைசாலிகள்! அதிமேதாவிகள்! கோன்னகர் என்றதொரு தூரப்பிரதேசத்திலே வானில் மேகத்தைக் கண்டுவிட்டார்களானால் உடனே புயலும் மழையும் வந்துவிட்டனபோன்று அச்சமுற்றுப் படகினை பத்திரமான ஒரு இடத்திற் கொண்டுபோய்ப் பதுக்கிவிடுவர்! காலத்தின் போக்கில் இந்தப் படகுகளைச் செலுத்தும் தொழில்கூட இவர்கள் கையை விட்டு ஜான்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த உறுதியான தேகக் கட்டுடைய கூட்டத்தினர் கைக்கு மாறி வருகின்றது. இந்த ஜான்பூர்காரர் பேசும் பேச்சோ விசித்திரமானதொரு கொச்சைப் பேச்சு. இவர்களைப் பற்றிய கதை ஒன்றுண்டு. வங்காளச் சீமான் ஒருவர் இந்த ஜான்பூர்காரரிடம் ஒரு சமயம் வேடிக்கையாக, கொக்கு ஒன்றைப் பிடியுங்கள் என்று கட்டளையிட்டார். ஆனால் அவர் பாகவதம் படித்தவராதலால் கொக்கு என்று கூறாமல் இலக்கிய பாணியில் பகாஸுரனைப் பிடித்து வாருங்கள் என்றார். (பாலகிருஷ்ணனைக்கொல்லும் பொருட்டுக் கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரன் ஒருவன் கொக்கு உருவத்தில் வரக் கண்ணன் அவன் வாயைக் கிழித்துக் கொன்றதாக பாகவதக் கதை கூறும்) ஆனால் ஜான்பூர்க்காரர் பாகவதத்தை என்ன கண்டனர்! அவர்கள் மிகவும் பிரமித்துப்போய், "யஜமானே! இந்த அஸுரனை எங்குபோய்க் கண்டுபிடிப்பது! எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்று விண்ணப்பித்தனர்! அப்புறம், இன்னொரு படகினை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்கு கழுதை என்று பெயர். பருத்ததாக அமைந்து மெல்ல மெல்லச் செல்வதுடன் அது ஒரு பொழுதும் நேராக முன் செல்லாது, பக்கவாட்டிலேயே நகரும் தன்மையது. இறுதியாக, ஒன்று முதல் மூன்று பாய்மரங்களைக் கொண்ட பெரிய படகுவகைகள் உள்ளன. இவற்றில்தான் இலங்கை, மால்தீவுகள், அரேபியா முதலான பிராந்தியங்களினின்றும் தேங்காய், பேரீச்சை, உலர்ந்த மீன் முதலியவை இறக்குமதியாகின்றன. இவ்வாறெல்லாம் படகு வகைகள் எத்தனை எத்தனையோ உள்ளன. அவை சொல்லித்தீரா. இவையாவும் கப்பல் கட்டும் ஆக்கத்தின் பிற்கால முயற்சிகளும் விளைவுகளும் ஆகும். (தொடரும்)

# குறிப்புகள்

### ஏசுநாதரைப் போற்றுதல்

உலக ரக்ஷகர்களுக்குள் ஒருவராகிய ஏசுநாதரின் 1955ம் பிறந்ததினம் சிலநாட்களுக்கு முன்பு உலகெங்கும் கொண்டாடப்பட்டது. அவருடைய பெயர் தாங்கியுள்ள மதம் உலகிலுள்ள முக்கியமான மதங்களுள் ஒன்றாகும். நேரடியாக அவருடைய மதத்தைச்சார்ந்துகொள்ள சம்மதிக்காதவர்களுடைய வாழ்க்கைப் பயன் என்ன ஆகும் என்பதைப்பற்றி கிறிஸ்தவமதப் பிரசாரகர்கள் இடையிடையே சர்ச்சை செய்து வருகின்றனர். மற்ற மதங்களைப் புறக்கணித்துவிட்டு கிறிஸ்தவமதத்தில் சேர்ந்து கொள்ளாதவர்களுக்கு விமோசனம் இல்லை என்கின்ற முடிவுக்குத்தான் கிறிஸ்தவமதப் பிரசாரகர்களுள் பலர் வந்திருக்கின்றனர். ஆனால் இதைப் பற்றி ஆரவாரம் ஒன்றும் செய்யாது இந்தியப் பொதுமக்கள் தங்கள் வாழ்க்கையின் மூலமாக விடையளித்து வருகின்றனர்.

மதஸ்தாபகர் எவரையும் புறக்கணிப்பதோ, அலக்ஷியப்படுத்துவதோ இந்திய மக்களின் மனப்பான்மையில் இல்லை. பெருமக்களைப் போற்றுவதே அவர்களுடைய இயல்பு. பல்லாயிரம் ஆண்டுகளாக உலகில் தோன்றியுள்ள பெருமக்களை இந்திய சமுதாயம் போற்றிவந்திருக்கிறது. ஏசுநாதர் இந்தியாவில் பிறந்தவர் அல்ல எனினும் அவரைப்போற்றும் மனப்பான்மை இந்திய மக்களிடத்து அமைதியாக உரு எடுத்து

வருகிறது. புறமத ஸ்தாபகரைப்பற்றி எள்ளி நகையாடும் மனப்பான்மை பொதுவாக ஹிந்து மக்களுக்கிடையில் இல்லை. மதவெறி பிடித்துள்ள யாரோ சிலர் இவ்விதிக்கு விலக்காக அப்போதைக்கப்போது தென்படுகின்றார்கள். பெரும்பாலோருடைய மனப்பான்மை மதஸ்தாபகர்களுக்கு மரியாதை காட்டுவதேயாகும். ஏசுநாதர் சிறிது சிறிதாக ஹிந்துக்களுடைய உள்ளத்தில் இடம்பெற்றுவருகிறார். இதைக் குறித்து கிறிஸ்தவமதப் பிரசாரகர்கள் தங்கள் மதம் இந்நாட்டில் தலை சிறந்தது ஆகப்போகின்றது என்கின்ற எண்ணம் கொள்ளலாம். ஆனால் உண்மை அதுவன்று. ஹிந்துமதம் சிறிதுசிறிதாகக் கிறிஸ்தவமதத்தைத் தன்மயமாக்கிவருகிறது. மதங்கள் அனைத்துக்கும் தாய்மதம் என்று ஹிந்து மதம் பகரப்பெறுகிறது. தாய் ஒருத்திக்கு எல்லாக் குழந்தைகளிடத்தும் சமமான அன்பு உண்டு. நல்ல சமயங்கள் அனைத்தையும் தன்னகத்து எடுத்து அமைத்துக்கொள்ளுதலே ஹிந்து மதத்தின் சீரிய செயலாகப் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. அதேசெயலை என்றென்றும் ஹிந்துமதம் செய்துகொண்டேவரும். எவராலும் அழித்துவிட முடியாத பேராற்றல் ஹிந்து மதத்திற்கு வந்திருப்பது இக்காரணத்தை முன்னிட்டேயாம். நல்லது எதையும் புறக்கணித்து விடுவதில்லை, நல்லதை எல்லாம் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதலே ஹிந்து மதத்தின் இயல்பு.

கிறிஸ்தவர்கள் பகர்கிற பிரகாரம் ஏசுநாதரைக் கடவுளின் ஏகபுதல்வர் என்று ஹிந்துமதம் ஒருநாளும் இயம்பாது. அவதார புருஷர்கள் பலர் உலகில் அப்போதைக்கப்போது தோன்றிக் கொண்டிருப்பது சரித்திர பூர்வமான உண்மையாகும். சர்வேசுவரனுடைய ஆற்றல் அளப்பரியது. தெய்விகப் புதல்வன் ஒருவனைக் கொடுப்பதோடு அவருடைய சக்தி முற்றுப் பெற்றுவிடுகிறது என்றோ, பூர்த்தியாய்விட்டது என்றோ பகர்வது பொருந்தாது. உடல் வளர்ச்சிக்கு விதவிதமான உணவுகள் இருக்கின்றன; அறிவு வளர்ச்சிக்கும் விதவிதமான உபாயங்கள் இருக்கின்றன. அருள் துறையில் முன்னேற்றத்துக்கு மட்டும் கடவுள் ஒரே ஒரு உபாயத்தைக் கொடுத்துள்ளார், அதற்குமேல் தேவையில்லை என்று அவருடைய பெருந்திட்டத்துக்குக் குறுகிய எல்லை போடுவது சான்றோருடைய செயல் ஆகாது; யுக்திக்கும் அது ஒவ்வாது. உலக நடைமுறையில் நாம் காண்கின்ற காட்சியும் அதுவல்ல. மக்களுக்கு முற்றிலும் தேவையாய் இருக்கின்ற அருள் நாட்டத்தை விதவிதமான பாங்கில் மக்களுக்கு எடுத்து வழங்கலாம். அப்போது அவரவர்க்கு உகந்த மத அனுஷ்டானத்தை மக்கள் தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். அதன் பொருட்டே வெவ்வேறு வடிவங்களில் சமய அனுஷ்டானத்தை அமைத்துத் தரும் மதஸ்தாபகர்கள் உலகில் அப்போதைக்கப்போது தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். அப் பெருமக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர் ஏசுநாதர். அவர் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியும் பாரமார்த்திக வாழ்க்கைக்கு நல்ல விளக்கமாகிறது. அவர் இயக்கியுள்ள சமயம் என்றென்றும் உலகில் ஓங்கிவரும். ஆனால் அது மற்றவைகளை யெல்லாம் எடுத்து விழுங்கிவிடும் என்கின்ற குறுகிய மனப்பான்மையை மட்டும் ஹிந்து மதம் எடுத்து விழுங்கி ஜீரணம் செய்துவிடும். ஏசுநாதர் நாளடைவில் ஹிந்து மதத்தில் முக்கியமான ஸ்தானம் ஒன்று பெற்று இலங்கிக்கொண்டிருப்பார்.

**தர்மத்தின் பல படித்தரங்கள்**

சென்ற கார்த்திகை மாதம் தர்மசக்கரத்தில் கள் உண்பதைப் பற்றிய ஆராய்ச்சி என்னும் தலையங்கம் ஒன்றை வெளியிட்டிருந்தோம். அதைக் குறித்து அன்பர்கள் சிலர் தங்கள் கருத்துக்களை நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். தர்மசக்கரத்துக்கு அது உகந்த கட்டுரை அல்ல என்பது சிலருடைய கருத்து. யுக்திக்கு பொருத்தமானதாகத் தென்படுகிற



தென்றாலும் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது கீழ்மையைத் திரும்பவும் சமுதாயத்தில் புகுத்துவதாகும் என்கின்றனர் இன்னும் சிலர். ரிக்வேதத்தில்மதுபானம் இடம் பெற்றிருக்கிறது என்றாலும் தமிழர் சமயம் அதற்கு ஆதரவு அளிக்காது என்பது இன்னும் சிலருடைய கருத்து. சுத்த வேதாந்த விசாரத்தை தர்மசக்கரம் எடுத்துக்கொள்ள வேண்டும், இதுபோன்ற சமுதாயப் பிரச்னைகளை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பது வேறு சிலருடைய கருத்து.

தர்மத்தில் பல படித்தரங்கள் இருக்கின்றன. ஒருவிதத்தில் பள்ளிக்கூடப் படிப்புக்கு அது ஒப்பானது. மூன்றுவயதுக் குழந்தைக்குப் பள்ளிக்கூடம் வைத்தால் பள்ளிக்கூடத்திலேயே சிறிது நேரம் தூங்குதற்கும் குழந்தைகளுக்கு வசதி செய்தாகவேண்டும். அப்பொழுதுதான் அது குழந்தைகளுக்கு உகந்த பள்ளிக்கூடமாகிறது. ஆனால் உயர்தரப் பள்ளியிலோ, கல்லூரியிலோ மாணக்கர்கள் தூங்கிக் கொண்டிருப்பதற்கு எவ்விதத்திலும் இடந்தரலாகாது. குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் செய்து வைக்கும் சில வசதிகள் முதிய மாணக்கர்களுக்கு அகப்படாது தடுத்துவிட வேண்டும். முரண்படுகின்ற இவ்விரு செயல்களும் கல்வித் திட்டத்தில் இடம் பெறுகின்றன. தர்மத்தில் பல படித்தரங்கள் இருக்கின்றன. மிகத் தலையாயது யதி தர்மம். அதை ஒட்டியிருக்கிறது மோக்ஷ தர்மம். அதினின்று படிப்படியாக தர்மம் கீழே இறங்கி வருகிறது. ராஜதர்மம் என்பது பொது மக்களின் நலத்தின் பொருட்டு அமைந்தது. இனி, நீதி தர்மமென்றும், ஆபத்துத் தர்மம் என்றும், நோயாளிக்குரிய தர்மம் என்றும் இன்னும் பல பகுதிகள் தர்மத்தின்கண் அடங்கியிருக்கின்றன. வேதாந்த விசாரத்தில் இத்தனைக்கும் இடமுண்டு.

நல்ல வைத்தியசாலையில் எல்லாவிதமான நோய்களுக்கும் சிகிச்சை முறை இருப்பது போன்று வேதாந்த தர்சனம் வாழ்க்கை சம்பந்தமான எல்லாவிதமான பிரச்னைகளையும் தன்னகத்து அடக்கி வைத்திருக்கிறது. பகல் கனவு காண்பது போன்று குகைக்குள் இருந்து கொண்டு வெறுமனே கண்மூடி தியானம் பண்ணுவது ஒன்று மட்டும் வேதாந்தம் ஆய்விடாது. தியானம் பழகுதல் வேதாந்தத்தில் இடம் பெற்றிருக்கிறது. வாழ்க்கைக்குரிய விதவிதமான செயல்களும் பழக்கவழக்கங்களும் அதே வேதாந்தத்தில் இடம் பெற்றிருக்கின்றன. யுத்தம்புரிய வேண்டிய அவசியம் ஏற்படுமிடத்து அதை முறையாகப் புரிந்தே ஆகவேண்டும் என்று வேதாந்தம் புகட்டுகின்றது. தர்மத்தை நிலைநாட்டுதற்பொருட்டுப் பாட்டனையும், ஆசாரியரையும் கொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அச்செயலையும் முறையாகச் செய்து முடிக்கவேண்டும் என்று வேதாந்தம் புகட்டுகின்றது.

கள் குடியைப் பற்றிய பிரச்னை தர்மத்தோடு சம்பந்தப்பட்டதா அல்லது சம்பந்தப்படாததா என்கின்ற கேள்வி எழுகின்றது. எம்முறையில் அதைப் பயன் படுத்தினால் தர்மமாகிறது, எம்முறையில் அதை உட்கொண்டால் அதர்மமாகிறது என்கின்ற கோட்பாடு சாஸ்திரோக்தமானது. நமது சாஸ்திரங்களில் அதற்கான சான்றை வேண்டியவாறு காணலாம். தர்மசம்பந்தமான கேள்விகள் அனைத்துக்கும் தர்மசக்கரத்தில் இடமுண்டு.

மனிதனைக் கீழ்மைப்படுத்துவது தர்மமாகாது. படிப்படியாக மனிதனைமேல்நிலைக்குக் கொண்டுபோவதே தர்மமாகின்றது. உடல் பற்று வைத்திருக்கும் மனிதன் உடல் சம்பந்தமான துன்பங்களைப் போக்குதற்கும், உடல் சம்பந்தமான இன்பங்களைப் பெறுதற்கும் முயன்றுவருகின்றான். அப்படி முயலுகின்ற மனிதர்களுக்கு நல்வழியைக் காட்டித் தருவதே தர்மமாகும். அவனால் கையாள முடியாத தீவிரமான நெறிகளைப் பாமரன் மீது பலவந்தமாகத் திணிப்பது பொருந்

தாது. முதிய மாணாக்கர்களுக்கு பள்ளிக் கூடத்தில் தூங்குவதற்கு இடமில்லை. ஆனால் சிறுவர்களுக்கு அத்தகைய வசதியைச் செய்து கொடுத்தே ஆகவேண்டும். தர்ம அனுஷ்டானமும் அத்தகையது. மேலோர்க்குரிய ஞான நெறியை அதை அனுஷ்டிக்க இயலாத பாமரர் மீதும் திணித்துவிட்டால் அதன் மூலம் அவர்களுக்கு நன்மையை விடக் கேடே மிகவும் அதிகரித்துவிடும். சான்றோர்கள் இவ்வுண்மைகளை யெல்லாம் அறிந்து சீர்திருத்தத்தை மிக எச்சரிக்கையாக அமுலுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

மக்கள் இயல்பு உலகெங்கும் ஒரேவிதமானது. உண்பது, உறங்குவது, இன்பத்தை நாடுவது போன்ற இயல்பு எல்லார்க்கும் பொதுவானது. மக்களிடத்துள்ள பொது இயல்புகளை விளக்குவது ரிக் வேதம். அந்த அளவில் அது பொதுநூல். இன்றைக்கு மேல் நாட்டு மருத்துவ சாஸ்திரத்தில் உடல் தத்துவத்தை விளக்குதற்கு Gray's Anatomy என்னும் நூல் ஒன்று இருக்கிறது. இது தமிழருடைய சித்தவைத்தியத்துக்கு ஒத்ததா என்னும் கேள்வியைக் கிளப்பினால் அது பரிகாசத்துக்குரிய கேள்வியாகும். ரிக் வேதம் தமிழருடைய கூற்றுக்கு ஒத்ததா என்கின்ற கேள்வியும் அது போன்றது. இந்தக் குறுகிய மனப்பான்மையை ஒதுக்கி வைத்துவிட்டு மானுட இயல்புக்கு ஏற்றதா, மானுட முன்னேற்றத்துக்குத் தகுந்ததா, இது போன்ற பரந்த பாங்கில் போகும் ஆராய்ச்சிகளே வேண்டப்படுபவைகள் ஆகின்றன. மனிதனுடைய நலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் ஏதுவான எல்லாக் கேள்விகளும் தர்மசக்கரத்தில் இடம் பெறும்.

158815

# செய்திகள்

## நிகழ்ந்தவை

டிசம்பர் மாதம் 26ம் தேதியன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவன உயர்நிலைப் பள்ளி மாணவர்களால் ஏசுநாதர் பிறந்ததினம் கொண்டாடப் பெற்றது. அவருடைய திருவுருவப்படம் கூடத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டது. ஏசுநாதர் நாம பஜனை பண்ணப்பட்டது. பைபிளினின்று ஏசுநாதர் போதனை வாசித்து விளக்கப்பட்டது. அவருடைய ஜீவிதத்தைப் பற்றிச் சிலர் பேசினார்கள். பக்தி விசுவாசத்துடன் விழா நிறைவேறியது. ஜனவரி மாதம் 2ம் தேதி தஞ்சாவூர் பெரியகோவிலில் இராஜராஜ சமய சங்கத்தின் சார்பில் 'இராமன் செய்தது குற்றமா?' என்னும் தலைப்பின் கீழ் சமயச் சொற்பொழிவு ஒன்று ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகளால் நிகழ்த்தப்பட்டது. 5ம் தேதியன்று விவேகானந்த வித்யாவன மாணவர்களால் வைகுண்ட ஏகாதசி அனுஷ்டிக்கப்பட்டது. நாள் முழுதும் உபவாசம் இருந்து அவர்கள் 24 மணி நேரம் அகண்ட நாமபஜனை செய்தார்கள். அது பகவத்கீதா உபதேச தினமாதலால் அன்று ஸ்ரீமத் பகவத்கீதை பாராயணமும் நடந்தேறியது.

## நிகழ்பவை

ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள் ஜனவரி மாதம் 16ம் தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும் ஸ்ரீ விவேகானந்த ஜயந்தி விழாவில் சொற்பொழிவாற்றுவார்கள்; 19ம் தேதி ராமநாதபுரத்தில் நடைபெறும் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் குருபூசையில் கலந்து கொள்வார்கள்; 25ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி முதல் 8-30 மணி வரை மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில் கல்யாண மண்டபத்தில் தாயுமானவர் பாடல் விரிவுரை நிகழ்த்துவார்கள்; 27ம் தேதி சேலம் ஜில்லா பாண்டமங்கலத்தில் பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி தேவஸ்தானத்தில் இரவு 9 முதல் 10-30 மணி வரை 'நலம்தரும் சொல்' என்னும் பொருள்பற்றி சமயச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்; 28ம் தேதி பொள்ளாச்சி மாரியம்மன் கோவில் புதுக்கல்யாண மண்டபத் திறப்பு விழாவை நடத்திவைப்பார்கள்; 29ம் தேதி திருச்சி, தென்னூர் ஹிந்துபிரசாரசபையில் மாலை 5 முதல் 6 மணிவரை 'கலையும் பண்பும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்; 30ம் தேதி திருச்சி மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில் மாலை 6 மணி முதல் 7-30 மணி வரை தாயுமானவர் பாடல் விரிவுரை நிகழ்த்துவார்கள்; பிப்ரவரி மாதம் 3ம் தேதி சிவகாசி, சாத்தூர் முதலிய இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் சொற்பொழிவாற்றுவார்கள்; அன்று இரவு விருதுநகரிலும் சமயச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்துவார்கள்; 6ம் தேதி சேலம் ஸ்ரீ சங்கர ஆஸ்ரமத்தில் அந்தர்யோகமும் மாலை கீதா உபந்யாசமும் நிகழ்த்துவார்கள்.

தபோவனத்தில் பிப்ரவரி 27ம் தேதி ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழா கொண்டாடப் பெறும். அது சம்பந்தமான விவரங்கள் அடுத்த இதழில் வெளியாகும். பிப்ரவரி 28ம் தேதி, மார்ச் 1, 2 தேதிகள் ஆக இந்த மூன்று தினங்களிலும் தபோவனத்தில் அந்தர்யோகம் நடைபெறும். விவரம் இவ்விதழிலே பொருளடக்கத்தின் பின்புறம் தரப்பெற்றுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண

# தபோவனப் பிரசுராலயம்

திருப்பராய்த்துறை போஸ்ட், திருச்சி ஜில்லா

## எங்கள் கிளை விற்பனை நிலையங்கள்

எமது பிரசுரங்கள் அன்பர்களுக்கு எளிதில் கிடைப்பதற்காக முக்கியமான இடங்களில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். இதுவரை ஏற்படுத்தப் பெற்ற நிலையங்களாவன :

1. அசோக் பவன், ஜங்ஷன் ரோடு, திருச்சி.
2. ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில், கோணமண்டபம், மலைக்கோட்டை, திருச்சி.
3. ஸ்ரீ ச. சு. நடராஜ நாடார், 51, அம்மன் சந்நதி, மதுரை.
4. ஸ்ரீ T. ராமலிங்கம் பிள்ளை, கதர் ஸ்டோர்ஸ், கடைவீதி, பொள்ளாச்சி.
5. பாரத் கேப், பவானி.
6. ஸ்ரீ ராமலக்ஷ்மண & கோ., அருணாசல ஆசாரித்தெரு, சேலம் டவுன்.
7. சண்முகவிலாஸ் புக்ஸ்டால், ஸ்ரீ சுப்ரமண்யசுவாமிகோயில், திருச்செந்தூர்.
8. தேவஸ்தான யாத்ரீகர்கள் விடுதி, பழனி.
9. ஸ்ரீ A. S. K. சங்கரலிங்க நாடார், வியாபாரம், விருதுநகர்.
10. 'ஸ்ரீ ராமகிருஷ்ண நிலையம்' 90, சேதுராஜாத் தெரு, தூத்துக்குடி.
11. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1/140, பிராட்வே, சென்னை-1.
12. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மடம், கதிர்காமம், சிலோன்.
13. ஆத்மஜோதி நிலையம், நாவலபித்தியா, சிலோன்.
14. ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், 70, நெல்லுக்காரத்தெரு, காஞ்சீபுரம்.
15. ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், பசுவங்குடி, பெங்களூர்—4.
16. C. G. ராமாநுஜம் செட்டியார் சன், மேல சன்னதி, சிதம்பரம்.
17. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், ராமகிருஷ்ண மிஷன் ரோடு, கொளும்பு-6, சிலோன்.
18. காந்தி ஆசிரம காதிபந்தர், கடைவீதி, சேலம்.




கிரௌன் சைஸ் 210 பக்கங்களையுடைய இந்நூலின் : விலை ரூ. 2-0-0
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனப் பிரசுராலயம்
திருப்பராய்த்துறை போஸ்ட் : திருச்சி ஜில்லா

Edited by SWAMI CHIDBHAVANANDA,
Printed & Published by Br. RAMBDU at Tapovanam Press, Tiruppalathurai, Tiruchi Dt.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.